# இலத்தீன் அமெரிக்காவில்

## தேசிய இன முரண்பாடுகள்



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

**இலத்தீன் அமெரிக்காவில்**
**தேசிய இன முரண்பாடுகள்**
ஐங்கரன் விக்கினேஸ்வரா
முதற்பதிப்பு: 2024 ஆனி
© ஐங்கரன் விக்கினேஸ்வரா
வடிவமைப்பு : க.பரணீதரன்
வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
பக்கம்: 100
விலை: 500.00
அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Ilatheen Amerikavil**
**Thesiya Ina Muranpadukal**
Ainkaran Wigneswara
First Edition: 2024 June
© Ainkaran Wigneswara
Layout : K.Bharaneetharan
Published by Jeevanathy, Kalai aham, Alvai
Pages: 100
Price: 500.00
Printed at Baranee Printers, Nelliady.
ISBN : 978-955-0958-92-4

ஜீவநதி வெளியீடு - 363

சமர்ப்பணம்




## வைத்திய கலாநிதி கதிரேசு முருகதாஸ் காந்தி

மலர்வு: 16.12.1966 உதிர்வு :14.10.2018

(மாஸ்கோ லுமும்பா மருத்துவ பீட பழைய மாணவர்)

# பொருளடக்கம்

1. மப்புச்சே வன அழிப்பை தடுக்கும் பூர்வகுடிகள்
2. போர்ட்டோ ரிக்கோ - இரண்டாந்தர பிரஜைகளாக
3. நிக்கரகுவா புரட்சியின் விளைவு
4. கொலம்பியா ஆறு தசாப்த ஆயுத மோதல்
5. குவாத்தமாலா - இடதுசாரி பாதையில் பயணம்
6. பிரேசில் - புதிய தலைமையும் வன்முறையும்
7. ஆர்ஜென்டினா குத்தாட்டம் போடும் அதிபர்
8. கியூபா சோவியத் ஏவுகணை நெருக்கடி
9. இலத்தீன் அமெரிக்காவில் இடதுசாரி
10. வெனிசுலால் - ஹியுகோ சாவேஸ் ஆளுமை
11. பொலிவியா சே குவேராவின் இறுதிக் கணங்கள்
12. ஜமேக்கா காலத்தை வென்ற பொப் மார்லி
13. அமெரிக்க கறுப்பின உரிமை

# அணிந்துரை

## தென் அமெரிக்க சாமானிய மக்களின் போராட்டங்கள் பற்றிப் பேசும் நூல் !

மானுட வரலாறு போராட்டங்களால் நிறைந்தது. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான போராட்டம், மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான போராட்டம், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான போராட்டம் என அது காலங்காலமாக நடைபெற்று வருகின்றது. தக்கென பிழைக்கும் என்ற கூர்ப்புத் தத்துவத்துக்கு ஒப்ப வல்லவன் எவனோ அவனே வெற்றி பெற்றவன் ஆகிறான்.

இயற்கைக்கும், விலங்குகளுக்கும் எதிரான மனிதனின் போராட்டம் தவிர்க்க முடியாத ஒன்று. அது நிகழ்ந்தே ஆக வேண்டியது. ஆனால் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான போராட்டம் அவசியமானதுதானா?

விலங்குகளோடு விலங்காக மனிதன் வாழ்ந்த காலத்தில் மனிதனின் போராட்டம் உணவுத் தேடலுக்காகவும், தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான தாகவும் அமைந்திருந்தது. சமூகமாக வாழத் தொடங்கிய பின்னர் ஏனைய சமூகங் களில் இருந்து தற்காத்துக் கொள்ள மனிதன் போராட வேண்டியிருந்தது. நிலவுடமைச் சமூகத்தில் அரசுகள் தோற்றம் பெற்ற பின்னர் ஏனைய அரசுகளை வெற்றி கொள்ள மனிதன் போர்களில் ஈடுபட்டான். மனிதனை மனிதன் அடிமைகள் ஆக்கினான்.

அடிமைகளைப் பண்டங்களாகக் கருதி அவர்களை விற்பனை செய்து பணம் சம்பாதிக்கும் அளவுக்கு மனிதனின் பேராசை எல்லை கடந்து சென்றது.

இயற்கையோடு இயைந்து, இயற்கையை நேசித்து, இயற்கையோடு கலந்துறவாடி வாழ்ந்த மனிதன் இயற்கையை விட்டு விலகி வெகுதூரம் சென்று தனக்கென அனைத்தையும் தேடிக் கொண்டான். அறிவியல் வளர்ச்சியும் அதன் விளைவான கைத்தொழில் புரட்சியும் மனித சமூகத்தை அசைக்க முடியாத இன்றைய நிலைக்கு இட்டுச் சென்றிருப்பதை நாம் அறிவோம்.

ஆனாலும், இயற்கையை நேசிக்கும், இயற்கையோடு இயைந்து வாழும்

மனிதர்கள் இவ்வுலகில் முழுவதுமாக இல்லாமல் போய்விடவில்லை. பழங்குடி மக்கள் என வகைப்படுத்தப்படும் அவர்கள் இன்றைய உலகின் சகல மூலை களிலும் வாழ்ந்த வண்ணமுமே உள்ளனர். யாருக்கும் தீங்கு இழைக்காமல் வாழ விரும்பும் அவர்களை நவீன உலகின் கொடுங்கரங்கள் விட்டு வைக்கவில்லை.

பொருள் ஈட்டுவதற்கான நவீன வாழ்வியல், இயற்கை வளங்களைக் கொள்ளையிட வேண்டிய தேவையை ஏற்படுத்தி வைத்திருக்கின்றது. அதற்காக, இயற்கை வளங்களுக்குக் காவலாக யார் யார் இருக்கிறார்களோ அவர்களை முடிந்தால் அப்புறப்படுத்த வேண்டும் அல்லது அழிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குகின்றது. இந்த முயற்சியில், இயற்கையின் காவலர்களாக உள்ள பழங்குடி மக்களே முதல் பலியாக ஆகும் நிலை உள்ளது.

இயற்கையோடு இயைந்து, எளிமையான வாழ்க்கை வாழும் பழங்குடி மக்களால் வலிமையான அரசாங்கங்களை எதிர்க்க முடியுமா? அத்தகைய அரசாங்கங்களின் முழுமையான ஆசீர்வாதத்தோடு களமிறங்கும் பன்னாட்டு நிறுவனங்களோடு போராடி வெல்ல முடியுமா? முடியாது என்று தெரிந்து கொண்ட பின்னரும் ஓர்மத்தோடு போராடும் பழங்குடி மக்களின் வாழ்வியலை, அவர்களின் போராட்டத்தைப் பதிவு செய்யும் ஒரு முயற்சிதான் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் இந்தக் கட்டுரைத் தொகுப்பு.

அதே சமயம் நவீன காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிரான எதிர்ப்பையும், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்களின் தகவல்களையும் அவர் பதிவு செய்துள்ளார். வலதுசாரிக் கொடுங்கோன்மை ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆயுதங்களை மாத்திரமன்றி இடதுசாரி, பொதுவுடமைக் கருத்தையும் கையில் ஏந்த வேண்டிய நிலையில் தென்னமெரிக்க மக்கள் உள்ளனர் என்பதையும் அவர் சமரசமின்றி பதிவு செய்துள்ளார்.

“நாடுகாண் பயணம்” என்ற பெயரில் ஐரோப்பியர்களால் உலகெங்கும் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத படையெடுப்புகள் அந்த நாடுகளில் வாழ்ந்த மக்கள் மீது இழைத்த குற்றங்கள் வரலாற்றில் கறுப்புப் பக்கங்களாக உள்ளன. தமது கடந்தகாலத் தவறுகளைப் பெருமையாகக் கருதும் அந்த நாடுகளின் ஆட்சித் தலைவர்கள் தற்காலத்திலும் ஏதோவெரு வழிமுறையின் ஊடாக அவற்றைத் தொடர்வதற்கு, அந்த நாடுகளின் இயற்கை வளங்களைக் கொள்ளையிடுவதற்கு முனைப்புக் காட்டிய வண்ணமுயே உள்ளனர்.

சொந்த மண்ணில் நடைபெறும் இத்தகைய கொடுமையை எதிர்ப்பதில் தேசபக்தி கொண்ட மக்கள் துணிகரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இதுவே இன்றைய உலகின் போக்காகவும் உள்ளது.

“இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்” என்ற தலைப்பிலான இந்தக் கட்டுரைத் தொகுப்பு அமெரிக்காவின் கொல்லைப் புறம் என வர்ணிக்கப்படும் தென் அமெரிக்காவில் நடைபெற்ற சாமானிய மக்களின்

போராட்டங்கள் பற்றிப் பேசுகின்றது.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை பன்னாட்டு அரசியல் தொடர்பிலான அவர்களது அக்கறை வெகு சொற்பமே. அது தொடர்பில் அவர்கள் பெரிதும் அலட்டிக் கொள்வதில்லை. ஊடகங்கள் கூட பன்னாட்டு அரசியல் விவகாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதில்லை. அது தொடர்பில் எழுதுகின்ற ஊடகர்களும், பத்தி எழுத்தாளர்களும் கூட தமிழில் வெகு சொற்பமானோரே.

ஆனால், ஈழப் போராட்டம் பன்னாட்டு அரசியல் தொடர்பான ஒரு புதிய வாசலைத் திறந்து வைத்தது. அதன் பிற்பாடே ஈழத் தமிழர்கள் உலக அரசியலில் ஓரளவேனும் அக்கறைப் காட்டத் தொடங்கினார்கள். புதிய பத்தி எழுத்தாளர்கள் உருவாகினார்கள்.

நூலாசிரியர் ஐங்கரன் விக்னேஸ்வரா பன்னாட்டு அரசியல் தொடர்பில் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருக்கும் ஒருவர். வாரத்துக்கு ஐந்து, ஆறு கட்டுரைகளையேனும் எழுதிவிடும் ஆற்றல் கொண்டவராக அவர் உள்ளார். அதற்கான தேடல், வாசிப்பு என்பவற்றுக்கு அவரால் நேரம் ஒதுக்க முடிகின்றது. உண்மையில் இது ஒரு சாதனையே.

இந்த நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் தென்னமெரிக்க நாடுகளில் நிலவும் அரசியல் சூழலையும், மக்கள் போராட்டங்களையும், அவற்றின் பின்னணியையும் ஓரளவு அறியத் தருகின்றன.

30 ஆண்டு காலமாக இன விடுதலைக்காகப் போராடிய ஈழத் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டிய அரிய தகவல்கள் பல இந்தக் கட்டுரைத் தொகுப்பில் உள்ளன. ஒவ்வொரு ஈழத் தமிழரும், குறிப்பாக அரசியல் பின்புலம் கொண்ட யாவரும் வாசிக்க வேண்டிய நூல் இது.

புத்தக வாசிப்புப் பழக்கம் இன்றைய உலகில் அருகி வருகின்றது என்பது ஒன்றும் இரகசியமான செய்தி அல்ல. ஆனாலும், அச்சுப் பதிப்பு நூல்கள் தொடர்ந்தும் வெளிவரவே செய்கின்றன. நூல்களை இணையத்தில் தரவிறக்கம் செய்து வாசிக்கும் அல்லது ஒலி வடிவில் கேட்கும் வசதி வந்துவிட்டாலும் புத்தகத்தைக் கையில் எடுத்து வாசிக்கும் போது கிட்டும் சுகானுபவம் அலாதியானது. எனவே, அச்சுப் பதிப்பு நூல்களின் வருகை நின்றுபோய் விடாது என்பது என் போன்றோரின் திடமான நம்பிக்கை.

நண்பர் ஐங்கரன் விக்கினேஸ்வரா தொடர்ந்தும் எழுத வேண்டும், நூல்களை வெளியிட வேண்டும். அதனால் தமிழ்கூறும் நல்லுலகம் பயன்பெற வேண்டும் என வாழ்த்துவதில் பெருமை அடைகிறேன்.

**தோழமையுடன்**
**சண் தவராஜா**
**ஊடகர், எழுத்தாளர் சுவிஸ்.**

# என்னுரை

## ஒடுக்கப்படும் மக்களின் உரிமைக்காக போராடும் இலத்தீன் அமெரிக்கா!

காலனித்துவ சுரண்டலுக்கு உள்ளான இனங்கள் இன்னமும் தங்கள் இன விடுதலையை வலியுறுத்தி போராடி வருகின்றன. இத்தகைய போராட்டங்களை எதிர்க்க ஏகாதிபத்திய நலனுக்காகவே மக்களுக்கு எதிரான அரசுகளும் சர்வாதிகாரிகளும் பல்வேறு நாடுகளில் உருவாக்கப்படுகின்றன.

வரலாற்றை திரும்பிப் பார்த்தால், பனிப்போரின் உச்சக்கட்ட காலத்தின் போதும், இலத்தீன் அமெரிக்காவில் தொடர்ச்சியான இடதுசாரி அரசாங்கங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஏன்எனில் ஒடுக்கப்படும் மக்களின் உரிமையை வேண்டி அவர்கள் குரல் கொடுத்தனர் என்பதேயாகும்.

உலகெங்கும் ஏகாதிபத்திய நலனுக்காக ஒடுக்கப்படும் பூர்வகுடி மக்களும், தேசிய இன மக்களும் தங்கள் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் இன்னமும் போராடி வருகின்றனர். குறிப்பாக இத்தகைய விடுதலை உரிமை போராட்டங்களை வல்லாதிக்க நாடுகளின் நலனுக்காக அந்தந்த நாடுகளில் இருக்கும் அரசுகள் ஒடுக்கிவருவது பன்னெடுங்காலமாக தொடர்ந்து வருகிறது.

அந்த அரசுகளை கொண்டே உரிமைகளுக்காகப் போராடும் மக்களை அடக்கி ஒடுக்குவதும் இனப்படுகொலைகளை நிகழ்த்துவதும் வல்லாதிக்கங்களால் திட்டமிட்டு நடத்தப்படுகிறது நாம் கண்ட வரலாறாகும்.

இத்தகைய அரசாங்கங்கள் பிராந்தியத்தில் அதன் புவிசார் மூலோபாய ஆர்வத்தின் ஒரு பகுதியாக ஏகாதிபத்திய அரசாங்கங்களால் நிதியுதவி செய்யப்பட்ட எதிர்ப்புரட்சி சதிகளை எதிர்கொண்டன.

வரலாற்று ரீதியாக இவற்றில 1954 குவாத்தமாலா ஆட்சிக்கவிழ்ப்பு, 1964பிரேசிலிய ஆட்சிக்கவிழ்ப்பு, 1973 சிலி ஆட்சிக்கவிழ்ப்பு மற்றும் 1976 ஆர்ஜென்டினா ஆட்சிக்கவிழ்ப்பு ஆகியவை இலத்தீன் அமெரிக்காவில் ஏகாதிபத்திய - வல்லரசு சதித் திட்டங்களால் நிகழ்த்தப்பட்டன என்பதும் உலகறிந்ததே.

1960 - 1970 களின் காலகட்டங்களின் போது, இலத்தீன் அமெரிக்க

நாடுகளில் ஜனநாயக நடைமுறைகள் மிகவும் பலவீனமாக இருந்தது. மக்களின் தேர்தல் வழிப்பட்ட தீர்ப்புகளுக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளின் இராணுவங்கள் மதிப்பு அளித்தது இல்லை என்பதும் வரலாறே.

தற்போது இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டு வரும் சமூக கட்டமைப்பு மாற்றங்கள் அரசியல் சித்தாந்த மாற்றங்களுக்கும் இதற்கு வித்திடுகிறது. மக்கள் தொகையில் பெரும்பாலானோர் நகரப் பகுதிகளில் வாழ்ந்து வருவதும், நகரக் கட்டமைப்புகள் அதி வேகமாக வளர்ந்து வருகின்றன.

தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக 20 ஆம் நூற்றாண்டு வர்த்தகப் பரிமாணங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 21ஆம் நூற்றாண்டில் பல புதிய வளர்ச்சிப் பரிமாணங்களின் தோற்றத்திற்கு வித்திட்டுள்ளன. 21 ஆம் நூற்றாண்டில் பிற்பகுதியில் பொதுவாக, இராணுவம் மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிப்பதோடு, இடையூறுகள் எதுவும் பாரியளவில் செய்வதில்லை.

இலத்தீன் அமெரிக்காவில் உள்ள 12 க்கும் அதிகமான நாடுகளில் ஜனநாயக தேர்தல் முறை மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடதுசாரி அரசாங்கங்கள் தற்போது ஆட்சிப் பொறுப்பில் உள்ளன. எதற்காக இலத்தீன் அமெரிக்க நாடுகள் இடதுசாரி பாதையில் தொடர்ந்து முன்னேறுகின்றன என்பது அமெரிக்காவிற்கு வியப்பாக இருப்பினும், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசுகள் இவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் 2020 மே மாத இறுதியில் அமெரிக்காவில் நிறவெறியை வெளிச்சத்திற்கு இட்டுச் சென்ற "கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்" (Black Lives Matter) BLM ஏற்படுத்திய அதிர்வலை இன்னமும் அடங்கவில்லை. பல வருடங்கள் கடந்தும் இப்போரட்டம் இன்னமும் ஓயவும் இல்லை.

கருப்பின மக்களின் வாழ்வும் - வரலாறும் அமெரிக்காவின் உண்மையான ஜனநாயகம் என்பதனை சோதனைக்கு உட்படுத்தும் விடயமாகும். அமெரிக்க காவல் துறைக்கும், கருப்பினத்தவருக்கும் இடையிலான மோதல்கள் அமெரிக்க சமூகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் ஊடுருவியியுள்ள ஆழமான, அமைப்பு ரீதியான இன ஏற்றத்தாழ்வுகளின் அடையாளமாகவும் விளங்குகிறது.

இதேவேளை அமெரிக்காவில் ஒடுக்கப்படும் பூர்வகுடி மக்கள் இன்னமும் தங்களுடைய உரிமைகளுக்காக போராடி வருகின்றனர். உதாரணத்திற்கு தென் அமெரிக்க நாடான ஆர்ஜென்டினாவை ஒட்டிய சிலி நாட்டின் தெற்கு பகுதியில் வாழும் பூர்வகுடி "மப்புச்சே" இனம். இந்த மக்கள் தங்கள் தேசிய இன விடுதலையை வலியுறுத்தி இன்றும் போராடி வரும் மக்களாக அறியப்படுகிறார்கள்.

இத்தகைய போராடும் இனங்களின் வரலாற்று ரீதியிலான தரவுகளை மையப்படுத்தி, இலத்தீன் அமெரிக்காவில் இன்று நிகழ்வுறும் போராட்டங்களை மையப்படுத்தி எழுதிய கட்டுரைத் தொகுப்பான "இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்" எனும் நூல் 1990 களில் இருந்து "சர்வதேச வரலாற்றுப்

பார்வையில் தேசிய இனமுரண்பாடுகள்” எனும் தொடர் தலைப்பில் நான் எழுதிய கட்டுரைகள் ஐரோப்பிய, தாயக பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியாகின. இக்கட்டுரைகளின் இரண்டாவது பாகமே இந்நூலாகும். இந்நூலாக்கத்தில் பயணித்த அனைவருக்கும் மிக்க நன்றிகளுடன்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# மப்புச்சே – வன அழிப்பை தடுக்கும் பூர்வகுடிகள்

**சிலி நாட்டில் தேசிய இன விடுதலையை வேண்டிடும்...**

**மப்புச்சே மக்களின் பூர்வீகத்தை மீட்கும் போராட்டம்...**



*சிலி நாட்டின் தெற்கு பகுதியில் வாழும் பூர்வகுடி "மப்புச்சே" (Mapuche) இனம். இந்த மக்கள் தங்கள் தேசிய இன விடுதலையை வலியுறுத்தி இன்றும் போராடி வரும் மக்களாக அறியப்படுகிறார்கள். ஆதிக்க, ஆக்கிரமிப்பு சுரண்டலுக்கு உள்ளான ஒரு இனம், இன விடுதலையை வலியுறுத்தி இன்றும் போராடி வருகிறார்கள்.*

**பூர்வீகத்தை மீட்கும் போராட்டம் :**

*மப்புச்சே மக்கள் மொத்த சிலி நாட்டின் மக்கள் தொகையில் 11% இவர்கள் உள்ளனர். மப்புச்சே இனமக்கள் சிலி நாட்டில் தெற்கில்*

“பயோ பயோ” ஆற்றை எல்லையாகவும், மேற்கே பசிபிக் பெருங் கடலையும், கிழக்கே அர்ஜென்டினா நாட்டு எல்லையையும் கொண்டு “அரௌகேனியா பகுதியில்” (Araucania Region) வாழ்கின்றனர்.

விவசாயம் இவர்களுக்கு அடிப்படை பொருளாதாரமாக இருக்கின்றது. இவர்கள் மட்டுமின்றி இம்மண்ணின் பிற பூர்வகுடி மக்களான அய்மாரா, பாலிநேசியன், ரபானுய் இன்னும் பல பூர்வகுடி மக்களும் சிலி நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.

சிலி மற்றும் அர்ஜெண்டாவில் வாழ்கின்ற மப்புச்சே மக்களின் கலாச்சாரம் என்பது கி.மு 500 அல்லது 600 க்கு முன்பானது என்று அகழ்வாராய்ச்சிகள் குறிப்பிடுகின்றன.

**ஒடுக்கப்படும் பூர்வகுடி மக்கள் :**

காலனித்துவ சுரண்டலுக்கு உள்ளான ஒரு இனம் இன விடுதலையை வலியுறுத்தி இன்றும் போராடி வருகின்றது. ஏகாதிபத்திய நலனுக்காகவே மக்களுக்கு எதிரான அரசுகளும் சர்வாதிகாரிகளும் பல்வேறு நாடுகளில் உருவாக்கப்படுகின்றன.

அந்த அரசுகளை கொண்டே உரிமைகளுக்காகப் போராடும் மக்களை அடக்கி ஒடுக்குவதும் இனப்படுகொலைகளை நிகழ்த்துவதும் வல்லாதிக்கங்களால் திட்டமிட்டு நடத்தப்படுகிறது

உலகெங்கும் ஏகாதிபத்திய நலனுக்காக ஒடுக்கப்படும் பூர்வகுடி மக்களும், தேசிய இன மக்களும் தங்கள் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் போராடி வருகின்றனர். குறிப்பாக இத்தகைய விடுதலை உரிமை போராட்டங்களை வல்லாதிக்க நாடுகளின் நலனுக்காக அந்தந்த நாடுகளில் இருக்கும் அரசுகள் ஒடுக்கிவருவது பன்னெடுங்காலமாக தொடர்ந்து வருகிறது.

**ஸ்பானிய படையெடுப்பும் காலனித்துவமும்:**

ஸ்பானியர்களின் வருகைக்கு முன்பு மப்புச்சே மக்கள் உழவு, நெசவு தொழிலும் செய்து சுய பொருளாதாரத்துடன் வாழ்ந்துள்ளனர். ஸ்பானிய படையெடுப்பின் போது ஸ்பானியர்களை மப்புச்சே இனக்குழு மக்கள் மூர்க்கமாக எதிர்த்தனர்.

சுமார் மூன்று நூற்றாண்டுகளாக சிலி நாடு ஸ்பானிய காலனியாக இருந்தது. 16 ம் நூற்றாண்டில் ஸ்பானியர் வருகையின் போது மப்புச்சே மக்கள் சிலி நாட்டின் தெற்கே “இட்டாடா” மற்றும் “டோல்டன்” ஆற்று பள்ளத்தாக்குகளில் வாழ்ந்து வந்தனர்.

இதர பூர்வகுடிகளான “ஹோலிச்சி” மற்றும் “குன்கோ” இனத்தினர் நாட்டின் தெற்கில் வாழ்ந்து வந்தனர். “சிலியோ




*அர்ச்சிபெலகோ" (Chilleo archipelago) என்று இவர்கள் அழைக்கப் பட்டார்கள்.*

*"தேய்க்குள்ச்சி" என்ற இனத்தினர் சிலர் மப்புச்சே மொழியை யும் கலாச்சாரத்தையும் ஏற்றுக்கொண்டு தங்களை "அரௌகேனியர் களாக" அடையாளப்படுத்தி கொண்டனர். ஸ்பானிய காலனியாதிக்க காலத்தில் மப்புச்சே மற்றும் ஸ்பானியர்கள் இனக்கலப்பால் உருவான சந்ததியினர் "மெஸ்டிசோ" என்று அழைக்கப்படுகின்றனர்.*

**சொந்த மண்ணிலே உரிமை மறுப்பு:**

*சொந்த நிலத்திலேயே மப்புச்சே மக்களின் குடியுரிமையும், தேசமும் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. அவர்களுக்கான உரிமை மறுக்கப்பட்டது. அம்மக்களின் மொழிக்கும் கலாச்சாரத்திற்கும் சிலி அரசு எந்த அங்கீகாரமும் வழங்கிடவில்லை.*

*இன்றுவரை தங்கள் இன உரிமைக்காகவும் நிலத்திற்காகவும் சிலி மற்றும் அர்ஜென்டினாவில் மப்புச்சே மக்கள் போராடி வருகின்றனர். அரௌகேனியா நிலப்பரப்பில் வாழ்ந்து வந்த இவர்கள் ஸ்பானிய காலனி ஆதிக்கத்தின் வரலாற்றில் அரௌகேனியான்கள் (Araucanians) என்று அழைக்கப்பட்டனர்.*

*"அரௌகேனியான்கள்" என்ற சொல்லாடல் இன்று இழி சொல்லாக மாற்றப்பட்டுள்ளது.*

*17 முதல் 19 ஆம் நுற்றாண்டு வரை மப்புச்சே மக்கள் சிலர் கிழக்கு நோக்கி ஆண்டெஸ் மற்றும் பம்பாஸ் என்ற பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர்.*

*அங்கே வாழ்ந்த "போய" மற்றும் "பேயெஞ்சே" பூர்வகுடி*

களுடன் உறவு ஏற்படுத்தி கொண்டனர். பம்பாஸ் பகுதியில் வாழ்ந்த வேறு சில இனக்குழுக்களான பேயெஞ்சே, ராஇங்குயில் மப்புச்சே மக்களுடன் இணைந்துக்கொண்டனர்.

ஸ்பானிய காலனியத்தில் இருந்து சிலி விடுதலை பெற்றதை தொடர்ந்து 19 ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் ஐரோப்பிய மற்றும் "மெஸ்டிசோ" சிலியர்கள் மப்புச்சே மக்கள் வாழ்ந்து வந்த அரௌகேனியா பகுதியை ஆக்கிரமிக்க தொடங்குகின்றனர்.

**காலனி ஆதிக்கத்தில் மக்கள் படுகொலை :**

ஸ்பெயின் காலனிய தங்கச்சுரங்க பணியில் வேலை செய்த மப்புச்சே மக்கள் பலர் இறந்துபோனார்கள். ஸ்பெயின் காலனி அரசு தங்கள் படைகளில் மப்புச்சே மக்களை இணைத்து போரிட வைத்தனர். இதனால் மப்புச்சே மக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துபோனது.

ஸ்பெயின் காலனித்துவத்திற்கு பின்னர், மப்புச்சே இனத்தினர் வாழ்ந்து வந்த வளமான நிலத்தை அபகரிக்கவும், அந்நிலங்களில் விவசாய உற்பத்தியை பெருக்கிடவும் சிலி அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. 19 ஆம் நூற்றாண்டில் காலனிய காலத்திற்கு பின்னர் சிலி நாட்டின் பணப்பயிர் தொழிலுக்கான நிலப்பரப்பு விரிவடைய தொடங்கியது.

இச்சூழலில் மப்புச்சே மக்கள் வாழும் வடக்கு அரௌகேனியா நிலப்பரப்பில் இன்றளவும் நில ஆக்கிரமிப்பு சண்டைகளும், வன்முறைகளும் சிலி அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகிறது. மேலும், மப்புச்சே மக்களின் பாரம்பரிய கல்வி முறைகளும் அரசினால் ஒழிக்கப்பட்டுவிட்டது.

**காடுகள் அழிப்பும் நில அபகரிப்பும்:**

வரலாற்று ஆசிரியர்களின் தகவற்படி அரசின் நில அபகரிப்பு கொள்கை, பஞ்சம், நோய் தொற்று போன்ற காரணங்களால் மப்புச்சே இன மக்கள் தொகை ஐந்து லட்சத்தில் இருந்து வெறும் இருபத்தி ஐந்தாயிரமாக சுருங்கி போனதாக குறிப்பிடுகின்றார்கள். இதனால் எண்ணற்ற மப்புச்சே மக்கள் தங்கள் சொந்த நிலத்தைவிட்டு அகதி களாக வெளியேறி வேறு இடங்களுக்கு இடம்பெயரும் அவலம் ஏற்பட்டது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில், குறிப்பாக பிரேசில், காடுகளை அழித்து பணப்பயிர்களை வளர்க்கும் பெருநிறுவனங்களின் வேட்டைக்காடாக மாறியுள்ளது. இக்காடுகளில் வாழ்ந்து வரும்




*தொல் பழங்குடியினரை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தும் பணி களை அந்நாடுகளின் மேற்குலக சார்பு அரசுகள் செய்து வருகின்றன.*

*இதற்கு எதிராக பல இடங்களில் பழங்குடி மக்கள் போராடி வருகின்றனர். மரங்களை வெட்டி ஏற்றுமதி செய்யும் பெருநிறு வனங்கள் சிலியின் ஆயிரக்கணக்கான ஏக்கர் வால்டிவியன் காட்டு நிலப்பரப்பு அழித்துள்ளனர். அந்நிலத்திற்கு ஒவ்வாத அந்நிய மரங்களான சவுக்கு மற்றும் தைல மரங்களை பயிர் செய்கின்றனர்.*

**சிலியில் இயற்கை கனிம வளம் :**

*சிலியில் குவிந்திருக்கும் இயற்கை கனிம வளங்களை குறிவைத்து வந்த ஸ்பானிய காலனிய வரலாற்றை தொடர்ந்து விடுதலை பெற்ற சிலியின் அதிகார வர்க்கம் தீவிர முதலாளித்துவத்தை ஆதரித்து வந்தது.*

*3 ஆண்டுகளான தைல மரம் நாளொன்றுக்கு 20 லிட்டர் நிலத்தடி நீரை உறிஞ்சிவிடுகிறது.*

*மேலும், இம்மரங்களை வளர்க்க ஏராளமான இரசாயன உரங்களை கொட்டி நிலத்தை மலடாக்குவதாக மப்புச்சே மக்கள் குமுறுகின்றனர்.*

*இப்படியாக வளர்க்கப்படும் மரங்கள் சீனா, ஜப்பான், அமெரிக்கா, இத்தாலி மற்றும் உலகெங்கும் ஏற்றுமதியாகின்றது.*

*தங்கம், தாமிரம் சுரங்கள், மீன் பிடி தொழிலை அடுத்து சிலியின் பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பு செய்திடுவது சிலியின் காடு அழிப்பு தொழில் தான். சிலி அரசின் துணையுடன் பெரு முதலாளிகள் தங்கள் நிலங்களை ஆக்கிரமிப்பதை எதிர்த்து மப்புச்சே*

மக்களும் போராடுகின்றனர். பன்னாட்டு முதலாளிகளின் வியாபாரத்திற்காக நடைபெறும் வனஅழிப்பை தடுத்திட “ஸ்டான்ட் எர்த் குரூப்” (Stand Earth Group) என்ற வன பாதுகாப்பு அமைப்பு சிலியின் வனப்பொருட்கள் வர்த்தக கொள்கைகளை மாற்றக்கோரி உலகளாவிய பிரச்சாரத்தை மேற்கொண்டது.

**சர்வாதிகார அதிபர் அகஸ்டோ பினோச்சே:**

சிலி நாட்டின் முன்னாள் ராணுவ சர்வாதிகார அதிபர் அகஸ்டோ பினோச்சே (Augusto Pinochet 1973 - 1990) மப்புச்சே மக்களின் போராட்டத்தை ஒடுக்க தீவிரவாத தடுப்பு சட்டத்தை இயற்றினார்.

அந்த சட்டத்தை பயன்படுத்தி இன்றைய அரசும் போராடும் மப்புச்சே மக்களை ஒடுக்கி வருகிறார்கள். போராடி வரும் மப்புச்சே மக்களின் மீது தீவிரவாத பாதுகாப்பு சட்டம் பிரயோகப்படுத்துவதை யும், போராட்டத்தின் நிலவரத்தை கண்டறிய ஐ.நா மன்றம் பென் எமெர்சன் என்ற அதிகாரியை சிலி நாட்டிற்கு அனுப்பி வைத்தது. அவர் ஆய்வு செய்து சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் தீவிரவாத தடுப்பு சட்டத்திற்கு எதிராக ஐ.நா மன்றம் தனது கண்டனத்தை ஜீலை 2013 ல் பதிவு செய்தது.

தங்கள் பூர்வீக நிலத்தை சிலி அரசிடம் இருந்து மீட்டு தங்களிடம் ஒப்படைக்க வேண்டும். அந்த பகுதிகளை தன்னாட்சி பிரதேசமாக அறிவித்திட வேண்டும் என்பதே மப்புச்சே மக்களின் கோரிக்கையாக உள்ளது.

**மப்புச்சே இன விடுதலைக்காக போராடும் அமைப்பு :**

மப்புச்சே இன விடுதலைக்காக போராடும் “குவார்டினடோரா அறவுக்கோ மல்லேக்கோ” (Coordinadora Arauco Malleco CAM ) எனும் அமைப்பாகும். இதன் தலைவர் 53வயதான எக்டர் லைட்டுள் (Hector Llaitul ) கல்லூரி மாணவராக இருந்த காலம் முதலே இடதுசாரி அமைப்புகளுடன் இணைந்து இயங்கி வருபவர்.

இவர் அகஸ்டோ பினோச்சே சர்வாதிகார அரசுக்கு எதிராக போராடியவர். 1998ல் மப்புச்சே தலைவர்களுடன் இணைந்து CAM போராட்ட அமைப்பை தோற்றுவித்தார். இந்த அமைப்பானது மப்புச்சே மக்களின் நிலங்களை, அரசு மற்றும் அரசின் ஆதரவு பெற்ற பெருநிறுவனங்களிடம் இருந்து மீட்பதை பிரதான கோரிக்கையாக முன்நிறுத்துகின்றது.

எக்டர் லைட்டுள் பலமுறை சிலி அரசாங்கத்தினால் தீவிரவாதி முத்திரை குத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். தீவிரவாத




செயல்களில் ஈடுபட்டதாக 2017 ல் கைது செய்யப்பட்டார். இவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அனைத்தும் சிலி ராணுவத்தால் கூறப்பட்ட பொய் குற்றச்சாட்டுகள் என நிரூபிக்கப்பட்டு ஓராண்டு சிறை வாசத்திற்கு பிறகு விடுதலையானார்.

**வன அழிப்பை எதிர்த்து போராட்டம்:**

CAM அமைப்பு வனஅழிப்பை செய்திடும் பெருநிறுவனங்களின் ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்திட அந்நிறுவனங்களின் ரயில் மற்றும் சாலை போக்குவரத்தை தடுப்பது, தொழிற்சாலை எந்திரங்களை சேதப்படுத்துவது என முதலாளிகளுக்கும் அவர்களின் அரசுக்கு எதிராகவும் மூர்க்கமாக போராடி வருக்கின்றனர்.

அதே நேரம், CAM அமைப்புக்கு எதிராகவும், மப்புச்சே இன மக்களுக்கு எதிராகவும் சிலி அரசு தனது காவல்துறையையும், ராணுவத்தையும் ஏவி அவர்களின் நியாயமான போராட்டத்தை அடக்கி ஒடுக்கி வருகிறது.

**மப்புச்சே பழங்குடிகளின் போராட்டம்**

2018 ல் மாப்புச்சே இன தலைவர்களில் ஒருவரின் பேரனை, 24 வயதே நிரம்பிய விவசாய இளைஞனை, ட்ராக்ட்டரில் செல்லும் போது காவல்துறையினர் பின்புறமிருந்து சுட்டு கொன்றனர். அந்த இளைஞனுடன் பயணம் செய்த 15 வயது சிறுவனை கைது செய்து அடித்து துன்புறுத்தினர். இந்த சம்பவம் மாப்புச்சே மக்களிடையே கடும் கொந்தளிப்பை உருவாக்கியது.

இது போன்ற பல அடக்குமுறைகளை எதிர்கொண்டாலும்

இந்த குறிப்பிட்ட சம்பவம் அவர்களின் போராட்டத்தை தீவிரப் படுத்தியது. படித்த மப்புச்சே இளைஞர்கள் தங்கள் பூர்வீக நிலங் களையும் தன்னாட்சி பிரதேச உரிமையையும் பெருவது மட்டுமே இதற்கான தீர்வாக அமையும் என்று உறுதியாக நம்புகின்றனர்.

தங்கள் போராட்டத்தின் ஒரு பகுதியாக மீட்டெடுத்த பூர்விக நிலங்களில் “இது மீட்கப்பட்ட நிலம்” என்று அறிவிப்பு பலகைகளை வைத்துள்ளனர். அவ்வாறு மீட்கப்பட்ட நிலங்களில் மின்சாரம், தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வரு கின்றனர்.

மீட்கப்பட்ட நிலங்கலிலிருந்து அம்மக்களை அரசு தனது இராணுவத்தை கொண்டு அடித்து விரட்டுவதும் அரங்கேறி வருகிறது. அரசின் இந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்சிடாமல் அம்மக்கள் மீண்டும் அதே நிலத்தை கைப்பற்றி அங்கே குடியேறி வருகிறார்கள். இப்படியாக தொடர்ந்து நடைபெற்று வருவதால் ஒரு கட்டத்தில் இராணுவம் சோர்வுற்று வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது.

**ஆயுதம் தாங்கிய போராட்டம் :**

தற்பொழுது, மப்புச்சே இன உரிமைக்கான ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் பல்வேறு புதிய இளைஞர் குழுக்களும் இறங்கி யுள்ளன. இந்த புது குழுக்கள் செய்யும் வன்முறைகளை ஊயுஆ மீது பழி சுமத்தி அரசு சிலி மக்களிடையே பிரச்சாரம் செய்தும் வருகிறது.

உலகெங்கிலும் போராடும் இயக்கங்கள் போன்றே எக்டரின் தலைமையிலான ஊயுஆ இயக்கமும் பல்வேறு ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளது. இவை அனைத்தும் அதிகார வர்கத்தி னால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் வழக்கமான பொய் பிரச்சாரங் களே ஆகும்.

சிலி அரசின் குற்றச்சாட்டுகள் பற்றிய கேள்விக்கு பதிலளித்த எக்டர், “இத்தகைய குற்றச்சாட்டுகள் விடுதலை போராட்ட இயக்கங்கள் மீது அதிகார ஊடகங்களால் வைக்கப்படுவது வழக்க மான செயல் தான். ஆனால், எங்கள் இயக்கத்தை பொறுத்தவரை அது பொய் குற்றச்சாட்டு என்பதை இயக்கத்தின் தலைவர் என்கிற முறையில் நான் உறுதியாக கூறுவேன்” என்றார்.

**சமத்துவ சமூகம் உருவாக வேண்டும் :**

மப்புச்சே மக்களின் விடுதலை, மப்புச்சே நாட்டில் ஒரு சமத்துவ சமூகம் உருவாக வேண்டும் என்பதே எக்டரின் கனவாக உள்ளது.

*2019ல் சிலி தலைநகரில் மக்கள் மெட்ரோ ரயில் கட்டண உயர்வுக்கு எதிராகவும், வளர்ந்து வரும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிராகவும் கடுமையான தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்த தொடர் போராட்டத்தின் வெற்றியாக செபஸ்டியன் பினேராவின் அரசாங்கம் வெளியேற்றப்பட்டது.*

*இதனையடுத்து நடந்த தேர்தலில் பெண்கள் அமைப்புகள், பூர்வகுடி மக்களின் உரிமைக்காக போராடும் அமைப்புகள், முற்போக்கு இடதுசாரி அமைப்புகள், மாணவர் அமைப்புகள் என பல்வேறு அமைப்புகளின் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. இவர்கள் தங்கள் முதன்மை பணியாக இராணுவ சர்வாதிகாரி பினோச்சேவின் ஆட்சியில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பை திருத்துவதாக முடிவெடுத்திருக்கிறார்கள். இந்த மாற்றத்தை மேற்கொள்வதற்காக சிலியில் வாழும் அனைத்து மக்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப் பட்டுள்ளது.*

*இந்த அரசியலமைப்பு திருத்தம் மப்புச்சே மக்கள் கோரும் விடுதலைக்கு வழி வகுத்திடுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அதன் முடிவு எவ்வாறாக இருந்தாலும் மப்புச்சே மக்களுக் கான ஒரே தீர்வாக அம்மக்களின் விடுதலைக்காகப் போராடும் அமைப்புகள் முன்வைப்பது தனிநாடு என்பதே ஆகும். இந்த தீர்வுக்கான இலக்கை நோக்கிய மப்புச்சே மக்களின் பயணம் தொடரும் என்பதில் ஐயமில்லை!*

*பல அடக்குமுறைகளை எதிர்கொண்டதாலேயே அவர்களின் போராட்டத்தை தீவிரப்படுத்தியது. மப்புச்சே இளைஞர்கள் தங்கள் பூர்வீக நிலங்களையும் தன்னாட்சி பிரதேச உரிமையையும் பெருவது மட்டுமே இதற்கான தீர்வாயக அமையும் என்று உறுதியாக நம்புகின்றனர்.*

## போர்ட்டோ ரிக்கோ – இரண்டாந் தர பிரஜைகளாக:

### அமெரிக்க ஆதிக்கம் தொடரும் கரீபியன் தீவு..

### போர்ட்டோ ரிக்கோ சுதந்திர வாக்கெடுப்பு..




அமெரிக்க நிர்வாக ஆதிக்கம் தொடரும் கரீபியன் தீவான போர்ட்டோ ரிக்கோ சுதந்திர வாக்கெடுப்பு பல காலங்களாக நடாத்தப்பட்டது. ஆயினும் இதுவரையில் "லத்தீன்களின்" உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை விட முக்கியமான புவிசார் அரசியல் நிலைகளின் மீதான கட்டுப்பாடு வாஷிங்டனுக்கு மிகவும் முக்கியமானதாகும். அதற்கு இசைவாகவே அமெரிக்கா தனது புவிசார் இராணுவ மூலோபயங்களை வகுத்துக் கொண்டுள்ளது என்பதே உண்மையாகும்.

போர்ட்டோ ரிக்கோ (Puerto Rico) சுதந்திர வாக்கெடுப்பு பற்றிய

*தீர்மானம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் நவம்பர் 2020 நிறைவேறியது.*

*அதிக சுய-அதிகாரத்திற்கான போர்ட்டோ ரிக்கோவின் இயக்கம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் ஊக்கம் பெற்றுள்ளது. மூன்று சாத்தியமான எதிர்காலங்கள் குறித்த வாக்கெடுப்புக்கான மசோதாவை நிறைவேற்றியுள்ளது. இருப்பினும் இந்த நடவடிக்கை செனட்டால் எடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு போல தெரிகிறது.*

**அமெரிக்க ஆதிக்கமும் ஆக்கிரமிப்பும் :**

*அமெரிக்க உச்ச நீதிமன்றம் போர்ட்டோ ரிக்கோ 1869ஆம் ஆண்டில் அரசியலமைப்பு மாநிலங்கள் ஒருதலைப்பட்சமாக பிரிந்து செல்ல அனுமதிக்கவில்லை என்று தீர்ப்பளித்ததும் நினைவில் கொள்ள வேண்டும்.*

*அடிமை முறையை ஆதரித்த ஆறு தென் மாநிலங்களின் அமெரிக்க யூனியனிலிருந்து வெளியேறியதன் மூலம் தொடங்கிய உள்நாட்டுப் போருக்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டது.*

*அரசியலமைப்புச் சட்டம் தடை செய்யாதவற்றின் அடிப்படையில் மாநிலங்கள் விட்டுச் சென்றன.*

*அலாஸ்கா மற்றும் ஹவாய் கடைசியாக 1959 இல் 49 வது மற்றும் 50 வது மாநிலங்களாக அமெரிக்காவில் இணைந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.*

**ஸ்பானிஷ் காலனித்துவ வரலாறு :**

*இந்த போர்ட்டோ ரிக்கோவில் 400ஆண்டுகளாக ஸ்பானிஷ் காலனி இருந்தது. கிறிஸ்டோபர் கொலம்பஸ் நவம்பர் 19, 1493 இல் தீவில் இறங்கினார். இங்குள்ள பழங்குடி மக்கள் டைனோ இந்தியர்கள், அவர்கள் ஸ்பானிஷ்- அமெரிக்க ஆக்கிரமிப்பினால் எல்லா இடங்களிலும் பரவலாக அழிக்கப்பட்டனர்.*

*படிப்படியாக, போர்ட்டோ ரிக்கோ ஸ்பானிஷ் காலனித்துவ வளர்ச்சியின் அனைத்து நிலைகளிலும் அடிமைப்பட்டு சென்றது. மிகப்பெரிய வர்த்தக துறைமுகம் இருந்தும் வளர்ச்சி வாய்ப்புகள் இல்லாமல் கைவிடப்பட்ட தீவாக மாறியது.*

*பின்னர் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில், போர்ட்டோ ரிக்கோ அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. ஆனால் இது மக்களின் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவரவில்லை. மீளவும் அடிமைப்பட்டே இருந்தனர்.*




*1952 வரை, போர்ட்டோ ரிக்கோ அமெரிக்க இராணுவ நிர்வாகத்தின் கீழ் இருந்தது. ஆயினும் உள்ளூர்வாசிகளின் 20ஆம் நூற்றாண்டில் தங்கள் சுதந்திரத்திற்கான நீடித்த போராட்டத்தை கைவிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.*

**இரண்டாந் தர பிரஜைகளாக !**

*மார்ஷல் தீவுகள் மற்றும் மைக்ரோனேஷியாவைப் போலவே, முழு சுதந்திரம் பெற்று அல்லது மாநிலம் முறையான அமெரிக்காவுடன் இணைந்து இறையாண்மை பெற கட்டுப்பாடான வாக்கெடுப்புக்கான விதிமுறைகளை போர்ட்டோ ரிக்கோ விரும்பியது.*

*கரீபியன் தீவான இங்குள்ள குடியிருப்பாளர்கள் அமெரிக்க குடிமக்கள் ஆவர். ஆனால் அவர்கள் இரண்டாந் தர பிரஜைகளாக காங்கிரஸில் வாக்களிக்கும் பிரதிநிதித்துவம் இல்லை மற்றும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க முடியாது.*

**1898 இல் சுயாட்சி பிரதேசமாக போர்ட்டோ ரிக்கோ :**

*சுமார் 3.3 மில்லியன் மக்கள், அதிகமானோர் வறுமை வாழ்வை கொண்ட போர்ட்டோ ரிக்கோ, 1898 இல் அமெரிக்க பிரதேசமாக மாறியது. பல தசாப்தங்களாக மாநில அந்தஸ்து உட்பட அதிக சுயநிர்ணயத்திற்காக அங்குள்ள மக்கள் போராட்டம் செய்தனர்.*

*1960 களில் இருந்து தலைப்பில் ஆறு வாக்கெடுப்புகள் நடந்தும், அமெரிக்க காங்கிரசால் மட்டுமே மாநில அந்தஸ்து வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டது.*

**ஆறாவது வாக்கெடுப்பு :**

*நவம்பர் 3, 2020 அன்று பொதுத் தேர்தலுடன் இணைந்து போர்ட்டோ ரிக்கோவின் நிலை குறித்த வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. இதற்கு முன்பாக மே 16, 2020 அன்று போர்ட்டோ ரிக்கோ கவர்னர் வாண்டா வாஸ்குவேஸ் கார்செட் அவர்களால் வாக்கெடுப்பு அறிவிக்கப்பட்டது.*

*இது போர்ட்டோ ரிக்கோவின் நிலை குறித்து நடத்தப்பட்ட ஆறாவது வாக்கெடுப்பாகும். இதற்கு முன்பு 2017 ஆம் ஆண்டு நடந்த வாக்கெடுப்பு நடந்தது. ஆயினும் இதுவே ஒருஅமெரிக்க மாநிலமாக மாறுவதற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ வாக்களிக்கும் விருப்பத்தை வெளிக்காட்டினர்.*

*அதேவேளை வாஸ்குவேஸ் உறுப்பினராக உள்ள புதிய முற்போக்குக் கட்சி* (PNP) *மாநில அந்தஸ்தை ஆதரிக்கிறது. அதே நேரத்தில் எதிர்க்கட்சியான மக்கள் ஜனநாயகக் கட்சி* (PDP) *மற்றும் போர்ட்டோ ரிக்கன் சுதந்திரக் கட்சி* (PIP) *அதை எதிர்க்கின்றன.*

*ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, போர்ட்டோ ரிக்கோ வாக்கெடுப்பை நடத்தியது. 1967, 1993 மற்றும் 1998 இல் இந்த பிரச்சினையில் வாக்கெடுப்பு மூன்று முறை தோல்வியடைந்தாலும், 65 சதவீதம் பேர் அமெரிக்காவில் சேர ஒப்புக்கொண்டனர்.*

*2012 வரை, ஐக்கிய மாகாணங்களுடன் தொடர்புடைய மாநிலத்தின் நிலையைத் தக்கவைக்க போர்ட்டோ ரிக்கோ குடியிருப்பாளர்கள் வாக்களித்தனர்.*

**டிரம்ப் நிர்வாகத்தின் வாக்கெடுப்பு:**

*மாநில அந்தஸ்து வழங்கும் அதிகாரம் அமெரிக்க காங்கிரஸிடம் இருப்பதால், வாக்கெடுப்பு கட்டுப்பாடானது. ஆயினும் டிரம்ப் நிர்வாகத்தின் கீழ் அமெரிக்க நீதித்துறையால் வாக்கெடுப்பு அங்கீகரிக்கப்படவில்லை.*

*குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகிய இரு கட்சிகளின் கட்சித் தளங்கள் பல தசாப்தங்களாக போர்ட்டோ ரிக்கோ வின் சுயநிர்ணய உரிமை மற்றும் ஒரு மாநிலமாக ஏற்றுக் கொள்ளப் படுவதற்கான உரிமையை உறுதிப்படுத்தியுள்ளன.*

**போர்ட்டோ ரிக்கோ சுயாட்சி இயக்கம்:**

*1898 இல் போர்ட்டோ ரிக்கோ ஸ்பெயினால் அமெரிக்கா விடம் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து சுயாட்சிக்கான அழைப்புகள் எழுந்தன. 1917ஆம் ஆண்டில், சட்டப்பூர்வ அமெரிக்க குடியுரிமை*




பெரும்பாலான போர்ட்டோ ரிக்கன்களுக்கு நீட்டிக்கப்பட்டது, இருப்பினும் அந்த சட்டம் எதிர்கால அமெரிக்க காங்கிரஸால் ரத்து செய்யப்படலாம் எனம் அச்சமும் இருந்தது.

பிறப்புரிமையின் மூலம் குடியுரிமை பெறுவதை 1940 ஆம் ஆண்டின் தேசியச் சட்டத்தால் நிறுவப்பட்டது. 1952 ஆம் ஆண்டில், போர்ட்டோ ரிக்கோ ஒரு புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டது. அது "காமன்வெல்த் ஆஃப் புவேர்ட்டோ ரிக்கோ" என்று பெயரிடப் பட்டது.

**அமெரிக்கா தேர்தலில் வாக்களிக்க முடியாது !**

இன்று, போர்ட்டோ ரிக்கன்கள் அமெரிக்க கூட்டாட்சி சட்டங்களுக்கு உட்பட்டவர்களாக இருக்கும்போது, இணைக்கப் படாத பிரதேசத்தில் உள்ளவர்கள் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க முடியாது. மேலும் இணைக்கப்படாத பிரதேசத்தில் காங்கிரஸில் பிரதிநிதி வாக்கு உரிமையும் இல்லை.

இங்கே இயற்கை பேரழிவுகள் மற்றும் பிரதேசத்தின் பொருளா தார நெருக்கடியின் தாக்கத்தை அதிகப்படுத்துவதாக கருதப்படுகிறது. ஆயினும் பொருளாதர ரீதியில் வளர்ச்சி குன்றியதாகவே இன்னமும் உள்ளது.

**அமெரிக்காவில் கருத்துக்கணிப்பு**

2019 கருத்துக்கணிப்பின் படி அமெரிக்காவில் 83 % ஜனநாயகக் கட்சியினரும், ஆனால் குடியரசுக் கட்சியினரில் 35% பேர் மட்டுமே போர்ட்டோ ரிக்கன் மாநில சுயாட்சியை ஆதரித்தனர்.

*2020ஆம் ஆண்டு சர்வதேச சட்ட நிறுவனம் நடத்திய ஆய்வில், பெரும்பான்மையான ஜனநாயகக் கட்சியினர் 61.8% மாநில உரிமைக்கு ஆதரவைக் காட்டியுள்ளனர்.*

*அதே நேரத்தில் குடியரசுக் கட்சியினரில் 26.7% பேர் மட்டுமே மாநில சுயாட்சியை ஆதரித்தனர்.*

*இந்த வாக்கெடுப்பு போர்ட்டோ ரிக்கோவில் ஏற்பட்ட அரசியல் எழுச்சியின் ஒரு காலகட்டத்தை பின்பற்றுகிறது, அங்கு பொருளாதார நெருக்கடி மற்றும் தொடர்ச்சியான சூறாவளிகளால் ஏற்பட்ட சேதம் எதிர்ப்புகளை சமாளிக்க முடியாமல் திணறுகிறது.*

**விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் :**

*ஜூலை 1898 இல், அமெரிக்க ஆயுதப்படைகள் அந்த நேரத்தில் ஸ்பெயினுக்கு சொந்தமான போர்ட்டோ ரிக்கோ தீவுகளைக் கைப்பற்றின. அதே ஆண்டு டிசம்பரில், வாஷிங்டனின் பிரதிநிதிகள், பாரிஸில் நடந்த பேச்சுவார்த்தைகளில் ஸ்பெயினியர்களை கட்டுப் படுத்தினர்.*

*பிலிப்பைன்ஸ் மற்றும் குவாமுடன் சேர்ந்து தீவுக்கூட்டத்தை அவர்களிடம் ஒப்படைக்கவும். வாஷிங்டனில் இருந்து நியமிக்கப் பட்ட ஒரு கவர்னர் மூலம் அமெரிக்கா போர்ட்டோ ரிக்கோவில் ”வெளி அரசாங்கத்தை” நிறுவியது,*

*மேலும் 1900 இல் தீவுகளில் ஒரு காங்கிரஸை உருவாக்கிய துடன், 1917 இல், போர்ட்டோ ரிக்கோவில் வசிப்பவர்களுக்கு குறைந்த அரசியல் உரிமைகள் உள்ள அமெரிக்க குடியுரிமை வழங்கப்பட்டது. 1920 மற்றும் 1930 களில் தீவுக்கூட்டத்தில் எழுந்த சுதந்திர இயக்கம் அமெரிக்க அதிகாரிகளால் கொடூரமாக ஒடுக்கப்பட்டது. அதன் தலைவர்கள் பலரும் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.*

*இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, வாஷிங்டன் அரசு போர்ட்டோ ரிக்கன்களின் அரசியல் உரிமைகளை சிறிது விரிவு படுத்தியது. அவர்கள் தங்கள் சொந்த ஆளுநரைத் தேர்ந்தெடுக்க அனுமதித்தது. ஆனால் இது அடிப்படையில் எதையும் மாற்றவில்லை. தீவுகளின் வாழ்க்கைத் தரம் பெருநகர வளர்ச்சியில் இருப்பதை விட மிகவும் குறைவாக இருந்தது.*

*எனவே போர்ட்டோ ரிக்கோவின் மக்கள் பிரதான நிலப் பகுதிக்கு பெருமளவில் செல்லத் தொடங்கினர். 1945 முதல் 1965 வரை அமெரிக்கப் பிராந்தியத்தில் உள்ள தீவுவாசிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட பத்து மடங்கு அதிகரித்துள்ளது. போர்ட்டோ ரிக்கோ வில் பொருளாதார சிக்கல்களின் பின்னணியில், சுதந்திரத்திற்கான*




போராளிகள் மீண்டும் தலையை உயர்த்தினர்.

அங்கு வாழும் மக்களுக்கு எப்படியாவது உறுதியளிக்கும் வகையில், 1952 இல் வாஷிங்டன் அரசு இத்தீவுக்கூட்டத்திற்கு “தொடர்புடைய பிரதேசம்” என்ற அந்தஸ்தை வழங்கியது. ஆனால் இது அதன் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவில்லை.

1960 களில் இருந்து, இடதுசாரிப் படைகள் தங்கள் நாட்டின் விடுதலைக்காக ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கின. ஆனால் அமெரிக்க பாதுகாப்புப் படைகளின் பாரிய எதிர்ப்பால் அதன் தலைமையை அழித்தனர்.

**அமெரிக்காவில் ஏழ்மையான மாநிலம்:**

இன்று, போர்ட்டோ ரிக்கோ அமெரிக்காவில் உள்ள ஏழ்மையான மாநிலங்களைக் காட்டிலும் மிகவும் ஏழ்மையில் வாழ்கிறது. தீவுக்கூட்டத்தில் உள்ள நிர்வாக சேவைகள் மற்றும் தயாரிப்புகளுக்கான உற்பத்தி விலைகள் அமெரிக்காவை விட சராசரியாக ஒன்றரை மடங்கு அதிகம். மேலும் பொது மானியங்கள் மிகவும் குறைவாகவே வழங்கப்படுகின்றன. ஆனால் உலகில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களின் மிகப்பெரிய தளம் ஒன்று இங்கே உள்ளது.

போர்ட்டோ ரிக்கோவில் ஒரு இராணுவ ரேடார் நிலையம் நிறுவப்பட்டுள்ளது. மற்றும் கடற்படை பயிற்சிகள் நடத்தப்படுவது மட்டுமல்லாமல், அமெரிக்க அணு ஆயுதங்களும் சேமித்து வைக்கப் பட்டுள்ளன.

**போர்ட்டோ ரிக்கோ - கிரிமியாவுடன் ஒப்பிடல்?**

*மேற்கத்திய ஊடகங்களில் போர்ட்டோ ரிக்கோ சமீபத்தில் ரஷ்ய கிரிமியாவுடன் ஒப்பிட விரும்புகிறது. இருப்பினும், அத்தகைய ஒப்பீடுகள் சரியானவை என்று அழைக்க முடியாது.*

*முதலாவதாக, சோவியத் யூனியன், அதன் வாரிசு ரஷ்ய கூட்டமைப்பு, கிரிமியாவை ஒருபோதும் கைப்பற்றவில்லை. இரண்டாவதாக, தீபகற்பம் பல ஆண்டுகளாக ரஷ்யாவின் ஒரு பகுதியாக இருந்தது.*

*மேலும் சோவியத் ஒன்றியத்தின் கட்டமைப்பிற்குள் கூட அது சட்டவிரோதமாக உக்ரைனுக்கு மாற்றப்பட்டது. மூன்றாவதாக, கிரிமியன் மக்கள்தொகையில் பெரும்பான்மையானவர்கள் ரஷ்ய மொழி பேசும் இன ரஷ்யர்கள் (போர்ட்டோ ரிக்கோவில் ஸ்பானிக் லத்தீன் அமெரிக்கர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர்,*

*அவர்கள் மொழி மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் அமெரிக்க குடியிருப்பாளர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட வர்கள்.*

*மேலும், மிக முக்கியமாக, ரஷ்யாவுக்குத் திரும்பிய உடனேயே, அதிகாரப்பூர்வ மாஸ்கோ கிரிமியா மற்றும் செவாஸ்டோபோலுக்கு கூட்டமைப்பின் முழு அளவிலான குடிமக்களின் அந்தஸ்தையும், அவர்களின் குடியிருப்பாளர்களுக்கும் - அனைத்து அரசியல் உரிமைகளுடன் குடியுரிமையும் வழங்கியது.*

*ஆனால், இந்த எல்லா வேறுபாடுகளிலிருந்தும் ரஷ்ய கூட்டமைப்பு, 2014 இல் ஒரு விதிவிலக்கான முடிவை எடுக்கும்போது, கிரிமியர்களின் விருப்பத்தால் மட்டுமே வழிநடத்தப்பட்டது, அவர்கள் ஒரு வாக்கெடுப்பில் தங்கள் விருப்பை வெளிப்படுத்தினர்.*

*போர்ட்டோ ரிக்கோவில் "லத்தீன்களின்" உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை விட முக்கியமான புவிசார் அரசியல் நிலைகளின் மீதான கட்டுப்பாடு வாஷிங்டனுக்கு மிகவும் முக்கியமானதாகும். அதற்கு இசைவாகவே அமெரிக்கா தனது புவிசார் இராணுவ மூலோபாயங்களை வகுத்துக் கொள்ளும் என்பது உண்மை.*

# நிக்கரகுவா– புரட்சியின் விளைவு:

## நிக்கரகுவா நிமிர்ந்து நிற்கிறதா..

## விடுதலையின் பின் வீழ்ந்து சரிந்ததா..




*நிக்கரகுவா **44** ஆண்டுகள் புரட்சியின் மூலம் விடுதலை பெற்றுள்ளதை தற்போது கொண்டாடுகிறது. கியூபப் புரட்சிக்குப் பிறகு, இலத்தீன் அமெரிக்காவில் இன்னொரு புரட்சிக்குச் சாத்தியமே இல்லை எனச் சொல்லப்பட்ட நிலையில், இந்த நிக்கரகுவா புரட்சி சாத்தியமானது. தனக்கெனத் தனித்தன்மைகளைக் கொண்ட இப்புரட்சி தற்போது பாரியளவில் நினைவுகூரப்படுகிறது.*

***1979** ஆம் ஆண்டில் சன்டினிஸ்ட் படைகள் (*THE SANDINISTA REVOLUTION DAY 1979 July 19 ) *ஆட்சியைக் கைப்பற்றி **44** ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதைக் கொண்டாடும் நிகழ்வுகளால் நிக்கரகுவா*

*தேசம் மீண்டும் விழாக் கோலம் கொண்டுள்ளது.*

**ஸ்பானிய ஆதிக்கம் :**

*கியூபப் புரட்சிக்குப் பிறகு, இலத்தீன் அமெரிக்காவில் இன்னொரு புரட்சிக்குச் சாத்தியமே இல்லை எனச் சொல்லப்பட்ட நிலையில், இந்த நிக்கரகுவா புரட்சி சாத்தியமானது. தனக்கெனத் தனித்தன்மைகளைக் கொண்ட இப்புரட்சி தற்போது பாரியளவில் நினைவுகூரப்படுகிறது.*

*மத்திய அமெரிக்காவின் மிகப் பெரிய நாடாக நிக்கரகுவா, வடக்கே ஹொண்டூரஸ்ஸையும் தெற்கே கோஸ்டரீகாவையும் மேற்கே பசுபிக் கடலையும் கிழக்கே கரீபியக் கடலையும் எல்லைகளாகக் கொண்டது. ஆறு மில்லியன் மக்கள் தொகையையுடைய நாடு, முதலில் ஸ்பானியர்களின் காலனியாதிக்கத்துக்கு உட்பட்டது.*

*20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவின் நேரடியான கட்டுப்பாட்டுக்குள் வந்த நிக்கரகுவா, 1979இல் புரட்சியினூடாகச் சர்வாதிகாரி துரத்தப்படும் வரை, அமெரிக்காவின் கைப்பாவை அரசாகவே இருந்தது.*

*இலத்தீன் அமெரிக்காவில், மற்றய மத்திய அமெரிக்க நாடுகளைப் போலவும் நிக்கரகுவாவும் 1523 -ல் ஸ்பானிய தளபதியான கோட்டஸ் என்ல் கைப்பற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட காலனியாதிக்கப் போட்டிகளால் நிக்கரகுவாவின் தலைவிதியை அந்நியர் நிர்ணயிப்பதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது.*

*சுமார் மூன்று நூற்றாண்டுகள் ஸ்பானிய காலனியாதிக்கத்தின் கீழ் இருந்து பின்னர் 1821-ல் நிக்கரகுவா விடுதலை அடைந்தது. ஸ்பானியர் காலத்தில் நிலையூன்றிய நிலபிரபுத்துவமும் சமூக அடிமை முறையும் சுதந்திரத்தின் பின்னரும் வளர்ந்து சென்றது. அரசியல் ரீதியாக லிபரல், கன்சவேட்டிவ் என நாடு பிளவுண்டிருந்தது. இதனால் தொடர்நது பல காலமாக நாட்டின் ஆட்சி பாரிய அளவில் சீர்குலைவுக்குள்ளாகி இருந்தது.*

**பரம்பரை ஆட்சியில் நிக்கரகுவா:**

*20 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் தொட்டு, பல இலத்தீன் அமெரிக்க நாடுகளைக் குடும்ப ஆட்சிகள் தலைமுறை தலைமுறையாக ஆண்டன.*

*மிக நீண்ட காலமாக நிக்கரகுவா, ஒரு பரம்பரை ஆட்சியில் சிக்கித் தவித்தது. அதைப்போலவே, நிக்கரகுவாவில் சோமோசா பரம்பரையின் ஆட்சி* (Somoza family dictatorship) *1936 முதல் இருந்தது.*




*இன்றைக்குச் சரியாக 44 ஆண்டுகளுக்கு முன்னர், மத்திய அமெரிக்காவின் சின்னஞ்சிறிய நாடுகளில் ஒன்றான நிக்கரகுவாவில் நீண்டகாலப் புரட்சியின் விளைவால், சர்வாதிகார ஆட்சி ஒழிக்கப்பட்டது.*

*அமெரிக்க ஆதரவுடன் நிகரகுவாவில் சர்வாதிகார ஆட்சியை நடத்தி வந்த அனஸ்டேசியோ சோமோசாவின் ஆட்சிக்கு எதிராக சன்டினிஸ்ட் தேசிய விடுதலை முன்னணி வீரஞ்செறிந்த போராட்டத்தை நடத்தியது. மக்களின் ஆதரவுடன் அந்த ஆட்சியைத் தூக்கி எறியவும் செய்தது.*

சர்வதிகாரி சோமோசா:

*1970 களில் நிக்கரகுவாவில் பொருளாதார முரண்பாடுகள் மோசமடைந்தன. 1970-ல் 1.7 வீதமாக இருந்த பணவீக்கம் 1977-ல் 11 வீதமாக அதிகரித்தது. கடுமையான வேலைநிறுத்தம் நிலவியதால் நாட்டில் உற்பத்தி பாதிக்கப்பட்டது. தேசியக்கடன் என்றுமில்லாத உசக்கட்டத்தை அடைந்தது. 1972-ல் தலைநகரான மனாகுவாவில் சர்வதிகாரி சோமோசா மக்களின் சொத்துக்களை சூறையாடினான். இதன் பின் மக்கள் எழுச்சியால் FSLN - சன்டினிஸ்ட் தோற்றம் பெற்றது.*

*நகர்ப்புற கெரில்லாப்பாணியில் தாக்குதல்களை வடிவமைத்துக் கொண்ட சன்டினிஸ்ட் 1974 டிசம்பரில் ஆட்சிப்பீடத்தில் இருந்த பல முக்கியஸ்தர்களைப் பணயக் கைதிகளாக்கியது. இது பல போராடும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் அதிகார துஷ்பிரயோகத்தைக் கண்டிக்கும் அறிக்கையொன்றின் வெளியீட்டிற்கும் காரணமாக அமைந்தது.*

*1977 செப்டம்பரில் வாஷிங்டனின் கோரிக்கைக்கு இணங்க*

*அவசர நிலை நீடிக்கப்பட்டதுடன் பின் சன்டினிஸ்ட் தன் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. சன்டினிஸ்ட் தேசிப்படைகளின் மீதான தாக்குதல் இராணுவ ரீதியான பாதிப்பை ஏற்படுத்தியது. அடக்குமுறை எந்தப் பிரச்சினையையும் தீர்க்கவில்லை என்பதன் மூலம் ஆட்சிக்கெதிரான வெகுஜன எதிர்ப்பைக் கிளப்பிவிட்டது.*

*தீவிரமாக சன்டினிஸ்ட்டும் தாக்குதலை முடுக்கிவிட்டது. வியட்நாமிய அனுபவங்களைக் கொண்டு சன்டினிஸ்ட் தன் படைகளைப் பல பிரிவுகளாகப் பிரித்து பல இடங்களிலும் நிறுவியது. வேலை நிறுத்தங்கள், பிராந்திய கிளர்ச்சிகள், தனது படைகளின் நடவடிக்கைகள் ஆகியவற்றை எண்ணிறைந்த பிராந்தியங்களில் ஏற்படுத்துவதே சன்டினிஸ்ட் தந்திரோபாயமாக இருந்தது. 132000 சதுர கி.மீ. விஸ்தீரணமும், 23000000 குடிகளும் கொண்ட நாட்டை 15000 வீரர்களைக் கொண்ட படைகளும் தாக்குதலில் இறங்கினால் அவர்கள் முறியடிக்கப்படுவது திண்ணம். மாறாகத் தாக்குதலை ஒருமுகப்படுத்தினால் மற்ற இடங்களை சன்டினிஸ்ட் கைப்பற்றுவது சுலபம். இத் தந்திரோபாயம் சன்டினிஸ்ட் அமைப்புக்கு வெற்றி யளித்தது.*

**அமெரிக்க ஆக்கிரமிப்பு தலையீடு :**

*1979 ஜூன் 4-ல் சன்டினிஸ்ட் பொது வேலைநிறுத்தத்திற்கான அழைப்பை விடுத்தது. அடுத்தநாள் நாடு முற்றாகச் செயலிழந்தது. ஒன்றின் பின் ஒன்றாக முக்கிய நகரங்கள் கிளர்ச்சிக்கான கட்டளையைப் பெற்றன. ஜூன் 10-ம் திகதி மனாகுவா வாசிகளையும் சன்டினிஸ்ட் குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாகவே தம்மிச்சையாகக் கிளர்ந் தெழுந்தனர். அரச படைகள் தலைநகரை நோக்கிப் பின்வாங்க நேரிட்டது. ஜூன் 14-ல் சாஸ்யோசிலுள்ள கோஸ்டாரிக்கா என்ற நகரில் ஒரு அரசாங்கம் அமைக்கப் பட்டது. இவ்வரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலத்தை சன்டினிஸ்ட்* FSLN *பெற்றது. சமாதானப் படையை அனுப்பும் சைரஸ் வான்ஸ் (அமெரிக்க இராஜாங்க அமைச்சர்)ன் திட்டமும் பின்னர் கைவிடப்பட்டது. அமெரிக்காவின் எவ்வித தலையீடும் இருக்கக் கூடாது என அறிவிக்கப்பட்டது.*

*ஜூன் 16 -ம் திகதி நாட்டின் முக்கிய நகரங்கள் கட்டுப் பாட்டின் கீழ்வந்தன. 19 -ம் திகதி சர்வதிகாரி அனஸ்டாசியோ சோமோசா டீபேய்ல் நாட்டை விட்டு ஓடினான். தேசியப்படை யானது சோமோசா தப்பியோடியதும் சீர்குலையலாயிற்று. பல போராட்டங்களின் நெருக்கடிகளிலும் உடையாத இப்படை அதன் தலைவனின் வீழ்ச்சியோடு உடையத் தொடங்கியது.* FSLN



உடனடியாக இறுதித் தாக்குதலை நடத்தவதற்கான அழைப்பை விடுத்தது.

யூன் 19-ம் திகதி சன்டினிஸ்ட் படைகள் வெற்றிகரமாக மனாகுவா நகருள் பிரவேசித்தன. தேசியப் படை சிதறுண்டது. 7000 வீரர் கைதிகளாக்கப்பட்டனர். மற்றவர்கள் ஹொன்ரோசிற்குத் தப்பியோட முயற்சித்தனர். மக்களின் பழிவாங்கலுக்குப் பயந்த எல்லா அதிகாரிகளும் மனாகுவாவை விட்டு வெளியேறினர்.

சன்டினிஸ்ட் முழுமையாக நாட்டை வெற்றியீட்டிக் கொண்டது. ஆனால் 5000 உயிர்கள் பலியானதோடு (சனத்தொகை யில் 2 வீதம்) அளப்பரிய இழப்புகளும் ஏற்பட்டன. ஏனெனில் நாட்டின் தொழிற்சாலைகள் யாவற்றையும் சர்வதிகாரி சோமோசா குண்டுவீசித் தகர்த்திருந்தான். இறுதியாக 1979 யூன் 19-ல் FSLN சன்டினிஸ்ட் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றது.

**புரட்சி நடந்து 44 ஆண்டுகள் நிறைவு:**

எதற்காக புரட்சியை மேற்கொண்டோமோ அதை நோக்கிய பாதையில் நிகரகுவா நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்று அந்நாட்டின் ஜனாதிபதியும், புரட்சியை நடத்திய தலைவர்களில் ஒருவருமான டேனியல் ஓர்டேகா தற்போது கூறியுள்ளார்.

நிகரகுவாவில் மிகவும் கடுமையான வறுமையில் மக்கள் அவதிப்பட்டு வந்தனர். எழுத்தறிவே இல்லாத சூழலும் நிலவியது. இவற்றிலிருந்து மக்கள் மீள வேண்டும் என்று நாங்கள் கருதினோம். இதற்காகவே புரட்சி நடத்தப்பட்டது. எந்த நோக்கத்திற்காக நடத்தினோமோ, அதற்கான பாதையில் நடைபோடுகிறோம். மேலும்

மேம்பட்ட உலகையே நாங்கள் விரும்புகிறோம் என்று குறிப்பிட்டார்.

*1979* ஆம் ஆண்டில் சன்டினிஸ்ட் படைகள் ஆட்சியைக் கைப்பற்றின. புரட்சி நடந்து *44* ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதைக் கொண்டாடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சி களுக்கு நிகரகுவாவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அந்நாட்டின் தலைநகர் மனாகுவாவில் நடந்த விழாவில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். புரட்சி நிகழ்வுகள் மற்றும் அதன் பலன்களைக் காட்சிப் படுத்தும் வகையிலும் பல்வேறு கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகள் நடைபெற்றன.

உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தலைவர்கள், பல அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வுகளில் பங்கேற்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற கூட்டத்தில் நிகரகுவா ஜனாதிபதி டேனியல் ஓர்டேகா உரையாற்றினார்.

**தாமஸ் சங்கராவிற்கு புகழாரம் :**

இரண்டு மணி நேரத்திற்கும் மேலாகப் பேசிய அவர், புரட்சியின் நாயகர்கள் அகஸ்டோ சீசர் சாண்டினோ, ரிகோ பெர்ட்டோ லோபஸ் பெரஸ் மற்றும் கார்லோஸ் ஃபொன்சேகா உள்ளிட்டோரின் முக்கியத்துவத்தை நினைவு கூர்ந்தார். பர்கினோ ஃபசோவில் இருந்து நிகரகுவாவுக்கு வந்து புரட்சிக்கான பங்களிப்பை செலுத்திய தாமஸ் சங்கராவிற்கு புகழாரம் சூட்டினார்.

புரட்சிக்கான பாதை தொடர்கிறது என்று ஓர்டேகா கூறியபோது மக்கள் ஆரவாரத்துடன் அதை வரவேற்றனர். ஓர்டேகா வின் இடது சாரிக் கொள்கைகளுக்கு மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு தொடர்ந்தும் இருந்து வருகிறது. அண்மையில் நடத்தப் பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில், அவரது செயல்பாடுகளுக்கு 80 வீத மக்கள் ஆதரவு தெரிவித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கியூபப் புரட்சிக்குப் பிறகு, இலத்தீன் அமெரிக்காவில் இன்னொரு புரட்சிக்குச் சாத்தியமே இல்லை எனச் சொல்லப்பட்ட நிலையில், இந்தப் புரட்சி சாத்தியமானது என்பது அமெரிக்காவிற்கு பாரிய அதிர்ச்சியை உருவாக்கியது எனலாம்.

# கொலம்பியா – ஆறு தசாப்த ஆயுத மோதல் :

## கொலம்பியாவில் மீண்டும் போர் நிறுத்தம் சாத்தியமா ?

## ஆறு தசாப்த உள்நாட்டு ஆயுத மோதல் முடிவுறுமா ?



கொலம்பிய அரசுக்கும் ELN கெரில்லா அமைப்புக்கும் போர்நிறுத்தம் சாத்தியமா? தொடர்ந்து நீடிக்குமா குறித்த கேள்விகள் உள்ளன. ஆயினும் இந்த ஒப்பந்தம் கொலம்பிய அரசாங்கத்திற்கு ஒரு மைல்கல் ஆகும். இருப்பினும் போர் நிறுத்தம் மூலம் வன்முறையைக் குறைக்கும் திறன் குறித்து சந்தேகங்கள் பலவும் உள்ளன.

கொலம்பியாவில் ***9.6.2023*** கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோவின் அரசாங்கம் அமைதியை நோக்கிய அதன் பாதையில் ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியைக் கொண்டாடியது. அதுவே கொலம்பியாவின் மிகப்பெரிய கெரில்லா குழுவான தேசிய

விடுதலை இராணுவத்துடன் (ELN) ஆறு மாத, நாடு தழுவிய போர் நிறுத்தம் கையெழுத்தானது.

**கியூபாவில் பேச்சுவார்த்தை:**

இதனையோட்டி கியூபாவின் ஹவானாவில் நடைபெற்ற விழாவில், இடதுசாரி அதிபர் குஸ்டாவோ பெட்ரோவின் “இறுதியில் தவறான பாதைகளைத் திருத்துவதன் மூலமும், புதிய பாதைகளை அமைப்பதன் மூலமும் சமாதானம் கட்டமைக்கப்படுகிறது, ஏனெனில் அமைதியை விட புரட்சிகரமானது எதுவுமில்லை” எனக் கூறினார்.

போர்நிறுத்தம் கொலம்பியாவிற்கு ஒரு பெரிய வளர்ச்சி படியாகும். ஏனெனில் இந்நாடு முன்பு ஒருமுறை மட்டுமே ELN உடன் இருதரப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டது. அது செப்டம்பர் 2017 இல் இருந்தது, அது 101 நாட்கள் மட்டுமே நீடித்தது.

இது எங்களுக்கு மிகவும் முக்கியமானது, ஏனென்றால் இது ஒரு தொடக்கமாக இருக்கலாம். இதன் மூலம் நாம் இன்னும் பலவற்றைச் சாதிக்க முடியும், என்று ELN செயல் இருப்பை பராமரிக்கும் துறையைச் சேர்ந்த தலைவர் மொரிசியோ கபாஸ் கூறியுள்ளார்.

கொலம்பியாவின் ஆயுதமேந்திய புரட்சிப் படை (Revolutionary Armed Forces of ColombiaPeople's Army) அல்லது வார்க் (FARC) என்பது தென் அமெரிக்கா நாடான கொலொம்பியாவில் அரசுக்கு எதிராக அறுபது ஆண்டுகளாகப் போராடிக்கொண்டிருக்கும் மக்களின் போராட்ட அமைப்பு ஆகும்.


1964 ஆம் ஆண்டு இந்த அமைப்பு துவங்கப்பட்டு இன்றுவரை போராட்டம் நடத்திக்கொண்டு உள்ளது. இவ்வமைப்பு அதிகமாக ஆயுதப்படையின் போர் உத்திகளை கையாண்டு வருகிறது.

2016 அமைதி ஒப்பந்தத்திற்குப் பிறகு இவ் அமைப்பு நிராயுதபாணியாக்கப் படுவதற்கு வழிவகுத்தது. ஆயினும் ELN ஆனது, சுமார் 3000 போராளிகளுடன் எஞ்சியிருக்கும் மிகப்பெரிய கிளர்ச்சிக் குழுவாக அதன் இடத்தை தக்க வைத்தது.

நெறிமுறைகள், சமூக உரையாடல்கள் மற்றும் ஒரு விரிவான கண்காணிப்பு பொறிமுறையை நிறுவுவதற்கு அனுமதிக்கும் வகையில், இது படிப்படியாக மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படும்.

**ஐ.நா சபை கண்காணிப்பு :**

சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக கொலம்பியாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் பணி மற்றும் கத்தோலிக்க திருச்சபையால் அந்த போர் நிறுத்த கண்காணிப்பு




வழிநடத்தப்படும். ELN மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டும் ஆறு மாதங்களின் முடிவில் போர்நிறுத்தத்தில் திருப்தி அடைந்தால், அவர்கள் அதை நீட்டிக்க பேச்சுவார்த்தை நடத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயல்முறை அமைதிக்கான நிலைமைகளை உருவாக்க உதவும். இதன் மூலம் நாடு ஒரு புதிய திசையை நோக்கி செல்ல முடியும், என்று முக்கிய ELN பேச்சுவார்த்தையாளரான Aureliano Carbonell ஹவானாவில் கூறினார்.

கியூபாவின் ஹவானாவில் அமைதி பேச்சு வார்த்தைகளின் தொடக்கத்தில் தேசிய விடுதலை இராணுவத்தின் (ELN) தளபதி நிக்கோலஸ் ரோட்ரிகஸ் கலந்து கொண்டார். அமைதிக்கான "லட்சிய" முயற்சி அதிபர் பெட்ரோவின் முக்கிய பிரச்சார வாக்குறுதிகளில் ஒன்றாகும்.

முழுமையான அமைதி சகாப்தத்தை உருவாக்குவதற்கு போர் நிறுத்தம் கருவியாக இருக்கும் என்று அரசாங்கம் தற்போது நம்புகிறது.

**ஆறு தசாப்த உள்நாட்டு ஆயுத மோதல்**

கொலம்பியா ஏறத்தாழ ஆறு தசாப்தகால உள்நாட்டு ஆயுத மோதலால் அழிக்கப்பட்டுள்ளது. குறைந்தது 450664 மக்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் மில்லியன் கணக்கானவர்கள் தங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

ஆயுத போராளிகளில் வலதுசாரி துணை இராணுவக் குழுக்கள், இடதுசாரி கிளர்ச்சியாளர்கள் மற்றும் அரசாங்கப் படைகள், அனைத்தும் பிரதேசத்தின் மீதான கட்டுப்பாட்டிற்காக நீண்ட காலம்

ஆயுதங்களால் போட்டியிடுகின்றன.

**கொலம்பிய புரட்சிகர ஆயுதப் படைகள் - FARC:**

ஆரம்பத்தில் கொலம்பியாவின் புரட்சிகர ஆயுதப் படைகள் (FARC) நிராயுதபாணியாக்கப்படுவதற்கு வழிவகுத்த 2016 அமைதி ஒப்பந்தத்திற்குப் பிறகு, ELN ஆனது, சுமார் 3000 போராளிகளுடன் எஞ்சியிருக்கும் மிகப்பெரிய கிளர்ச்சிக் குழுவாக அதன் இடத்தைப் பிடித்தது. தற்போதய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ELN முக்கிய அணியாக மாறியுள்ளது. சமீபத்திய போர்நிறுத்தம் மூன்று வெவ்வேறு நாடுகளில் மூன்று சுற்று பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து வந்துள்ளது.

**பேச்சுவார்த்தை மூலம் தீர்வு:**

கடந்த வருட இறுதியில் டிசம்பர் 31 அன்று, கிளர்ச்சிக் குழுவுடனான சமாதானம் இறுதியாகக் கைகூடியது. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு, ELN அத்தகைய ஒப்பந்தத்தை மறுத்தது.

கொலம்பியாவின் முதல் இடதுசாரித் தலைவரும் முன்னாள் எம்-19கெரில்லா போராளியுமான பெட்ரோவுக்கு இது ஒரு பாரிய பின்னடைவாகும்.

வன்முறையைத் தீர்க்க முந்தைய கொலம்பிய அரசாங்கங்கள் பயன்படுத்திய இராணுவமயமாக்கப்பட்ட அணுகுமுறையிலிருந்து விலகுவதாக அவர் சபதம் செய்திருந்தார். அதற்குப் பதிலாக பேச்சுவார்த்தைகள் மூலம் வழிநடத்துவதாக உறுதியளித்தார்.

ELN அமைப்பை பொறுத்தவரை, பெட்ரோவை விட அவர்களுடன் சமாதானம் செய்வதற்கு திறந்த அரசாங்கம் இருக்கப் போவதில்லை என்று கொலம்பிய அரசியல் ஆய்வாளர் ஜார்ஜ் மன்டிலா கூறியுள்ளார்.

கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ தனது அரசாங்கத்திற்கும் ELN க்கும் இடையே ஆறு மாத போர்நிறுத்தத்தை ஜூன் 9 அன்று உறுதியாக அறிவித்தார். பேச்சுவார்த்தையில் குறை பாடுகள் போர்நிறுத்தத்தின் முக்கியத்துவமாக இருந்தபோதிலும், கொலம்பியா எதிர்கொள்ளும் வன்முறையை முழுமையாக தீர்க்க முடியாமல் போகலாம் என்று அரசியல் நிபுணர்கள் கவலைப்படு கிறார்கள்.

ELN க்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பதட்டங்கள் இனி மோதலின் மையப் புள்ளியாக இருக்காது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த ஒப்பந்தத்தின் முக்கிய குறைபாடு என்ன வென்றால், இது போர் நிறுத்தம் அல்ல, இது உண்மையில் தரையில்




மனிதாபிமான நிலைமைகளை மேம்படுத்தும் வகையில் எழுகிறது. இது கண்டிப்பாக நிறைவான போர்நிறுத்தம் என்று சர்வதேச நெருக்கடி குழுவில் கொலம்பியாவின் மூத்த ஆய்வாளர் எலிசபெத் டிக்கின்சன் கூறியுள்ளார்.

ELN தலைமையானது மற்ற ஆயுதக் குழுக்களுக்கு எதிரான அதன் விரோத நடவடிக்கைகளை நிறுத்துமா என்பதை இன்னும் தெளிவுபடுத்தவில்லை. ELN பிற கட்சிகளுக்கு எதிராக, அதாவது பொதுமக்கள் மற்றும் போட்டியிடும் ஆயுதக் குழுக்களுக்கு எதிராக மிரட்டல்களை தொடருமா என்பதும் தெளிவாகவில்லை.

ELN குழுவின் தந்திரோபாயங்களில் பிராந்திய மோதல்கள், மிரட்டி பணம் பறித்தல், கடத்தல், வலுக்கட்டாயமாக சிறைபிடித்தல், சிறார்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பாதுகாப்புப் பணம் வசூலித்தல் ஆகியவை அடங்கும். இரு மாதங்களுக்கு முன்னர் ELN தாக்குதலில் கொல்லப்பட்ட ஒன்பது சேவை உறுப்பினர்களுக்காக மார்ச் 31 அன்று கொலம்பிய வீரர்கள் விழிப்புணர்வை நடத்தினர்.

**FARC 2016 சமாதான உடன்படிக்கை**

FARC உடனான 2016 சமாதான உடன்படிக்கையின் முயற்சிகளில் இருந்து படிப்பினைகள் மூலம், தவறுகளை மீண்டும் செய்வதில் நாடு எச்சரிக்கையாக இருப்பதாகவும், புதிய போர் நிறுத்தத்தை அமல்படுத்துவது குறித்தும் கவலைகள் எழுந்து உள்ளன.

FARC இன் சில உறுப்பினர்கள் நிராயுதபாணியாக மறுத்துவிட்டனர். மாறாக கொலம்பிய கிராமப்புறங்களில் தொடர்ந்து போராடும் தங்கள் சொந்த அதிருப்தி குழுக்களை

உருவாக்கினர். FARC கலைக்கப்பட்ட பகுதிகளில், போதைப்பொருள் கடத்தல் வழிகள் மற்றும் கைவிடப்பட்ட பிரதேசத்தை உரிமை கோருவதற்கு போட்டி குழுக்கள் முன்வந்தன. இது அமைதிக்கு நீடித்த தடைகளை உருவாக்கி உள்ளதும் உண்மையே.

போர் நிறுத்தம் மிகவும் நல்லது. ஒருவித அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கிறது, ஆனால் இங்குள்ள உண்மை என்னவென்றால், ELN மற்றும் பிற ஆயுதக் குழுக்களுக்கு இடையே ஒரு வலுவான மோதல் உள்ளது என்றும் கூறப்படுகிறது.

ஆயினும் கொலம்பிய அரசுக்கும் ELN அமைப்புக்கும் போர்நிறுத்தம் நீடிக்குமா குறித்த கவலைகள் உள்ளன. ஆயினும் இந்த ஒப்பந்தம் கொலம்பிய அரசாங்கத்திற்கு ஒரு மைல்கல் ஆகும். இருப்பினும் வன்முறையைக் குறைக்கும் அதன் திறன் குறித்து சந்தேகங்கள் பலவும் உள்ளன.

## குவாத்தமாலா – இடதுசாரி பாதையில் பயணம்:

### எதற்காக இடதுசாரிகளை ஆதரிக்கிறார்கள்..

### இலத்தின் அமெரிக்க வாழ் மக்கள்..



இலத்தின் அமெரிக்கா நாடான குவாத்தமாலாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தி சென்டர்-லெஃப்ட் மூவிமியன்டோ செமில் என்ற இடதுசாரிக்கட்சியின் தலைவர் பெர்னார்டோ அரேவலோ டி லியோன் வெற்றி பெற்றுள்ளார்.

இதே போல் ஈகுவடார் நாட்டில் 2023இல் நடைபெற்ற முதல் கட்ட தேர்தலில் இடதுசாரி குடி மக்கள் புரட்சி இயக்கத்தின் கோன்சாலஸ் 33.31சதவீத வாக்குகள் பெற்று வெற்றி கண்டு இரண்டாம் கட்டத் தேர்தலிலும் வெற்றிவாகை சூட தயாராகி வருகிறார்.

**இலத்தீனில் இடதுசாரி அரசுகள்:**

*இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இடதுசாரி அரசுகளின் எழுச்சியாக 2018இல் மெக்சிகோவும், பின்னர் 2019இல் ஆர்ஜென்டினாவும் எழுந்தன. மேலும் 2020இல் பொலிவியாவில் இடதுசாரி அரசு நிறுவப்பட்டது.*

*அதன்பின் 2021இல் பெரு, ஹோண்டுராஸ் மற்றும் சிலி, பின்னர் கொலம்பியாவை தொடர்ந்து தற்போது பிரேசில் 2022இல் இடதுசாரி அரசை அந்நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் தேர்ந் தெடுத்துள்ளனர். குவாத்தமாலா நாட்டில் பெர்னார்டோ அரேவலோ ஜனாதிபதித் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளார்.*

*இலத்தின் அமெரிக்காவில் அமெரிக்க ஆதரவு வலதுசாரி தலைவர்களால் ஆளப்படும் நாடுகளில் பொருளாதார நெருக்கடி, வேலையின்மை, வன்முறைகள், இயற்கை வளங்களைச் சூறையாட அனுமதிப்பது என மக்கள் விரோத ஆட்சியாக நடத்தப்படுகிறது.*

*இந்த வலதுசாரிகளின் ஆட்சிக்கு எதிராக அந்நாடுகளில் உள்ள இடதுசாரி, சோஷலிஸ்டு மற்றும் மைய-இடது (சென்டர்-லெப்ட்) உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள் தொடர் போராட்டத்தையும் மக்கள் மத்தியில் தொடர் பிரச்சாரங்களையும் முன்னெடுத்து வருகின்றன.*

**இடதுசாரி பாதையில் பயணம்:**

*இலத்தீன் அமெரிக்காவில் உள்ள 12க்கும் அதிகமான நாடு களில் ஜனநாயக தேர்தல் முறை மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடது சாரி அரசாங்கங்கள் தற்போது ஆட்சிப் பொறுப்பில் உள்ளன. எதற்காக இலத்தீன் அமெரிக்க நாடுகள் இடதுசாரி பாதையில் தொடர்ந்து முன்னேறுகின்றன என்பது அமெரிக்காவிற்கு வியப்பாக இருப்பினும், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசுகள் இவை என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*வரலாற்றை திரும்பிப் பார்த்தால், பனிப்போரின் உச்சக்கட்ட காலத்தின்போதும், லத்தீன் அமெரிக்காவில் தொடர்ச்சியான இடதுசாரி அரசாங்கங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்த அரசாங்கங்கள் பிராந்தியத்தில் அதன் புவிசார் மூலோபாய ஆர்வத்தின் ஒரு பகுதியாக அமெரிக்க அரசாங்கத்தால் நிதியுதவி செய்யப்பட்ட எதிர்ப்புரட்சி சதிகளை எதிர்கொண்டன.*

*வரலாற்று ரீதியாக இவற்றில் 1954குவாத்தமாலா ஆட்சிக் கவிழ்ப்பு, 1964 பிரேசிலிய ஆட்சிக்கவிழ்ப்பு, 1973சிலி ஆட்சிக் கவிழ்ப்பு மற்றும் 1976அர்ஜென்டினா ஆட்சிக்கவிழ்ப்பு ஆகியவை அமெரிக்க சதித் திட்டங்களால் நிகழ்த்தப்பட்டன என்பதும்*




உலகறிந்ததே.

1960-1970களின் காலகட்டங்களின் போது, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஜனநாயக நடைமுறைகள் மிகவும் பலவீனமாக இருந்தது. மக்களின் தேர்தல் வழிப்பட்ட தீர்ப்புகளுக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளின் இராணுவங்கள் மதிப்பு அளித்தது இல்லை என்பதும் வரலாறே.

**ஆபரேஷன் கோண்டர்:** (Operation Condor)

இந்த ஆட்சிக்கவிழ்ப்புக்கள் அனைத்தும், அமெரிக்க அரசின் ஆபரேஷன் காண்டரின் (Operation Condor) ஒரு பகுதியாக, அமெரிக்காவின் உளவு நிறுவனமான சிஐஏ ஆதரவுடன் கடும் போக்கு வலதுசாரி இராணுவ சர்வாதிகாரங்களால் இறையான்மை உள்ள மக்களின் ஆட்சிகள் கைப்பற்றப்பட்டன.

அமெரிக்காவின் உளவு நிறுவனமான சிஐஏ ஆதரவுடைய கடும் போக்கு வலதுசாரி சர்வாதிகார ஆட்சிகளில், சட்டவிரோத அரசியல் கைதுகள், சித்திரவதைகள், அரசியல் காணாமல் போதல் மற்றும் குழந்தை கடத்தல் உட்பட பல மனித உரிமை மீறல்களை செய்தன.

சர்வதேச அழுத்தத்தின் காரணமாக இந்த ஆட்சிகள் பலவும் வீழ்ச்சியடையத் தொடங்கின. இவ் வலதுசாரி அரசுகள் கொடூரமான அட்டூழியங்களில் ஈடுபட்டதன் காரணமாக இலத்தீன் பொது மக்கள் அமெரிக்காவிற்கு எதிராக போராடினர். பல இலத்தீன் நாடுகள் மறை முக போரை எதிர்கொண்டன என்பது வரலாற்று உண்மையாகும்.

**கொலம்பியாவில் இடதுசாரி தலைமை:**

இலத்தீன் அமெரிக்க கண்டத்தில் உள்ள கொலம்பிய நாட்டின் மக்கள் தொகை 50மில்லியன் ஆகும். மக்கள் தொகையின் படி இலத்தீன் அமெரிக்க கண்டத்தில் மூன்றாவது பெரிய நாடான கொலம்பியா

உள்நாட்டுப் போர்களின் நீண்ட வரலாற்றைக் கொண்ட கொலம்பிய நாட்டில் பெட்ரோவின் வெற்றி அதி முக்கியத்துவம் வாய்ந்தது.

2022மே 29 அன்று கொலம்பியாவில் அதிபர் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் களத்தில் போட்டியிட்ட ஐந்து வேட்பாளர் களில் ஒருவர் கூட 50 சதவிகிதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறவில்லை. எனவே, 2022ஜூன் 19அன்று இரண்டாம் சுற்று தேர்தல் நடைபெற்றது.

இந்த இரண்டாவது சுற்றில் இடதுசாரி முற்போக்கு சக்திகளின் கூட்டணி (Historic Pact ) சார்பாக குஸ்தவோ பெட்ரோ (Gustavo Petro) மற்றும் வலதுசாரி வேட்பாளராக ரொடோல்ஃபோ ஹெர்னாண்டஸ் (Rodolfo Hernandez) ஆகிய இருவருக்கும் இடையே போட்டி நிலவியது.

கொலம்பியாவில், M-19 எனும் ஆயுதக்குழுவில் கிளர்ச்சி யாளராக செயல்பட்ட பெட்ரோ சிறையில் அடைக்கப்பட்டு சித்ர வதைக்கு உள்ளானவர். பின்னர், மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

ஆயுதப் போராட்ட பாதையை கைவிட்ட அந்தக் குழு 1990ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது. அதன் நீட்சியாக M-19 ஜன நாயக முன்னணி என்ற அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்பட்டு, அரசியல் அமைப்பு மற்றும் நாடாளுமன்ற நடைமுறைகளில் அக்கட்சி பங்கேற்க தொடங்கியது. அந்நாட்டின் அரசியல் அமைப்பையே மாற்றி எழுதியது. கொலம்பிய புரட்சிகர ஆயுதப் படைப்பிரிவு ((FARC) 1964ஆம் ஆண்டில் கொலம்பிய கம்யூனிஸ்ட் கட்சியின் படைப் பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டது. நீண்ட ஆயுதப் போராட்டங்கள் மற்றும் மோதல்களுக்குப் பிறகு 2016ஆம் ஆண்டில் ஆயுதப் பாதையை நிராகரித்துவிட்டு அமைதிப் பாதைக்கு திரும்பிட FARC முடிவு செய்து, அரசாங்கத்துடன் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

**குவாத்தமாலா வெற்றி:**

இம்மாத ஆரம்பத்தில் ஊழல் எதிர்ப்புப் அரசியல்வாதியான பெர்னார்டோ அரேவலோ குவாத்தமாலாவின் ஜனாதிபதித் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளார்.




*98 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், அரேவலோ 58சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தார். அவரது போட்டியாளரான சாண்ட்ரா டோரஸ் 36சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தார்.*

*குவாத்தமாலாவில் அவசரமான மாற்றத்திற்கான நம்பிக்கை களுக்கு மத்தியில் அரேவலோ வென்றார். ஊழலுக்கு எதிரான பிரச்சாரகர், வன்முறையைச் சமாளிப்பதாக உறுதியளிக்கிறார். பரவ லான ஊழலைச் சமாளிக்கத் தவறிய தலைவர்களின் கோபத்தால் வாக் காளர்கள் மாற்றத்திற்கான ஒரு தீர்க்கமான தேர்வை மேற்கொண்டனர்.*

*64வயதான முன்னாள் இராஜதந்திரி மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் மகன், வன்முறை மற்றும் பாரிய உணவுப் பற்றாக்குறைக்கு மத்தியில் ஆட்சியைப் பிடித்துள்ளார்.*

*குவாத்தமாலாவில் 86 தேர்தல் பார்வையாளர்கள் குழுவைக் கொண்ட அமெரிக்க மாநிலங்களின் அமைப்பின் (OAS) முக்கிய பிரதிநிதி ஒருவர், வாக்களிப்பு சுமூகமாக நடந்ததாகக் கூறினார். எலடியோ லோயிசாகா, பணியின் தலைவர், தேர்தல் "அனைத்து கோரும் கடமைகளையும் நிறைவேற்றியுள்ளது" என்றார்.*

பிரேசில் இடதுசாரிகள்:

*பிரேசில் இடதுசாரித் தலைவர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா இவ்வருட ஜனவரியில் அதிபராகப் பதவியேற்றார்.*

*பிரேசிலின் புதிய அதிபராக லூயிஸ் பொறுப்பேற்கையில் வாக்கு வித்தியாசம் குறைவாக இருந்ததால் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத போல்சனேரோ தனது ஆதரவாளர்களுடன் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.*

*ஜனவரி 2003 முதல் டிசம்பர் 2010 வரை அதிபராக இருந்த லூலா, 31 அக்டோபர் 2022 அன்று நடந்த தேர்தலில் முன்னைய போல்சனாரோவை தோற்கடித்தார். அவர் பதவியேற்ற ஒரு வாரத்திற்குப் பிறகு, பிரேசில் நாட்டில் கலவரங்கள் தீவிரமாக வெடித்தன.*

*புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவை எதிர்க்கும் வகையில், போல்சனாரோவின் ஆதர வாளர்கள் நாட்டின் தலைநகரான பிரேசிலியாவில் உள்ள அரசு கட்டிடங்களை சேதப்படுத்தியுள்ளனர். பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் நாடாளுமன்றம், அதிபர் மாளிகை மற்றும் உச்ச நீதி மன்ற கட்டிடங்களை சேதப்படுத்தின. தங்கள் தேர்தல் தோல்வியை ஏற்க மறுத்து வருகின்றனர்.*

**இலத்தீன் சமூக மாற்றம்:**

*தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக 20ஆம் நூற்றாண்டு வர்த்தகப் பரிமாணங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 21ஆம் நூற்றாண்டில் பல புதிய தொழில்நுட்ப பரிமாணங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளன.*

*தற்போது இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டு வரும் சமூக கட்டமைப்பு மாற்றங்கள் அரசியல் சித்தாந்த மாற்றங்களுக்கும் வித்திடுகிறது. மக்கள் தொகையில் பெரும்பாலானோர் நகரப் பகுதிகளில் வாழ்ந்து வருவதும், நகரக் கட்டமைப்புகள் அதி வேகமாக வளர்ந்து வருகின்றன.*

## பிரேசில் – புதிய தலைமையும் வன்முறையும்:

### பிரேசிலில் வரலாறு காணாத தொடர் வன்முறை..

### இலத்தீன் அமெரிக்காவில் இடதுசாரி அரசுகளின் எழுச்சி..




*பிரேசிலில்* (Brazil) *வரலாறு காணாத வன்முறையை அந்நாடு தற்போது கண்டுகொண்டுள்ளது. இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் அதிபர் போல்சனேரோ* (Jair Bolsonaro) *தோல்வியடைந்தார். முன்னாள் அதிபரான இடதுசாரி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா* (Luiz Inacio Lula da Silva) *வெற்றி பெற்றார்.*

*இலத்தீனில் இடதுசாரி அரசு எழுச்சி:*

*இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இடதுசாரி அரசுகளின் எழுச்சியாக* ***2018****இல் மெக்சிகோவும், பின்னர்* ***2019****இல்*

*அர்ஜென்டினாவும் எழுந்தன.*

*மேலும் **2020** இல் பொலிவியாவில் இடதுசாரி அரசு நிறுவப்பட்டது. அதன்பின் **2021** இல் பெரு, ஹோண்டுராஸ் மற்றும் சிலி, பின்னர் கொலம்பியாவை தொடர்ந்து தற்போது பிரேசில் **2022** இல் இடதுசாரி அரசை*

*அந்நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுத்துள்ளனர். பனிப்போரின் உச்சக்கட்ட காலத்தின்போது, லத்தீன் அமெரிக்காவில் தொடர்ச்சியான இடதுசாரி அரசாங்கங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டன. இந்த அரசாங்கங்கள் பிராந்தியத்தில் அதன் புவிசார் மூலோபாய ஆர்வத்தின் ஒரு பகுதியாக அமெரிக்க அரசாங்கத்தால் நிதியுதவி செய்யப்பட்ட சதிகளை எதிர்கொண்டன.*

*வரலாற்று ரீதியாக இவற்றில் **1954**குவாத்தமாலா ஆட்சிக் கவிழ்ப்பு, **1964** பிரேசிலிய ஆட்சிக்கவிழ்ப்பு, **1973** சிலி ஆட்சிக் கவிழ்ப்பு மற்றும் **1976** அர்ஜென்டினா ஆட்சிக்கவிழ்ப்பு ஆகியவை அமெரிக்க சதித் திட்டங்களால் நிகழ்த்தப்பட்டன.*

**ஆபரேஷன் கோண்டர்** (Operation Condor)

*இந்த ஆட்சிக்கவிழ்ப்புக்கள் அனைத்தும், அமெரிக்க அரசின் ஆபரேஷன் காண்டரின் (Operation Condor) ஒரு பகுதியாக, அமெரிக்கா வின் உளவு நிறுவனமான சிஐஏ (CIA) ஆதரவுடன் கடும்போக்கு வலதுசாரி இராணுவ சர்வாதிகாரங்களால் இறையான்மை உள்ள மக்களின் ஆட்சிகள் கைப்பற்றப்பட்டன.*

*அமெரிக்காவின் உளவு நிறுவனமான சிஐஏ ஆதரவுடைய கடும் போக்கு வலதுசாரி சர்வாதிகார ஆட்சிகளில், சட்டவிரோத அரசியல் கைதுகள், சித்திரவதைகள், அரசியல் காணாமல் போதல் மற்றும் குழந்தை கடத்தல் உட்பட பல மனித உரிமை மீறல்களை செய்தன. சர்வதேச அழுத்தத்தின் காரணமாக இந்த ஆட்சிகள் பலவும் வீழ்ச்சி யடையத் தொடங்கின. இவ் வலதுசாரி அரசுகள் கொடூரமான அட்டூழியங்களில் ஈடுபட்டதன் காரணமாக இலத்தீன் பொது மக்கள் அமெரிக்காவிற்கு எதிராக போராடினர். பல இலத்தீன் நாடுகள் மறை முக போரை எதிர்கொண்டன என்பது வரலாற்று உண்மையாகும்.*

**இடதுசாரித் தலைவர் லூயிஸ் டா சில்வா :**

*பிரேசில் இடதுசாரித் தலைவர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா தற்போது அதிபராகப் பதவியேற்றாலும், முன்னாள் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவும், அவரது ஆதரவாளர்கள் தங்கள் தோல்வியை ஏற்க தயாராக இல்லை. ஜனவரி **2003** முதல் டிசம்பர்*



*2010வரை அதிபராக இருந்த லூலா, 31அக்டோபர் 2022 அன்று நடந்த தேர்தலில் போல்சனாரோவை தோற்கடித்தார். அவர் பதவியேற்ற ஒரு வாரத்திற்குப் பிறகு, பிரேசில் நாட்டில் கலவரங்கள் தீவிரமாக வெடித்தன.*

*பிரேசிலின் புதிய அதிபராக லூயிஸ் பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிலையில் வாக்கு வித்தியாசம் குறைவாக இருந்ததால் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத போல்சனேரோ தனது ஆதரவாளர்களுடன் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.*

*நாட்டின் தலைநகரில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவை எதிர்க்கும் வகையில், தொடர்ந்தும் போல்சனாரோவின் ஆதரவாளர்கள் தலைநகரான பிரேசிலியாவில் அரசு கட்டிடங்களை சூரையாடி வருகின்றனர்.*

**புதிய அதிபராக பதவியேற்ற லூயிஸ் டா சில்வா :**

*புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவை எதிர்க்கும் வகையில், போல்சனாரோவின் ஆதரவாளர்கள் நாட்டின் தலைநகரான பிரேசிலியாவில் உள்ள அரசு கட்டிடங்களை சேதப்படுத்தியுள்ளனர். "பாசிச தாக்குதல்" என்று அழைக்கப்படும் இந்த தாக்குதலில் பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் நாடாளுமன்றம், அதிபர் மாளிகை மற்றும் உச்ச நீதிமன்ற கட்டிடங்களை சேதப்படுத்தின. தங்கள் தேர்தல் தோல்வியை ஏற்க மறுத்து வருகின்றனர்.*

**வன்முறையை ஊக்குவிக்கும் முன்னாள் அதிபர்:**

*கடும்போக்கு அரசியல்வாதியான முன்னைய அதிபர் போல்சனாரோவின் ஆதரவாளர்கள் வீடுகளை சேதப்படுத்தியது மட்டுமல்லாமல் அரசாங்க ஆயுதங்களையும் திருடியுள்ளனர். தலைநகரில் வன்முறை பரவியதை அடுத்து, போல்சனாரோ கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒரு ட்வீட்டில் அமைதியான ஆர்ப்பாட்டங்கள் ஜனநாயகத்தின் ஒரு பகுதி என்று வலியுறுத்தினார். இதற்கிடையில், சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்க தலைநகர் பிரேசிலியாவுக்கு தேசிய காவலர்களை அனுப்ப லூலா அவசரகால அதிகாரத்தை அறிவித்தார்.*

*பிரேசில் ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில், போல்சனாரோவின் ஆதரவாளர்கள் ராணுவம் அமைத்திருந்த பாதுகாப்பு வளையங்களை உடைத்துள்ளனர் என கூறப்பட்டுள்ளது. அந்நாட்டிலிருந்து, வெளிவரும் பல வீடியோக்களில், போல்சனாரோவின் ஆதரவாளர்களின் பெரும் கூட்டம் ஜனாதிபதி மாளிகையைச் சுற்றி பிரேசிலிய தேசியக் கொடியில் சூழ்ந்து கொண்டிருப்பதைக் காணலாம். அவர்களை கலைக்க காவல்துறை கண்ணீர் புகை குண்டுகளை வீசியது.*

*காவல் துறை அதிகாரிகள் குறைந்தது 1500 கலவரக்காரர்களை கைது செய்துள்ளனர். பாதுகாப்புப் படையினர் போராட்டக் காரர்களை கலைத்துள்ளனர், நாடாளுமன்றம், உச்சநீதிமன்றம் மற்றும் அதிபர் மாளிகையைச் சுற்றியுள்ள சூழ்நிலை கட்டுக்குள் உள்ளதாக கூறினாலும் தொடர்ந்தும் தீவிரமாக பதற்றம் தொடர்கிறது.*

**தோல்வியை ஏற்றுக்கொள்ளாத முன்னாள் அதிபர்:**

*இதற்கிடையே, பொல்சொனாரோவின் ஆதரவாளர்கள் பிரேசில் நாடாளுமன்றம், அதிபர் மாளிகை, உச்ச நீதிமன்றம் ஆகிய இடங்களுக்குள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டனர்.*

*அதேவேளை பிரேசிலில் நாடாளுமன்றம் உள்ளிட்ட இடங்களில் முன்னாள் அதிபர் ஜாயிர் பொல்சொனாரோவின் ஆதரவாளர்கள் அத்துமீறி நுழைந்ததற்கு அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*இடதுசாரி லூயிஸ் டா சில்வா அதிபராகத் தெரிவு செய்யப் பட்டதைத் பொல்சொனாரோவின் ஆதரவாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். அதிபர் டா சில்வா பதவி விலக வேண்டும் என்றும் ராணுவம் தலையிட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்து கின்றனர்.*



பொல்சொனாரோ ஆதரவாளர்களின் வன்முறை, ஃபாசிச (fascist) வெறிச்செயல் என்று அதிபர் டா சில்வா கூறியுள்ளார். பிரேசில் தலைநகரில் மத்திய அரசின் தலையீட்டுக்கு உத்தரவிட்ட அவர், சட்ட ஒழுங்கை நிலைநாட்ட அரசாங்கத்துக்குச் சிறப்பு அதிகாரம் தற்போது அளித்துள்ளார்.

முன்னாள் அதிபர் பொல்சொனாரோ தம்முடைய பேச்சின் மூலம் வன்செயல்களை ஊக்குவிப்பதாகத் திரு. டா சில்வா குற்றஞ்சாட்டினார்.

கடந்த வெள்ளிக்கிழமை (6 ஜனவரி) டா சில்வா பிரேசில் அதிபராகப் பொறுப்பேற்றார். அதற்குச் சற்று முன்னர் பொல் சொனாரோ புளோரிடா (Florida) புறப்பட்டுச் சென்றார். உண்மையில் அமொரிக்காவிற்கு தப்பிச் சென்றதாகவே கருதுகின்றனர்.

புதிய அதிபர் பதவியேற்கும்போது முன்னைய அதிபர் அவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பது பிரேசிலின் வழக்கம். ஆனால் பொல்சொனாரோ அந்த வழக்கத்தைப் பின்பற்றவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

**அமெரிக்காவின் கைப்பிள்ளை முன்னாள் அதிபர்:**

அமெரிக்காவிற்கு அருகில் இருக்கும் பிரேசிலில் வரலாறு காணாத வன்முறையை அந்நாடு தற்போது கண்டுகொண்டுள்ளது. இந்நிலையில் சகட்டுமேனிக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பிரேசில் நாட்டின் பாராளுமன்றத்தில் நடந்த வன்முறை சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறார். ஆயினும் அமெரிக்காவின் கைப்பிள்ளையே முன்னாள் அதிபரான பொல்சொனாரோ. தற்போது

அவர் புளோரிடா (Florida) புறப்பட்டுச் சென்றிருந்தாலும் உண்மையில் அமொரிக்காவிற்கு தப்பிச் சென்றதாகவே கருதுகின்றனர்.

மேலும் ஜோ பைடன் தன் ட்விட்டர் பக்கத்தில் பிரேசில் நாட்டின் ஜனநாயகத்தின் மீது நடந்த தாக்குதல் மற்றும் அமைதியாக அதிகாரத்தை மாற்றுவதை கடுமையாக கண்டிக்கிறேன் என்றும், அந்நாட்டின் ஜனநாயக நிறுவனங்களுக்கு முழுமையாக ஆதரவு தெரிவிக்கிறேன் எனவும் உலகின் காவலனாக தனது கண்துடைப்பு வார்த்தைகளை அள்ளிக் கொட்டியுள்ளார்.

பிரேசில் நாட்டின் புதிய அதிபர் தொடர்ந்து பணிபுரிய ஆவலாக இருக்கிறேன் என்று ஜோ பைடன் குறிப்பிட்டு இருந்தாலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இடதுசாரி அரசுகளின் வளர்ச்சியை அமெரிக்கா மிக கூர்மையாக அவதானித்துக் கொண்டுவருகிறது.

## ஆர்ஜென்டினா- குத்தாட்டம் போடும் அதிபர்:

### ஆர்ஜென்டினா அதிபர் தேர்தலில் வலதுசாரி வெற்றி..

### போக்லாந்து தீவுகள் முறுகல் நிலை முடிவுறுமா..



ஆர்ஜென்டினாவின் (Argentina) புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜேவியர் மிலி (Javier Milei) தனது வெற்றியை குத்தாட்டம் போட்டு கொண்டாடிய வீடியோ சமூக ஊடகத்தில் வைரலாகி வருகிறது.

அதிகாரப்பூர்வ தகவல்படி ஜேவியர் மிலி 56சதவீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார். இந்நிலையில் தனது வெற்றியை ஆர்ஜென்டினா நாட்டின் புதிய அதிபர் துள்ளல் ஆட்டம் போட்டு கொண்டாடும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

ஜேவியர் மிலி தேர்ந்தெடுக்கப்பட்டதை தொடர்ந்து

ஆர்ஜென்டினாவில் பல அரசியல் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆர்ஜென்டினா அதிபர் தேர்தலில் தீவிர வலதுசாரி ஆதரவாளரான ஜேவியர் மிலே 55.8% வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

ஆர்ஜென்டினாவில் முன்னைய அதிபர் ஆல்பெர்டோ பெர்னாண்டஸின் பதவிக்காலம் முடிவடைய உள்ளதால், அங்கு அதிபர் தேர்தலுக்கான முதல் சுற்று போட்டி கடந்த அக்டோபர் மாதம் 22ம் தேதியும், 2வது சுற்று போட்டி நவம்பர் 19இல் நடந்து முடிந்தன.

தற்போதைய ஆட்சியில் பொருளாதாரத் துறை அமைச்சராக இருக்கும் செர்ஜியோ மாசா ரினீயூவல் கட்சி சார்பில் அதிபர் தேர்தலில் போட்டியிட்டார். இவரை எதிர்த்து சுதந்திர கட்சியின் சார்பில் ஜேவியர் மிலே களம் இறங்கினார்.

தீவிர வலதுசாரி ஆதரவாளரான ஜேவியர் அரசு துறைகளின் எண்ணிக்கையைக் குறைத்து பணவீக்கத்தை கட்டுப் படுத்துவதாகவும் உறுதியளித்தார்.

இந்நிலையில், வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப் பட்டன. தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஜேவியர் மிலே 55.8% வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

பொருளாதார அமைச்சரான செர்ஜியோ 44.8% வாக்குகள் மட்டுமே பெற்றார். ஜேவியரின் வெற்றி, ஆர்ஜென்டினா 1983-ம் ஆண்டு ஜனநாயக நாடாக மாறிய பிறகு, நடத்தப்பட்ட அனைத்து கருத்துக்கணிப்புகளையும் மீறிய மாபெரும் வெற்றியாக கருதப் படுகிறது.

**குத்தாட்டம் போட்டு கொண்டாடிய அதிபர்**

ஆர்ஜென்டினாவின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஜேவியர் மிலி தனது வெற்றியை குத்தாட்டம் போட்டு கொண்டாடிய வீடியோ சமூக ஊடகத்தில் வைரலாகி வருகிறது.

ஆர்ஜென்டினா நாட்டில் சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலில் வலதுசாரி லிபர்டி கட்சியை சேர்ந்த ஜேவியர் மிலி வெற்றி பெற்று நாட்டின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஜேவியர் மிலி தனது தேர்தல் வாக்குறுதியில் இரண்டு முக்கிய உறுதியை வழங்கி இருந்தார். அதில் முதலாவது ஆர்ஜென்டினா இனி டொலர் தேசம், மற்றொன்று மத்திய வங்கி நீக்கம் என்பதாகும்.

ஆர்ஜென்டினாவின் தற்போதைய பணவீக்கம் 142 சதவீதமாக இருக்கும் நிலையில், ஆர்ஜென்டினாவின் பீசோ நாணயத்தை பயன்பாட்டில் இருந்து நீக்கி விட்டு அமெரிக்க டொலரை




அதிகாரப்பூர்வ பணமாக ஜேவியர் மிலி அறிவிக்கயுள்ளார்.

இவை ஆர்ஜென்டினாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய மாற்றம் ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது. மேலும் ஆர்ஜென்டினாவை டொலர் தேசமாக மாற்ற அந்த நாட்டின் மத்திய வங்கியை மூடுவதாகவும் ஜேவியர் மிலி தேர்தல் வாக்குறுதி அளித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தென் அமெரிக்காவில் 2 வது பெரிய நாடு:**

ஆர்ஜென்டினா தென் அமெரிக்காவில் இரண்டாவது பெரியதும் உலகில் எட்டாவது பெரிய நாடும் ஆகும். ஸ்பானிய மொழி பேசும் நாடுகளுள் இதுவே பெரியது.

உலக வங்கிக் குழு, உலக வணிக அமைப்பு ஆகியவற்றின் தொடக்ககால உறுப்பு நாடுகளுள் ஒன்று. அத்துடன் 15நாடுகள் குழு (சி-15), 20 முக்கிய பொருளாதாரங்கள் குழு ஆகியவற்றிலும் ஒரு நாடாக உள்ளது.

இலத்தீன் அமெரிக்காவின் மூன்றாவது பெரிய பொருளாதார வளமுள்ள நாடு. மனித வளர்ச்சி அடிப்படையில் (HDP) மிக உயர்ந்த தரநிலையிலும் இது உள்ளது. இலத்தின் அமெரிக்காவில், ஆர்ஜென்டினா ஐந்தாவது பெரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியை யும், மிகக்கூடிய வாங்கும் திறன் சமநிலையையும் கொண்டுள்ளது. ஆர்ஜென்டினா ஒரு பெரிய சந்தையாக இருப்பதாலும், பெரிய அளவு நேரடி வெளிநாட்டு முதலீடு உள்ளதாலும், மொத்த ஏற்றுமதிப் பொருட்களில் உயர் தொழில்நுட்ப உற்பத்திகளின் ஏற்றுமதி வீதம் காரணமாகவும், எதிர்கால வளர்ச்சிக்கான அடிப்படைகள்

*ஆர்ஜென்டினாவுக்கு உள்ளன என பொருளியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.*

**போக்லாந்து தீவு முறுகல் நிலை:**

*சர்ச்சைக்குரிய போக்லாந்து தீவுகளைச் (*Falkland Islands*) சுற்றிலும் பிரித்தானியா இராணுவ மயமாக்குதலில் ஈடுபட்டுள்ளது பற்றி ஐக்கிய நாடுகளில் தாம் முறையிடவிருப்பதாக ஆர்ஜென்டினா முன்பு முறையிட்டுள்ளது.*

*1982 ஆம் ஆண்டு போக்லாந்து போரின் பின்னர், ஆர்ஜென்டீனாவுக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையில் போக்லாந்து தீவுகள் தொடர்பாக அண்மைக் காலத்தில் முறுகல் நிலை உருவாகியுள்ளது.*

*மெர்க்கசூர் என்ற தென்னமெரிக்க வணிக நிறுவனம் போக்லாந்து கொடியுடன் செல்லும் கப்பல்களை தமது துறைமுகங் களூடாக செல்வதற்கு தடை விதித்திருந்தது.*

*போக்லாந்து மக்கள் பிரித்தானியர்கள். அவர்களது எதிர்காலத்தை அவர்களே தீர்மானிப்பார்கள். போக்லாந்து மக்கள் விரும்பினாலொழிய ஆர்ஜெண்டீனாவுடன் எவ்விதப் பேச்சுக்களிலும் தாம் ஈடுபடப் போவதில்லை, என பிரித்தானியா கூறியிருந்தது.*

*பிரேசில், உருகுவாய் போன்ற நாடுகள் இது விடயத்தில் ஆர்ஜென்டீனாவுக்கு ஆதரவாகச் செயல்படுகின்றன. ஏற்கனவே போக்லாந்து கப்பல்கள் தமது துறைமுகங்களுக்கு வர அவர்கள் தடை விதித்துள்ளனர். சிலியின் வெளியுறவுத்துறை அமைச்சரும் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தார்.*

**போக்லாந்து கருத்துக்கணிப்பு**

*பிரித்தானியா 1833ஆம் ஆண்டில் இருந்து போக்லாந்து தீவுகளைத் தம் வசம் வைத்திருக்கிறது. இத்தீவுகள் சுயாட்சி அரசைக் கொண்ட ஐக்கிய இராச்சியத்தின் கடல்கடந்த பிராந்தியமாகும். 1982ஆம் ஆண்டு ஆர்ஜென்டீனா இத்தீவுகளை ஆக்கிரமித்தது. இதைத் தொடர்ந்து ஆர்ஜென்டீனாவுக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கு மிடையே இரண்டு மாதங்களாக அறிவிக்கப்படாத போர் இடம் பெற்றது. இப்போரில் ஆர்ஜென்டீனாவின் தோல்வியுடன் தனது படைகளை அது பின்வாங்கிக் கொண்டது.*

*போக்லாந்து தீவு மக்கள் ஐக்கிய இராச்சியத்தின் நிருவாகத்தின் கீழ் தொடர்ந்திருப்பதற்குப் மிகப் பெரும்பான்மையாக வாக்களித் துள்ளார்கள்.*




*போக்லாந்து தீவில் 2013 இடம்பெற்ற பொது வாக்கெடுப்பில் 1517 பேர் வாக்களித்திருந்தனர். இது மொத்த வாக்காளர்களில் 90% ஆகும். மூவர் மட்டுமே எதிர்த்து வாக்களித்திருந்தனர். மொத்த மக்கள் தொகை 2900 ஆகும். ஆர்ஜென்டீனா இத்தீவுகளுக்கு உரிமை கோரியதை அடுத்தே இக்கருத்துக் கணிப்பு இடம்பெற்றது.*

*கருத்துக் கணிப்பு முடிவுகளை வரவேற்றுள்ள பிரித்தானிய அரசு, அனைத்து நாடுகளும் போக்லாந்து மக்களின் முடிவை அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது. போக்லாந்து தீவுகள் ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டுப் பிராந்தியமாக உள்ள தற்போதைய அரசியல் நிலை நீடிக்க வேண்டுமா? என இப்போது வாக்கெடுப்பின் போது மக்களிடம் கேட்கப்பட்டது.*

**போக்லாந்து போர் தோல்வி:**

*1982ஏப்ரல் 2 ஆம் நாள் ஆர்ஜென்டீனியப் படையினர் போக்லாந்து தீவுகளை முற்றுகையிட்டனர். இதனை அடுத்து பிரித்தானியாவின் கடற் படையினருடன் இரண்டு மாதங்கள் வரையில் இடம்பெற்ற சண்டையில் ஆர்ஜன்டீனா இறுதியில் சரணடைந்தது.*

*1982போக்லாந்து தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே போர் இடம்பெற்றது. பிரித்தானியா போக்லாந்து தீவுகளை மட்டுமல்லாது, தெற்கு ஜோர்ஜியா உட்பட ஏனைய தெற்கு அத்திலாந்திக் பிராந்தியங்களையும் கைப்பற்றியது. இச்சண்டையில் 255 பிரித்தானியப் படையினரும், 650 ஆர்ஜென்டீனியப் படையினரும் கொல்லப்பட்டனர். மூன்று பொதுமக்களும் கொல்லப் பட்டனர்.*

*1767ஆம் ஆண்டில் ஸ்பானிய இராச்சியத்திடம் இருந்து போக்லாந்து தீவுகளைப் பெற்றதாகவும், 1833 ஆம் ஆண்டில் பிரித்தானியா இத்தீவுகளைக் கைப்பற்றியதாகவும் ஆர்ஜென்டீனா கூறி வருகிறது. ஆனாலும், இத்தீவுகளில் தமது குடியேற்றம் முன்னரே ஆரம்பித்து விட்டதாகவும், அதனை விட்டுத்தர முடியாது எனவும் பிரித்தானியா கூறுகிறது. தொடர்ந்து தமது குடியேற்றம் இடம்பெற்று வந்ததாகவும், 1833 முதல் தாம் இதனை நிருவகித்து வருவதாகவும் பிரித்தானியா கூறுகிறது.*

# கியூபா – சோவியத் ஏவுகணை நெருக்கடி:

## உலகை அச்சுறுத்திய கியூப ஏவுகணைகள்..

## உக்ரேனிய போர் மீள அணு ஆயுத போருக்கு வழிகோலுகிறதா..




அறுபது ஆண்டுகளுக்கு முன்பாக உலகை அச்சுறுத்திய கியூபா ஏவுகணை நெருக்கடியினை போன்று, தற்போது நிகழும் ரஷ்ய - உக்ரேனிய போரும் அணு ஆயுத போரை நோக்கி செல்கின்றதா என ஐயமுற வேண்டியுள்ளது.

சரியாக அறுபது ஆண்டுகளுக்கு முன்பாக கியூபா ஏவுகணை நெருக்கடி (Cuban Missile Crisis) உலகை அச்சுறுத்திய அபாயகரமான காலகட்டமாகும்.

அதே நிலமை மீள வந்துவிட்டது போல இன்றைய ரஷ்ய - உக்ரேனிய போர், அணு ஆயுத போராக மாறும் சாத்தியம் உள்ளதாக

*சர்வதேச ஊடகங்கள் கணிப்பிடுகின்றன.*

*உண்மையில் கியூப ஏவுகணை நெருக்கடி எவ்வாறு எழுந்தது என்பதை மேற்குலக ஊடகங்களை மையப்படுத்தாமல், அதே வேளை சோவியத் தரவுகளை மட்டும் வைத்து வாதிக்காமல், ஓர் ஈழத் தமிழ் ஊடகவியலாளன் பார்வையில் இந்த வரலாற்று அவலத்தை அலசுகிறேன்.*

*அக்டோபர் 1962 இல் பதிமூன்று நாட்களாக உலகை உலுக்கிய சோவியத் ஒன்றியம் - கியூபாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே பனிப்போரின் உச்சக்கட்டமாக நிகழ்ந்த நிழல் மோதலே இந்த கியூப ஏவுகணை நெருக்கடி ஆகும்.*

*தற்போது ரஷ்ய - உக்ரேனிய போர் உக்கிரம் அடைந்துள்ள வேளையில் ரஷ்ய அதிபர் புட்டின் ரஷ்யாவின் "அணு ஆயுத தடுப்புப் படைகளை" ஒரு "சிறப்பு போர்ச் சூழலுக்கு" நகர்த்துமாறு தனது ராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளார் என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.*

*ரஷ்ய அணு ஆயுதங்களுக்கான தயார் நிலைகள் பற்றிய புட்டின் பயன்படுத்திய மொழி தெளிவாக இல்லை என்று மேற்கத்திய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவ்வாறே பிரிட்டன் உளவு அதிகாரி களும் கூறுகின்றனர்.*

**ரஷ்ய அணு ஆயுதங்கள் தயார் :**


*புட்டின் மிகக் குறைந்தபட்ச "நிலையான" எச்சரிக்கை மட்டத்திலிருந்து, அடுத்த "உயர்ந்த" நிலைக்கு உத்தரவிட்டுள்ளார்.*

*ஆனால் அது உறுதியாகத் தெரியவில்லை. ஒவ்வொரு அசைவும் ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான தயார்நிலையை அதிகரிக்கிறது.*

*மேலை நாடுகள் அணு ஆயுதத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க வல்லவை என்று அறிந்த புட்டின், உண்மையில் அதைப் பயன்படுத்த விரும்பமாட்டார் என்றும் ஒரு பொதுவாக கருது கின்றனர். இந்த அறிவிப்பு வெறும் வாய் வார்த்தை சவாலாக இருக்கும் என்றும் ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.*

***1962*** *கியூப ஏவுகணை நெருக்கடி:*

***1962*** *அக்டோபரில் நிலவிய கியூப ஏவுகணை நெருக்கடி நிலமை கட்டுப்பாட்டை மீறி நடந்திருந்தால் கூட பனிப்போர் உண்மையான போராக மாறி இருக்கும். அந்த போர் ஒரு அணுஆயுத போராக உருவெடுத்தும் இருக்கலாம். ஆணு ஆயுதங்களோடு*




மூன்றாம் உலகப் போருக்கு மிக நெருக்கத்தில் அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் சென்றன.

**பன்றிகள் விரிகுடா படையெடுப்பு :**

*1961 பன்றிகள் விரிகுடா படையெடுப்பு (Bay of Pigs Invasion) அமெரிக்க ராணுவத்தினரால் கியூபா மீது மேற்கொள்ளப்பட்ட ஒரு தோல்வியடைந்த தாக்குதல் ஆகும். இப்படையெடுப்பு பிடெல் காஸ்ட்ரோவின் அரசைக் கவிழ்ப்பதற்காக ஜோன் எஃப். கென்னடி அதிபராக வந்தவுடன் அமெரிக்காவினால் திட்டமிடப்பட்டு அவர்களின் முழுப் பங்களிப்பினால் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலை அடுத்து கியூபா-அமெரிக்க உறவுகள் மோசமாகப் பாதிக்கப்பட்டது.*

*ஏப்ரல் 15,1961 காலையில் மூன்று சிறியரக விமானங்கள் அண்டோனியோ மக்கேயோ விமான நிலையம், மற்றும் முக்கிய தளங்கள் மீது குண்டுகளை வீசின. தீவு முழுமையும் 48 மணிநேரத்துக்கு விமானத் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த முற்றுகையினால் காஸ்ட்ரோவுக்கு எதிராக மக்கள் அணி திரள்வார்கள் என சிஐஏ எதிர்பார்த்திருந்தது.*

*ஆனாலும், முற்றுகை தொடங்க முன்னரே உள்ளூர் அமெரிக்க ஆதரவாளர்கள் பலரை சிறைகளில் அடைத்தது காஸ்ட்ரோ அரசு. ஆனாலும் திட்டமிட்டபடி வான் தாக்குதல் எதுவும் நடத்தப்படவில்லை.*

**காஸ்ட்ரோவுக்கு எதிரான போர் :**

*1962 ஏப்ரல் 17 இல் 1511 பேரை ஏற்றிக் கொண்டு நான்கு கப்பல்கள் கியூபாவின் பிக்ஸ் விரிகுடாவில் இறங்கின. இவற்றுடன் சிஐஏயின் இரண்டு கப்பல்கள் தாக்குதல்களுக்குத் தேவையான இராணுவத் தளபாடங்களை ஏற்றி வந்தன. இந்த சிறிய படையினர் உள்ளூார் மக்களின் ஆதரவுடன் ஹவானாவுக்குள் புகுவதற்குத் திட்டமிட்டிருந்தனர்.*

*வான் தாக்குதலின் போது 10 கியூபா எதிராளிகளும், நான்கு அமெரிக்க விமானிகளும், 6 கியூபா விமானிகளும் இறந்தனர். ஏப்ரல் 21 இல் தாக்குதல் நிறைவடைந்தபோது 68 கியூப எதிர் புரட்சி யாளர்கள் கொல்லப்பட்டனர். மீதியானவர்கள் அனைவரும் உயிருடன் கைப்பற்றப்பட்டனர். கைப்பற்றப்பட்ட 1209 பேர்கள் மீதான விசாரணைகள் உடனேயே ஆரம்பிக்கப்பட்டு சிலர் தூக்கி லிடப்பட்டனர். மீதமானோர் 30ஆண்டுகள் வரையில் சிறைத்தண்டனை பெற்றனர்.*

*அமெரிக்காவுடன் 20 மாதங்கள் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையின் பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டு நாடுகடத்தப் பட்டனர். பதிலுக்கு கியூபா $53 மில்லியன் பெறுமதியான உணவு மற்றும் மருந்து வகைகளைப் பெற்றுக் கொண்டதும் வரலாறு அறிந்ததே.*

*ஆகஸ்ட் 1962ல் கியூப ஆட்சியை வீழ்த்த அமெரிக்கா செய்த பன்றிகள் விரிகுடா படையெடுப்பு, வெற்றியடையாத செயற்பாடு களுக்கு பிறகு கியூப அரசாங்கமும் சோவியத் ஒன்றிய அரசாங்கமும் சேர்ந்து இரகசியமாக ஏவுகணைத் தளங்களை அமைக்க ஆரம்பித்தன.*

*பெர்லின் முற்றுகை, சூயஸ் நெருக்கடி போன்ற முக்கிய பனிப் போர் நிகழ்வுகளுடன் இந்த நெருக்கடியும் சேர்ந்து பனிப் போரானது அணு ஆயுத போராக மாறும் அளவிற்கு சென்றது எனலாம்.*

**மாஸ்கோவை தாக்கும் ஏவுகணைகள்**

*1958ல் அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட 100க்கும் மேற்பட்ட அணு ஆயுதங்கள் ஐக்கிய இராச்சியத்திலும், 1961ல் இத்தாலி மற்றும் துருக்கியிலும் மாஸ்கோ வரை தாக்கும் வகையில் நிலைநிறுத்தப்பட்ட பிறகே இந்த சர்ச்சை ஆரம்பிக்கப்பட்டது.*

*துருக்கியில் சோவியத் யூனியனுக்கு அருகிலேயே ஜுபிட்டர் ஏவுகணைகளை நிறுத்தி இருந்த அமெரிக்காவுக்கு எதிராக, கியூபாவில் சோவியத் அரசு ரகசியமாக அணு ஆயுத ஏவுகணைகளை களமிறக்கியது.*




*14அக்டோபர் 1962 அன்று, அணுசக்தி ஏவுகணைகள் ரகசியமாக கியூபாவிற்கு அனுப்பப்பட்டது என்பதையும், சோவியத் நடுத்தர தொலைவு ஏவுகணை ஏவுதளங்களை உருவாக்குகிறது என்பதையும் நிஷரூபிக்கும் வகையில் ஒரு அமெரிக்க உளவு விமானம் புகைப்படம் எடுத்தது.*

*அக்காலகட்டத்தில் மிகப்பெரிய அணுசக்தி நாடாக இருந்த அமெரிக்காவால், கியூபாவில் சோவியத் ஏவுகணைகள் நிறுத்தப் படுவதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.*

**கியூபாவில் சோவியத் ஏவுகணை:**

*அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இருந்து 90 மைல் தொலைவில் உள்ள கியூபாவில், நடுத்தரத் தொலைவு ஏவுகணை ஏவுதளங்கள் கட்டுமானத்தில் இருப்பதை அமெரிக்கா கண்டறிந்த உடன் பதற்றம் மிகுவாக அதிகரிக்கத் தொடங்கியது.*

*இந்த தளங்களில் பல நடுத்தர மற்றும் இடைப்பட்ட தரத்தில் உள்ள அணு ஏவுகணைகள் (*MRBMs and IRBMs*) அமெரிக்க கண்டம் முழுவதையும் தாக்கும் வகையில் நிலைநிறுத்தப்பட்டன. அமெரிக்க பாதுகாப்பு உளவுத்துறை அக்டோபர் 14, 1962ல் அமெரிக்க வான் படையின் லாக்ஹெட் *A*-2 விமானம் கியூபாவில் சோவியத் ஒன்றிய ஏவுகணைத் தளங்கள் கட்டுமானத்தில் இருப்பதை படமெடுத்தது.*

**கியூபா மீது கடற்படை முற்றுகை:**

*1962அக்டோபர் 22 அன்று, அதிபர் கென்னடி கியூபாவின் மீது கடற்படை முற்றுகையை அறிவித்தார்.*

*சோவியத்தில் இருந்து எந்த வித ஆயுதங்களும் கியூபாவுக்கு கொண்டு வரப்படக் கூடாது என்றும், மீறி கொண்டு வரப்பட்டால், அதை அமெரிக்க கடற்படை பறிமுதல் செய்யும் வகையில் கியூபாவைச் சுற்றி போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட்டன.*

**பனிப்போரின் ஆபத்தான அத்தியாயம் :**

*13 நாட்கள் நீடித்த கியூப ஏவுகணை நெருக்கடியானது பதற்றமான நிலைக்குப் பிறகு, இறுதியில் பேச்சுவார்த்தைகள் மூலம் வெற்றி பெற்றது. ரஷ்ய ஏவுகணைகள் திரும்பப் பெறப்பட்டதன் மூலம் முடிவுக்கு வந்தது. பதிலுக்கு, துருக்கியில் இருந்து தங்கள் சொந்த ஏவுகணைகளை அகற்ற அமெரிக்கா இரகசியமாக ஒப்புக்கொண்டது. இது பனிப்போரின் மிக ஆபத்தான அத்தியாயம் நீக்கப்பட்டு, உலகம் அணு ஆயுத போரில் இருந்து தப்பியது எனலாம்.*

*அன்றைய இரு வல்லரசு நாட்டின் தலைவர்களும் எச்சரிக்கை யுடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்தனர். அக்டோபர் 26 அன்று, அமெரிக்கா கியூபாவை ஆக்கிரமிக்காது என உறுதியளித்தால் ஏவுகணைகள் திரும்பப் பெறப்படும் என சோவியத் கூறியது. அதைத் தொடர்ந்து துருக்கியில் இருந்து அமெரிக்க ஏவுகணைகளை அகற்றக் கோரும் மற்றொரு ஒப்பந்தம் இரகசியமாக ஒப்புக்கொள்ளப்பட்டது.*

**கியூபாவை தாக்க அமெரிக்க திட்டம்:**

*பிடல் காஸ்ட்ரோ ஆட்சிக்கு வந்த பிறகு கியூபாவை தாக்க அமெரிக்கா திட்டமிட்டிருந்தது என்றும், அந்த திட்டங்களை அவ்வப் போது புதுப்பிக்குமாறு அதிபர் கென்னடி தொடர்ந்து தனது ராணுவத்துக்கு அறிவுறுத்தி வந்தார் எனவும் இரகசிய தகவல்கள் கசிந்தன.*

*இத்தகவல்களின் படி கியூபாவில் வான்வழித் தாக்குதலைத் தொடர்ந்து, வடக்கில் 10 முதல் 15 நாட்களில் திட்டமிட்ட 250000 துருப்புக்களை கியூபாவில் தரையிறக்கி, காஸ்ட்ரோவை வெளியேற்றி நாட்டின் கட்டுப்பாட்டை கைப்பற்றுவது திட்டமாக இருந்தது.*

*இந்த முற்றுகையை முறியடிக்கவே கியூபாவில் அமெரிக்கா வுக்குத் தெரிந்ததை விட அதிகமான சோவியத் ஆட்களும், அணு ஆயுதங்களும் தரையிறக்கப் பட்டன.*

*இதை எல்லாம் விட முக்கியமாக ஏவுகணைகளை செலுத்துவதற்கான அதிகாரம், கியூபாவில் கள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு இருந்தது. எனவே படையெடுப்பை தடுத்து நிறுத்த சிறிய ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டு இருக்கலாம். அணு ஆயுத*




பரிமாற்றத்தைத் தொடங்க அதுவே காரணமாக இருந்திருக்கும்.

**குருசேவ் கென்னடிக்கு எழுதிய கடிதம்**

அவ்வேளையில் அமெரிக்கா அரசு விடாப்பிடியாக கியூபா விற்கு ஆயுதம் வழங்குவதை அனுமதிக்க முடியாது என அறிவித்தது. அதே நேரத்தில் சோவியத் ஒன்றியம், கியூபாவில் ஏற்கனவே அமைத்துள்ள மற்றும் அமைத்துக்கொண்டிருக்கும் ஏவுகணைத் தளங்களை அழிக்க வேண்டுமென வற்புறுத்தியது.

இதற்கு கிரம்ளின் ஒத்துக்கொள்ளா விட்டால், கியூபா மீதான இராணுவ மோதலை கென்னடி நிர்வாகம் எதிர்பார்த்திருந்தது. ஆயினும் சோவியத் ஒன்றியத்தின் நிக்கிட்டா குருசேவ் கென்னடிக்கு எழுதிய கடிதத்தில் உங்களின் சர்வதேச கடல் மற்றும் வான் வெளி முற்றுகையானது மனித குலத்தை அணு ஆயுதப் போர் எனப்படும் நரகத்தில் தள்ள வழிவகுக்கிறது என எழுதியிருந்தார். அதன் பின்னரே உலகின் மிக நெருக்கடியான சிக்கல்இறுதியில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு பெற்றது.

அன்று அபாயகரமான அணு ஆயுத போர் நடந்திருந்தால் 20 ஆம் நூற்றாண்டில் முழு உலகத்தின் தலைவிதியை மாற்றும் ஒரு நிகழ்வாக உருவெடுத்து இருக்கும். இதன் பின்னரே சர்வதேச ஆயுத ஒப்பந்தத்தை உருவாக்குவதில் வல்லரசுகள் முனைப்பாக இருந்தன.

**கியூப முற்றுகை நடந்திருந்தால் ?**

*1962* இல் கியூபாவை முற்றுகையிட்டு, மீதமுள்ள ஆயுதங்களை அமெரிக்கா அழித்திருந்தால், அபாயகரமான அணு

ஆயுத போர் நடந்திருந்திருக்கலாம்.

அதே வேளை அமெரிக்காவின் சில நகரங்களும் பதில் தாக்குதல்களை எதிர்கொண்டிருக்கலாம் என்கிற அபாயமும் இருந்தது.

சோவியத் படைகளும் எதிர் தாக்குதல் நடாத்தி இருந்தால், ஐரோப்பாவை ஒரு மோதலுக்குள் இழுத்திருக்கும். அதன் விளைவாக மூன்றாம் உலகப் போர் மற்றும் உலகளாவிய அணு ஆயுத தாக்குதலுக்கு வழி வகுத்திருக்கலாம். பல மில்லியன் மக்கள் அழிந்திருப்பார்கள்.

அப்படி அணு ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டு இருந்தால், சோவியத் யூனியன் மீது ஏவுகணை மழை பொழிந்திருக்கலாம். அப்போரில் அமெரிக்கா ஆதிக்கம் கூட செலுத்தி இருக்கலாம், இருப்பினும் அமெரிக்காவின் முக்கிய நகரங்கள் நிச்சயமாக அழிக்கப்பட்டு இருக்கும் என அன்றைய தகவல்களின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

இன்றும் அதே விதமான அணு ஆயுத ஆபத்தை உலகம் எதிர் கொண்டுள்ளது. உக்கிரமடையும் உக்ரேனிய போர் எத்திசையில் செல்லும் என்பதை எவராலும் கணிப்பிட முடியாது உள்ளது.

## இலத்தீன் அமெரிக்காவில் இடதுசாரி :

### இடதுசாரி பாதையில் பயணிக்கும் நாடுகள்..

### இலத்தீன் இடதுசாரி அரசுகளின் எழுச்சி..




இலத்தீன் அமெரிக்காவில் உள்ள 12க்கும் அதிகமான நாடுகளில் ஜனநாயக தேர்தல் முறை மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடதுசாரி அரசாங்கங்கள் தற்போது ஆட்சிப் பொறுப்பில் உள்ளன. எதற்காக இலத்தீன் அமெரிக்க நாடுகள் இடதுசாரி பாதையில் தொடர்ந்து முன்னேறுகின்றன என்பது அமெரிக்காவிற்கு வியப்பாக இருப்பினும், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசுகள் இவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இலத்தீனில் இடதுசாரி அரசு எழுச்சி:**

*இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இடதுசாரி அரசுகளின் எழுச்சியாக 2018 இல் மெக்சிகோவும், பின்னர் 2019 இல் அர்ஜென்டினாவும் எழுந்தன. மேலும் 2020 இல் பொலிவியாவில் இடதுசாரி அரசு நிறுவப்பட்டது.*

*அதன்பின்2021 இல் பெரு, ஹோண்டுராஸ் மற்றும் சிலி, பின்னர் கொலம்பியாவை தொடர்ந்து தற்போது பிரேசில் 2022 இல் இடதுசாரி அரசை அந்நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த மாதம் ஆரம்பத்தில் குவாத்தமாலா நாட்டில் பெர்னார்டோ அரேவலோ ஜனாதிபதித் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளார்.*

*வரலாற்றை திரும்பிப் பார்த்தால், பனிப்போரின் உச்சக்கட்ட காலத்தின்போதும், லத்தீன் அமெரிக்காவில் தொடர்ச்சியான இடதுசாரி அரசாங்கங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்த அரசாங்கங்கள் பிராந்தியத்தில் அதன் புவிசார் மூலோபாய ஆர்வத்தின் ஒரு பகுதியாக அமெரிக்க அரசாங்கத்தால் நிதியுதவி செய்யப்பட்ட எதிர்ப்புரட்சி சதிகளை எதிர்கொண்டன.*

*வரலாற்று ரீதியாக இவற்றில் 1954 குவாத்தமாலா ஆட்சிக் கவிழ்ப்பு, 1964 பிரேசிலிய ஆட்சிக்கவிழ்ப்பு, 1973 சிலி ஆட்சிக் கவிழ்ப்பு மற்றும் 1976 அர்ஜென்டினா ஆட்சிக்கவிழ்ப்பு ஆகியவை அமெரிக்க சதித் திட்டங்களால் நிகழ்த்தப்பட்டன என்பதும் உலகறிந்ததே.1960-1970களின் காலகட்டங்களின் போது, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஜனநாயக நடைமுறைகள் மிகவும் பலவீனமாக இருந்தது. மக்களின் தேர்தல் வழிப்பட்ட தீர்ப்புகளுக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளின் இராணுவங்கள் மதிப்பு அளித்தது இல்லை என்பதும் வரலாறே. தற்போது இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டு வரும் சமூக கட்டமைப்பு மாற்றங்கள் அரசியல் சித்தாந்த மாற்றங்களுக்கும் இதற்கு வித்திடுகிறது. மக்கள் தொகையில் பெரும்பாலானோர் நகரப் பகுதிகளில் வாழ்ந்து வருவதும், நகரக் கட்டமைப்புகள் அதி வேகமாக வளர்ந்து வருகின்றன.*

*தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக 20ஆம் நூற்றாண்டு வர்த்தகப் பரிமாணங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 21ஆம் நூற்றாண்டில் பல புதிய வளர்ச்சிப் பரிமாணங்களின் தோற்றத்திற்கு வித்திட்டுள்ளன. 21ஆம் நூற்றாண்டில் பிற்பகுதியில் பொதுவாக, இராணுவம் மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிப்பதோடு, இடையூறுகள் எதுவும் பாரியளவில் செய்வதில்லை.*



**ஆபரேஷன் கோண்டர்: (Operation Condor)**

இந்த ஆட்சிக்கவிழ்ப்புக்கள் அனைத்தும், அமெரிக்க அரசின் ஆபரேஷன் காண்டரின் (Operation Condor) ஒரு பகுதியாக, அமெரிக்கா வின் உளவு நிறுவனமான சிஐஏ (CIA) ஆதரவுடன் கடும்போக்கு வலதுசாரி இராணுவ சர்வாதிகாரங்களால் இறையான்மை உள்ள மக்களின் ஆட்சிகள் கைப்பற்றப்பட்டன.

அமெரிக்காவின் உளவு நிறுவனமான சிஐஏ ஆதரவுடைய கடும்போக்கு வலதுசாரி சர்வாதிகார ஆட்சிகளில், சட்டவிரோத அரசியல் கைதுகள், சித்திரவதைகள், அரசியல் காணாமல் போதல் மற்றும் குழந்தை கடத்தல் உட்பட பல மனித உரிமை மீறல்களை செய்தன. சர்வதேச அழுத்தத்தின் காரணமாக இந்த ஆட்சிகள் பலவும் வீழ்ச்சியடையத் தொடங்கின. இவ் வலதுசாரி அரசுகள் கொடூரமான அட்டூழியங்களில் ஈடுபட்டதன் காரணமாக இலத்தீன் பொது மக்கள் அமெரிக்காவிற்கு எதிராக போராடினர். பல இலத்தீன் நாடுகள் மறை முக போரை எதிர்கொண்டன என்பது வரலாற்று உண்மை யாகும்.

**கொலம்பியாவில் இடதுசாரி தலைமை:**

இலத்தீன் அமெரிக்க கண்டத்தில் உள்ள கொலம்பிய நாட்டின் மக்கள் தொகை 50 மில்லியன் ஆகும். மக்கள் தொகையின் படி இலத் தீன் அமெரிக்க கண்டத்தில் மூன்றாவது பெரிய நாடான கொலம்பியா உள்நாட்டுப் போர்களின் நீண்ட வரலாற்றைக் கொண்ட கொலம்பிய நாட்டில் பெட்ரோவின் வெற்றி அதி முக்கியத்துவம் வாய்ந்தது. 2022மே 29அன்று கொலம்பியாவில் அதிபர் தேர்தல் நடைபெற்றது.

தேர்தல் களத்தில் போட்டியிட்ட ஐந்து வேட்பாளர்களில்

ஒருவர் கூட 50 சதவிகிதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற வில்லை. எனவே, 2022ஜீன் 19 அன்று இரண்டாம் சுற்று தேர்தல் நடை பெற்றது. இந்த இரண்டாவது சுற்றில் இடதுசாரி முற்போக்கு சக்திகளின் கூட்டணி (Historic Pact ) சார்பாக குஸ்தவோ பெட்ரோ (Gustavo Petro) மற்றும் வலதுசாரி வேட்பாளராக ரொடோல்ஃபோ ஹெர்னாண்டஸ் (Rodolfo Hernandez) ஆகிய இருவருக்கும் இடையே போட்டி நிலவியது.

கொலம்பியாவில், M-19 எனும் ஆயுதக்குழுவில் கிளர்ச்சி யாளராக செயல்பட்ட பெட்ரோ சிறையில் அடைக்கப்பட்டு சித்ர வதைக்கு உள்ளானவர். பின்னர், மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். ஆயுதப் போராட்ட பாதையை கைவிட்ட அந்தக் குழு 1990ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது. அதன் நீட்சியாக M-19 ஜனநாயக முன்னணி என்ற அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்பட்டு, அரசியல் அமைப்பு மற்றும் நாடாளுமன்ற நடைமுறைகளில் அக்கட்சி பங்கேற்க தொடங்கியது. அந்நாட்டின் அரசியல் அமைப்பையே மாற்றி எழுதியது. கொலம்பியாவில் விகிதாச்சார தேர்தல் முறை நடைமுறை யில் உள்ளது. கொலம்பிய அதிபரின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகள் ஆகும். பல தசாப்தங்களாக அதி தீவிர இடதுசாரிக் குழுக்கள் மற்றும் ஆயுதப் போராட்ட பாதையை ஏற்றுச் செயல்பட்டுக் கொண்டிருந்த கிளர்ச்சியாளர்களின் தாக்குதலைக் கொலம்பிய நாட்டு அரசாங்கங்கள் எதிர்கொண்டு வந்தன.

கொலம்பிய புரட்சிகர ஆயுதப் படைப்பிரிவு ((FARC) 1964ஆம் ஆண்டில் கொலம்பிய கம்யூனிஸ்ட் கட்சியின் படைப் பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டது. நீண்ட ஆயுதப் போராட்டங்கள் மற்றும் மோதல்களுக்குப் பிறகு 2016ஆம் ஆண்டில் ஆயுதப் பாதையை நிராகரித்துவிட்டு அமைதிப் பாதைக்கு திரும்பிட FARC முடிவு செய்து, அரசாங்கத்துடன் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

குவாத்தமாலா இடதுசாரி வெற்றி:

இம்மாத ஆரம்பத்தில் ஊழல் எதிர்ப்புப் அரசியல்வாதியான பெர்னார்டோ அரேவலோ குவாத்தமாலாவின் ஜனாதிபதித் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளார்.

98சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், அரேவலோ 58 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தார். அவரது போட்டியாளரான சாண்ட்ரா டோரஸ் 36 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தார்.

குவாத்தமாலாவில் அவசரமான மாற்றத்திற்கான நம்பிக்கை களுக்கு மத்தியில் அரேவலோ வென்றார். ஊழலுக்கு எதிரான பிரச்சாரகர், வன்முறையைச் சமாளிப்பதாக உறுதியளிக்கிறார். பரவ

லான ஊழலைச் சமாளிக்கத் தவறிய தலைவர்களின் கோபத்தால் வாக்காளர்கள் மாற்றத்திற்கான ஒரு தீர்க்கமான தேர்வை மேற் கொண்டனர். 64 வயதான முன்னாள் இராஜதந்திரி மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் மகன், வன்முறை மற்றும் பாரிய உணவுப் பற்றாக்குறைக்கு மத்தியில் ஆட்சியைப் பிடித்துள்ளார்.

குவாத்தமாலாவில் 86 தேர்தல் பார்வையாளர்கள் குழுவைக் கொண்ட அமெரிக்க மாநிலங்களின் அமைப்பின் (OAS) முக்கிய பிரதிநிதி ஒருவர், வாக்களிப்பு சுமூகமாக நடந்ததாகக் கூறினார். எலடியோ லோயிசாகா, பணியின் தலைவர், தேர்தல் "அனைத்து கோரும் கடமைகளையும் நிறைவேற்றியுள்ளது" என்றார்.

**ஈக்வடார் அதிபர் வேட்பாளர் சுட்டுக் கொலை?**

ஈக்வடார் தேசத்தில் தேர்தல் பிரச்சாரத்தின் போது, அதிபர் வேட்பாளரான பெர்னாண்டோ விளாவிசென்ஷியோ என்பவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளது அந்நாட்டு மக்களை அதிர செய்துள்ளது. தென் அமெரிக்காவில் சுமார் ஒன்றே முக்கால் கோடி மக்கள் தொகை கொண்ட ஈக்வடார் தேசத்தில் போதைக் கடத்தல் மற்றும் ஆயுத மோதல்களால் இறந்தோர் எண்ணிக்கை கடந்த ஓராண்டில் மட்டும் 4800 பேர். இம்மாதம் ஆகஸ்ட் 20ம் திகதி தென் அமெரிக்காவின் வடமேற்கு முனையில் அமைந்திருக்கும் குடியரசு தேசம் ஈக்வடார் நாட்டின் அடுத்த அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற திட்டமிடப்பட்டு இருந்தது.

அதிபர் வேட்பாளர்களில் முன்னாள் பத்திரிகையாளரான பெர்னாண்டோ விளாவிசென்ஷியோ முக்கியமானவர். இவர் தனது இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் மும்முரமாக இருந்த போது, மக்கள் திரளின் மத்தியில் மர்ம நபரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

போதைக் கடத்தல் மற்றும் ஆயுதக் குழுக்களின் மோதலுக்கு பிரசித்தி பெற்றது ஈக்வடார். அயல் நாடுகளான பெரு மற்றும் கொலம்பியா தேசங்களுக்கு இணையாக, ஈக்வடாரில் போதை மாஃபியாக்களின் அதிகாரம் உச்சத்தில் உள்ளது. பத்திரிகையாளராக இருந்த காலம் தொட்டே, போதை அதிகாரங்களுக்கு எதிராக போராடி வரும் பெர்னாண்டாவுக்கு இந்த வகையில் எதிரிகள் அதிகம். தங்களுக்கு எதிரான ஆட்சியாளர்களை சகித்துக் கொள்ளாத போதை மாஃபியாக்கள் கூட்டணி வைத்துக் கொண்டு, அவர்களை தீர்த்து கட்டுவது வழக்கம்.

பெர்னாண்டோவை கொன்றவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என நிகழ்கால அதிபர் குயிலர்மோ லஸ்ஸோ உத்திரவாதம் அளித்திருக்கும் சூழலில், கூடுதல் வன்முறைகளைத்

*தடுக்க அதிபர் தேர்தலை ஒத்திப்போடுமாறும் மக்கள் மத்தியிலிருந்து கோரிக்கை எழுந்துள்ளது.*

**பிரேசில் இடதுசாரித் தலைவர்**

*பிரேசில் இடதுசாரித் தலைவர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா இவ்வருட ஜனவரியில் அதிபராகப் பதவியேற்றார். பிரேசிலின் புதிய அதிபராக லூயிஸ் பொறுப்பேற்கையில் வாக்கு வித்தியாசம் குறைவாக இருந்ததால் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத போல்சனேரோ தனது ஆதரவாளர்களுடன் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.*

*ஜனவரி 2003 முதல் டிசம்பர் 2010 வரை அதிபராக இருந்த லூலா, 31 அக்டோபர் 2022 அன்று நடந்த தேர்தலில் முன்னைய போல் சனாரோவை தோற்கடித்தார். அவர் பதவியேற்ற ஒரு வாரத்திற்குப் பிறகு, பிரேசில் நாட்டில் கலவரங்கள் தீவிரமாக வெடித்தன. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவை எதிர்க்கும் வகையில், போல்சனாரோவின் ஆதரவாளர்கள் நாட்டின் தலைநகரான பிரேசிலியாவில் உள்ள அரசு கட்டிடங்களை சேதப்படுத்தியுள்ளனர். பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவின் நூற்றுக்கணக்கான ஆதர வாளர்கள் நாடாளு மன்றம், அதிபர் மாளிகை மற்றும் உச்ச நீதிமன்ற கட்டிடங்களை சேதப் படுத்தின. தங்கள் தேர்தல் தோல்வியை ஏற்க மறுத்து வருகின்றனர்.*

**இலத்தீன் அமெரிக்க சமூக கட்டமைப்பு மாற்றங்கள்**

*தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக 20ஆம் நூற்றாண்டு வர்த்தகப் பரிமாணங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 21ஆம் நூற்றாண்டில் பல புதிய தொழில்நுட்ப பரிமாணங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளன. முன்பு 1960-1970களின் காலகட்டங்களின் போது, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஜனநாயக நடைமுறைகள் மிகவும் பலவீனமாக இருந்தது. மக்களின் தேர்தல் வழிப்பட்ட தீர்ப்புகளுக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளின் இராணுவங்கள் மதிப்பு அளித்தது இல்லை என்பதும் வரலாறே. 21ஆம் நூற்றாண்டில் பிற்பகுதியில் பொதுவாக, இராணுவம் மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிப்பதோடு, இடையூறுகள் எதுவும் பாரியளவில் செய்வதில்லை.*

*தற்போது இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டு வரும் சமூக கட்டமைப்பு மாற்றங்கள் அரசியல் சித்தாந்த மாற்றங்களுக்கும் வித்திடுகிறது. மக்கள் தொகையில் பெரும்பாலோர் நகரப் பகுதிகளில் வாழ்ந்து வருவதும், நகரக் கட்டமைப்புகள் அதி வேகமாக வளர்ந்து வருகின்றன.*

## வெனிசுலாவ் – ஹியுகோ சாவேஸ் ஆளுமை :

### ஏகாதிபத்தியத்தை மண்டியிட வைத்த மாவீரன்..

### வெனிசுலாவின் வீரப்புதல்வன் ஹியுகோ சாவேஸ்..



யோ ஸா சாவேஸ்" (நானே சாவேஸ்) என்று கண்களில் நீர் வழிய முழங்கியபடியே இருபது இலட்சம் மக்கள் தங்களுடைய தேசத்தின் வீரப்புதல்வனது உடலை ஏந்திச் சென்றனர். அரியதொரு தலைவனைத் திடீரென்று இழந்த அதிர்ச்சியில் தவிக்கின்றனர் வெனிசுலா மக்கள்.

**அமெரிக்காவை மண்டியிட வைத்த வீரப் புதல்வன்**

அமெரிக்காவை மண்டியிட வைத்த வீரப் புதல்வன் வெனிசுலாவின் அதிபர் ஹியுகோ சாவேஸ் மார்ச் 5-ஆம் தேதியன்று மறைந்தார். அவருக்கு வயது 58.

*தமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அதிபர் ஹியுகோ சாவேஸின் மரணச் செய்தியைக் கேள்வியுற்றுக் கதறியழுத வெனிசுலா மக்கள், "வாழ்வதும் மரிப்பதும் வேறுவேறல்ல. வாழ்தலின் மரித்தல் சிறந்ததாகவும் இருக்கலாம் வாழும் காலத்தில் செயவேண்டியதை ஒருவன் செய்திருந்தால்" என்று கூறினார் கியூபாவின் மறைந்த விடுதலைப் போராளியும் கவிஞனுமான ஜோஸ் மார்ட்டி.*

*இவ்வண்ணமே செய்ய வேண்டியதைச் செய்தவர்தான் சாவேஸ் என்ற போதிலும், அரியதொரு தலைவனைத் திடீரென்று இழந்த அதிர்ச்சியில் தவித்தனர் வெனிசுலா மக்கள்.*

**வெனிசுலாவின் எண்ணெய் வளம்**

*வெனிசுலாவின் எண்ணெய் வளம் முழுவதையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அமெரிக்காவின் எக்சான் மொபில் உள்ளிட்ட நிறுவனங்கள் தம் இலாபத்தில் ஒரு வீதத்தை மட்டுமே கொடுத்து வந்ததை 13 சதவீதமாக உயர்த்திச் சட்டமியற்றியவுடன், சாவேஸுக்கு எதிரான இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை அமெரிக்கா அரங்கேற்றியது. ஆனால், உலகம் முழுவதும் பல நூறு ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்திய அனுபவம் கொண்ட அமெரிக்கா, வெனிசுலா வில் மண்ணைக் கவ்வியது. பல்லாயிரக்கணக்கான மக்கள், குறிப்பாகப் பெண்கள் இராணுவத்தை முற்றுகையிட்டுப் பணிய வைத்தனர். 28மணி நேரத்தில் ஆட்சிக்கவிழ்ப்பு தோற்றது. சாவேஸ் மீண்டும் பதவியில் அமர்ந்தார். தமக்குச் சொந்தமான எண்ணெய் நிறுவனங் களில் வேலை நிறுத்தத்தை அமெரிக்க முதலாளிகளே தூண்டி விட்டனர். பொருளா தாரம் நிலைகுலைந்தது. உள்நாட்டிலேயே மக்களுக்கு எரிபொருள் இல்லை. "முதலாளிகளிடம் பணியாதே சாவேஸ். நாங்கள் தாக்குப் பிடிக்கிறோம்" என்று கூறி அத்தனை துன்பங்களையும் சகித்துக் கொண்டார்கள் மக்கள்*

**அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பின் சின்னம் :**

*அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பின் வலிமையான குறியீடாக சாவேஸ் இருந்தார். சாவேஸின் மீது கொலைவெறி கொள்வதற்கான எல்லா முகாந்திரங்களும் அமெரிக்காவுக்கு இருந்தன.*

*2001-இல் இராக்கிற்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதித்து, சதாமுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று உலக நாடுகள் அனைத்தையும் அமெரிக்கா மிரட்டி வைத் திருந்தபோது, சாவேஸ் ஈராக் சென்றார். அப்போது புஷ் கண்டனம் தெரிவித்தபோது, "வெனிசுலா இறையாண்மை கொண்ட ஒரு நாடு*



*என்பதை புஷ்க்கு நினைவு படுத்துகிறேன்" என்று அலட்சியமாக பதிலளித்தார். ஆப்கான், இராக் ஆக்கிரமிப்புகளை வெளிப்படையாக எதிர்த்துக் குரல் கொடுத்தார். 2008-இல் காசாவின் மீது இசுரேல் படை யெடுத்த மறுகணமே, தூதரக உறவைத் துண்டித்துக் கொண்டார் அவர்.*

**ஏழைகளுக்காகப் போரிட்ட சாவேஸ் :**

*1954-இல் மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்த அவர், இளம் வயதிலேயே இராணுவத்தில் சேர்ந்தவர் சாவேஸ். இராணுவத்தில் சேர்ந்தவுடன், செங்கொடி இயக்கம் என்றழைக்கப்பட்ட மாவோயிஸ்டு கொரில்லாக்களை ஒடுக்குவதற்கான படைப்பிரிவுக்குத் தான் அனுப்பப்பட்டார். ஏழைகளுக்காகப் போரிட்ட மாவோயிஸ்டு கள் மீது அரசு ஏவிய சித்திரவதைகளும் படுகொலைகளும் அவரைச் சிந்திக்கத் தூண்டின.*

*1989-இல் சர்வதேச நாணய நிதியத்தின் ஆணைக்கேற்ப வெனிசுலாவில் அதிரடியாக அமல்படுத்தப்பட்ட மானியவெட்டுகள் மற்றும் தனியார்மய நடவடிக்கைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த மக்கள் போராட்டம் ஒடுக்கப்பட்டு, நாடு முழுவதும் 3000 பேர் கொல்லப்பட்டனர்.*

*1973-இல் சிலியில் நிகழ்ந்த ஆட்சிக்கவிழ்ப்பு, அலண்டே கொலை, இலத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்திலும் அமெரிக்கா வால் திணிக்கப்பட்ட இராணுவ சர்வாதிகார ஆட்சிகள் என்ற பின் புலத்தில் தென் அமெரிக்கக் கண்டம் முழுவதும், அமெரிக்க எதிர்ப்பும் சோசலிச நாட்டமும் கொண்ட பலவிதமான ஆயுதக் குழுக்கள் தோன்றியிருந்தன.*

**1998 இல் அதிபராக வெற்றி:**

*அத்தகைய குழுவொன்றை இராணுவத்திற்குள் சாவேஸூம் உருவாக்கியிருந்தார். 1992-இல் ஒரு ஆட்சிக்கவிழ்ப்பை நடத்த முயன்றும் தோற்றார். "தோழர்களே, துரதிருஷ்டவசமாக எங்கள் இலட்சியத்தில் வெற்றி பெற இயலவில்லை இப்போதைக்கு" என்று தொலைக்காட்சியில் பேசினார் சாவேஸ். "இப்போதைக்கு" என்ற அந்த ஒரு சொல் மக்கள் நினைவில் பதிந்திருந்தது. சிறைத்தண்டனை முடிந்து வெளியே வந்த பின்னர், 1988 -ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் போட்டியிட்ட சாவேஸ் வெற்றி பெற்றார்.*

**சாவேஸின் வெற்றிக்கு காரணம்:**

*நாட்டின் எண்ணெய் வளம் தந்த வருவாயை மக்கள் நலத்துக்குப் பயன்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியதுதான் சாவேஸின் வெற்றிக்கு காரணம் ஆகும்.*

*2005-இலேயே நூறு விகித கல்வியறிவு சாதிக்கப்பட்டு விட்டது. மக்களுக்கு உணவு உத்திரவாதம் செயப்பட்டிருக்கிறது. சுமார் 3 இலட்சம் பேருக்கு நிலம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான கூட்டுறவுக் கழகங்கள் எல்லாத் துறைகளிலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. கியூபாவிலிருந்து சுமார் 25000 மருத்துவர்கள் பணியிலமர்த்தப்பட்டு மக்களுக்கு தரமான மருத்துவம் இலவசமாக வழங்கப்படுகிறது. முதல் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரையில் கல்வி இலவசமாக வழங்கப்படுகிறது. வீடற்றவர்களுக்கு 5 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.*

**வெனிசுலாவில் வீடற்றவர்களே இல்லை !**

*வெனிசுலாவில் வீடற்றவர்களே இல்லை என்று கூறும் விதத்தில், சாவேஸின் ஆட்சியில் 6 ஆண்டுகளில் மேலும் 20 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டன. மற்ற உற்பத்தி சார்ந்த உழைப்புகளைப் போலவே பெண்களின் குடும்ப உழைப்புக்கும் ஊதியம் வழங்கப் படவேண்டும் என்று கூறி, குடும்ப உழைப்பில் ஈடுபடும் பெண்களுக்கு அரசு ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.*

*ஏழை, எளிய உழைக்கும் மக்கள் மீது இயல்பிலேயே அவரிடம் ததும்பிய நேசத்தையும், உண்மையான அக்கறையையும் அவரது எதிரிகள்கூட மறுக்க முடிந்ததில்லை. சாவேஸ் மக்களுடன் நேருக்கு நேர் உரையாடி, அவர்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் "ஹலோ பிரசிடென்ட்" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி இதற்கு சான்றாக அமைந்தது.*

*கல்வி, மருத்துவம் போன்றவற்றை மக்களின் அடிப்படை உரிமைகளாக சாவேஸ் மாற்றியதை எதிர்க்கவும் முடியாமல், இத்துறைகளிலிருந்து தனியார் முதலாளிகள் விரட்டப்பட்டதை ஏற்கவும் முடியாமல் தவித்தனர் அமெரிக்க சார்பு முதலாளிகள், "மாதம் 450 டாலர் தருகிறோம். நீங்கள் விரும்பிய வண்ணம் தரமான சேவையை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளலாம்" என்று "உங்கள் பணம் உங்களை கையில்" திட்டத்தைப் போலவே தனியார் மயத்தின் தந்திரத்தை கடைவிரித்துப் பார்த்தனர். மக்கள் மசிய வில்லை.*

**வெனிசுலா மருத்துவத் துறை:**

*சாவேஸ் மருத்துவ சேவைகளைத் தேசியமயமாக்கினார். சாவேஸின் திட்டங்கள் வெனிசுலாவின் கஜானாவைக் காலியாக்கி விடும் என்றும் பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் முதலாளித்துவ ஊடகங்கள் கூக்குரலிட்டுப் பார்த்தன.*

*வெனிசுலாவின் பொருளாதாரம் கடந்த பத்து ஆண்டுகளில் சராசரியாக 5.8% வளர்ச்சியைக் கண்டது. மானியவெட்டு, மக்கள் மீது வரிவிதிப்பை அதிகப்படுத்துவது, தனியார்மயம் போன்ற வழி முறைகள் மூலம்தான் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும் என்ற சர்வதேச நிதி நிறுவனங்களின் தீர்வை சாவேஸ் பொய்ப்பித்தார்.*

*எண்ணெய், மின்சாரம், தொலைபேசி, சிமெண்டு உற்பத்தி உள்ளிட்ட கேந்திரத் தொழில்துறைகளை பொதுச்சொத்தாக்குவது, மற்ற தென் அமெரிக்க நாடுகள் மற்றும் ஆசிய ஆப்பிரிக்க நாடு களுடனான வணிகத்துக்கு முதன்மை முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் வணிகத்துக்கு அமெரிக்க-ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்திருப் பதிலிருந்து விடுவிப்பது, தென் அமெரிக்காவைத் தனது சுதந்திர வர்த்தக வலையத்துக்குள் கொண்டு வர முயன்ற அமெரிக்காவின் சதியை முறியடித்து, தென் அமெரிக்கக் கண்டத்தின் நாடுகளுக்கான தனி வர்த்தக வலையத்தை உருவாக்கியது சாவேஸ் நிகழ்த்திய சாதனைகளாகும்.*

**சாவேஸ் நிகழ்த்திய சாதனைகள்:**

*உலக வங்கிக்குப் போட்டியாக தென் அமெரிக்க நாடுகளுக் கான ஒரு பொது வங்கியை உருவாக்கியது, தேசிய எல்லைகளைக் கடந்து தென் அமெரிக்கக் கண்டம் என்ற முறையில் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிராக நாடுகளை ஒன்றுபடுத்தியது,*

*வணிகம்-இலாபம் என்ற முதலாளித்துவ அளவுகோல்களை நிராகரித்து வெனிசுலாவின் எண்ணெய், எரிவாயுவை கியூபாவுக்கும்*

பிற தென் அமெரிக்க நாடுகளுக்கும் மலிவு விலையில் வழங்கியது போன்றவையெல்லாம் மிகவும் குறுகிய காலத்தில் சாவேஸ் நிகழ்த்திய சாதனைகள் ஆகும். அமெரிக்க ஆதரவுடன் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்து வெனிசுலா மக்கள் கார்கஸ் நகரில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் பின்னர் வெனிசுலா இராணுவத்தால் கைது செய்யப் பட்டிருந்த சாவேஸ், மக்களின் போராட்டத்தையடுத்து விடுதலை செய்யப் பட்டார். இவையனைத்தும் வெனிசுலாவின் முதலாளித்துவ அரசமைப்புக்கு உட்பட்டு, முதலாளித்துவக் கட்சிகளையும், பெரும் தனியார் முதலாளிகளையும், அவர்களால் அவர்களுக்காக உருவாக் கப்பட்ட அரசு இயந்திரத்தையும், 95% அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஊடகங்களையும் வைத்துக்கொண்டே செயப்பட்ட சீர்திருத்தங்கள் ஆகும்.

**வெனிசுலா ஆட்சிக் கவிழ்ப்பு:**

மென்மேலும் மக்களிடம் செல்வதன் மூலமும், தங்களுடைய கோரிக்கைக்கான போராட்டத்தில் அவர்களையும் ஈடுபடுத்துவதன் மூலமும் சாவேஸ் அவற்றை எதிர்கொண்டிருக்கிறார்.

முதலாளித்துவத்தைக் கட்டுப்படுத்துகின்ற, அதிகார வர்க்கத்தின் அதிகாரங்களைக் குறைத்து மக்களின் அதிகாரத்தை அதிகப்படுத்துகின்ற சட்டங்கள், திட்டங்களைக் கொண்டுவரும் போது, அவை குறித்துத் தேசம் தழுவிய வாக்கெடுப்பு நடத்தி முடிவெடுப்பது என்ற முறையின் மூலம், எதிரிகளை அரசியல்ரீதியில் பலமிழக்கச் செய்திருக்கிறார்.

தேர்ந்தெடுத்தவர்களைத் திருப்பி அழைக்கும் உரிமை என்பதை வெனிசுலாவின் அரசியல் சட்டத்தில் சாவேஸ்தான் அறிமுகப்படுத் தினார். சாவேஸ் ஒரு சர்வாதிகாரி என்ற அவதூறு பிரச்சாரத்தில் தொடங்கி ஆட்சிக்கவிழ்ப்பு வரையில் அனைத்தையும் முயன்று பார்த்த அமெரிக்கா திருப்பி அழைக்கும் உரிமையையும் பயன்படுத்திப் பார்த்தனர். அதிலும் தோற்றனர்.

**சாவேஸின் உற்ற தோழர் நிக்கோலஸ் மாதுரோ:**

வெனிசுலாவின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சாவேஸின் உற்ற தோழர் நிக்கோலஸ் மாதுரோ.

சாவேஸ் தன்னை ஒரு சோசலிஸ்டு என்றும் கிறித்தவர் என்றுமே சொல்லிக் கொண்டார். அவருடைய கட்சி பல்வேறு விதமான குட்டி முதலாளித்துவ, தேசியவாத, சோசலிச சக்திகளின் கூட்டணியாகவே இருந்தது.

*19-ம் நூற்றாண்டைச் சேர்ந்த வெனிசுலாவின் விடுதலைப் போராளியான சைமன் டி பொலிவாரையே தனது வழிகாட்டியாக அவர் அறிவித்துக் கொண்டிருந்தார்.*

*ஏகாதிபத்திய எதிர்ப்பு, தென் அமெரிக்க ஒற்றுமை, சகோதரத்துவம் ஆகியவை இணைந்த, கம்யூனிசத்தின்பால் பெரு மதிப்பு கொண்ட ஒரு கண்ணோட்டம் சாவேஸை வழிநடத்தியது.*

*தான் படைக்க விரும்புவது 21 -ஆம் நூற்றாண்டின் சோசலிசம் என்று அவர் கூறிக்கொண்ட போதும், அதனை அவர் விளக்கவு மில்லை. ரசிய சீன சோசலிசங்களுக்கு எதிராக நிறுத்தவுமில்லை.*

*“சாவேஸ் ஒரு புரட்சிகரமான தேசியவாதி. அவருடைய ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியத்தின் புரட்சிகரமான தன்மை அவரை சோசலிசத்தை நோக்கித் தள்ளிக்கொண்டே இருந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, தேசிய எல்லை கடந்து தென் அமெரிக்க கண்டத்தை ஒற்றுமைப்படுத்த முயன்ற பொலிவார், ஜோஸ் மார்டி ஆகியோர் விதைத்த மரபு சாவேஸின் பின்புலமாக அமைந்தது” என்று மதிப்பிடுகிறார் அஜாஸ் அகமது.*

*தனது கொல்லைப்புற சோதனைச்சாலையாக தென் அமெரிக்க நாடுகளைப் பயன்படுத்தி வரும் அமெரிக்கா, 1970-களில் தனது கைப்பாவை ஆட்சிகளைப் பல நாடுகளில் நிறுவியதுடன், 1980-களிலேயே தனியார்மய தாராளமயக் கொள்கைகளை அந்த நாடுகளில் சோதிக்கத் தொடங்கியது.*

*இதன் விளைவாக, 1980-களின் இறுதியில், ஆசிய நாடுகளில் புதிய தாராளவாதக் கொள்கை தீவிரமாக கடைவிரிக்கப்பட்ட காலத்தில், அங்கே “ஏகாதிபத்தியங்களின் கடையை மூடுவதற்கான” மக்கள் கலகங்கள் வெடிக்கத் தொடங்கி விட்டன.*

**ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆளுமை:**

*இந்தப் பின்புலம் வலிமையானதொரு கம்யூனிஸ்டு கட்சியை அதிகாரத்துக்குக் கொண்டுவரும் அளவுக்கு மக்களைப் புரட்சிகரமான மாற்றத்துக்கு உள்ளாக்கவில்லை என்ற போதிலும், சாவேஸ் என்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆளுமையைத் தோற்றுவித்திருக்கிறது.*

*“நானே சாவேஸ்” என்ற கதறியபடியே அவரது உடலைப் பின்தொடர்ந்து செல்லும் வெனிசுலாவின் உழைக்கும் மக்கள், சாவேஸ் தங்களைக் காலத்தால் முந்திக் கொண்டுவிட்டதைத் தம் கண்ணீரால் உணர்த்தியுள்ளனர்.*

# பொலிவியா – சே குவேராவின் இறுதிக் கணங்கள் :

## எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்து..

## எல்லா யுகங்களிலும் ஒளிரும் புரட்சிமுகம்..



ஒரு மாவீரனின் இறுதி மூச்சுக்கான வரலாறு எழுதப்பட தயாராகி கொண்டிருக்கின்றது என்பதை எவருமே அறிந்திருக்க வாய்ப்பில்லை.

**மக்களின் விடிவிற்காக :**

இலத்தீன் அமெரிக்க மக்களின் விடிவிற்காக ஒரு புரட்சி வீரனின் இறுதிக்கணங்கள் இங்கே தான் எழுதப்படப் போகிறது என்பதை யாருமே அறியவில்லை.

***1966*** ம் ஆண்டு மார்ச் மாதம் காங்கோவை விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டதன் பின்னர் மார்ச் முதல் ஜூன்

*வரையிலான கால கட்டத்தில் உருகுவே, பிரேஸில், பராகுவே, ஆர்ஜெண்டைனா, பொலிவியா நாடுகளில் பயணம் செய்தார் அந்த புரட்சியின் ஒளிர்முகம்.*

*1966 ம் ஆண்டின் கடைசிகளில் கொரில்லாப் போரை வழி நடத்தும் பொருட்டு பொலிவியா நாட்டுக்குள் நுழைந்த அந்த மாவீரன் அங்கு நிலவிய சமூக மற்றும் பொருளாதார நிலைகளும் எந் நேரமும் அங்கு புரட்சி வெடிக்க சாதகமாக இருந்தது. அத்துடன் பொலிவியா ஐந்து பிற நாடுகளுடன் தன் எல்லையை பகிர்ந்து கொண்டிருந்தது . பொலிவியாவில் கொரில்லாப் போராட்டம் வெற்றி பெறுமேயானால் அதை மற்ற ஐந்து நாடுகளுக்கும் பரவச் செய்துவிடலாம் என்றே அவர் நினைத்தார்.*

**பொலிவியாவில் புரட்சி :**

*எதற்காக பொலிவியா நாட்டைத் தேர்ந்தெடுத்தார் என்றால், அமெரிக்கா பொலிவியாவைவிட கரிப்பியன் தீவு நாடுகளே தங்கள் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கக்கூடும் என்று நம்பியதும், அதனால் அமெரிக்காவின் பார்வை பொலிவியா மீது அவ்வளவு தீர்க்கமாக விழவில்லை என்பதும் ஒரு காரணமாகும். பொலிவியாவில் நடந்த கொரில்லாப் புரட்சியின் போது பொலிவியக் காடுகளில் நீண்ட காலமாக மக்களோடு மக்களாக பதுங்கி இருந்து மக்களுக்காக மரணத்தை மகிழ்வோடு ஏற்ற மாவீரனே "சே குவாரா"!*


*மிகுந்த மனவேதனையுடன் ஆஸ்துமாவும் சேர்ந்து "சே"யை வாட்டி வதைத்தது. போதிய வீரர்கள் இல்லாதது மற்றும் உணவின்மை போன்ற பிரச்னைகளுடன் "சே" காடுகளில் அலைந்தார். சேயை தேடித் திரிந்த சி.ஐ.ஏ. ஏற்கனவே பொலிவியாவுக்குள்ளும் புகுந்து விட்டது.*

*புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படு கின்றார்கள் எனும் சே குவேராவின் கூற்றுக்கிணங்க மக்களின் நலனுக்காக தன்னையே தியாகித்த வீரன் தான் சே குவாரா.*

*இப்பூமிப் பந்தில் பலர் உதிக்குன்றனர், பலர் மறைகின்றனர். ஆயினும் ஒருசிலரே இன்றுவரை நீடித்து நிலைத்து சாதனை படைக்கிறார்கள். அந்தவகையில் வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பதிக்கப்பட்ட பெயரில் ஒன்றே சே குவேரா.*

**மருத்துவ பட்டதாரி :**

*1928 ஜீன் 14இல் ஆர்ஜென்டீனா, ரொசாரியோவின் செல்வந்த குடும்பத்தில் பிறந்து, ஒரு மருத்துவராக பட்டம் பெற்ற இவர் நினைத்திருந்தால் தன் காலம் முழுவதும் வசதியான வாழ்க்*



கையை மேற்கொண்டிருக்க முடியும். ஆனால் அனைத்தையும் துறந்து ஒடுக்கப் பட்ட மக்களுக்காக அதுவும் வேறு நாட்டு மக்களுக்காக போராடிய இவரது போராட்டம் அளப்பரிய ஒன்றாகும். பூமியின் நடுவினில் ஆழப்பதிந்த பெயர் பெற்ற சேகுவாரா தனது இறுதிக் கணங்கள் கூட ஒரு பரட்சி வீரனின் உன்னத தியாகத்தை உலகறியச் செய்தது.

**'சே'யின் இறுதிக் கணங்கள் :**

*1967அக்டோபர் 8 தென் அமெரிக்கச் சரித்திரத்தில் ஓர் இருண்ட தினம். காலை 10.30 யூரோ கணவாயை ஆறு கெரில்லா வீரர்களுடன் “சே” கடந்து செல்கிறார். வழியில் தென்பட்ட ஆடு மேய்க்கும் பெண்ணின் மேல் பரிதாபப்பட்டு ஐம்பது பெஸோக்களை பரிசாகத் தருகிறார்.*

*நண்பகல் 1.30 அந்தப் பெண் பொலிவிய ராணுவத்துக்கு “சே”வின் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுக்கிறாள். அலறிப் புடைத்துப் பறந்து வந்த பொலிவிய ராணுவம் சுற்றி வளைத்துச் சரமாரியாகச் சுடத் தொடங்குகிறது. பதிலுக்கு கெரில்லாக்களும் துப்பாக்கியால் சுடுகின்றனர்.*

*பிற்பகல் 3.30காலில் குண்டடிபட்ட நிலையில், தன்னைச் சுற்றித் துப்பாக்கியுடன் சூழ்ந்த பொலிவிய ராணுவத்திடம், “நான்தான் “சே”. நான்இறப்பதைக் காட்டிலும், உயிருடன் பிடிப்பது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்” என்கிறார்.*

*காலில் குண்டு அடிபட்ட நிலையில் சே குவேரா மாலை 5.30 அருகிலிருந்த லா ஹிகுவேராவுக்கு வீரர்கள் கைத்தாங்கலாக சேவை*

அழைத்து வருகின்றனர்.

அங்கிருக்கும் பழைய பள்ளிக்கூடம் ஒன்றில் “சே“ கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் சிறைவைக்கப்படுகிறார்.

இரவு 7.00 'சே பிடிபட்டார்” என சி.ஐ.ஏவுக்குத் தகவல் பறக்கிறது.. அதே சமயம், “சே” உயிருடன் இருக்கும் போதே இறந்துவிட்டதாகப் பொய்யான தகவல் பொலிவிய ராணுவத்தால் பரப்பப்படுகிறது. தனக்கு உணவு வழங்க வந்த பள்ளி ஆசிரியையிடம், “இது என்ன இடம்?” என்று “சே” கேட்கிறார். பள்ளிக்கூடம் என அந்தப் பெண் கூற, “பள்ளிக்கூடமா... ஏன் இத்தனை அழுக்காக இருக்கிறது?” என வருத்தப்படுகிறார். சாவின் விளிம்பிலும் “சே”வின் இதயத்தை எண்ணி அப்பெண் வியந்து போகிறார்.

**அக்டோபர் 9 அதிகாலை 6.00**

பள்ளிக்கூட வளாகத்தில் ஒரு ஹெலி காப்டர் வட்டமடித்தபடி வந்து இறங்குகிறது. அதிலிருந்து சக்தி வாய்ந்த ரேடியோ மற்றும் கேமராக்களுடன் ஃபெலிக்ஸ் ரோட்ரிக்ஸ் எனும் சி.ஐ.ஏ. உளவாளி இறங்குகிறார்.

பிடிபட்டிருப்பது “சே”தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக்கிறது. “சே”வின் டைரிகள் மற்றும் உடைமைகள் கைப்பற்றப்படு கின்றன. தான் கொண்டுவந்த கேமராவில் “சே”வை பல கோணங்களில் புகைப் படங்கள் எடுக்கிறார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ்துவைப் போலக் காட்சி தரும் “சே”வின் அப் புகைப்படங்கள் இன்றளவும் வரலாற்றின் மிச்சங்கள். கசங்கிய பச்சைக் காகிதம் போல கைகால்கள் கட்டப்பட்ட நிலையில், அழுக்கடைந்த ஆடைகளுடன் “சே”வைப் பார்த்ததும், அவருக்கு அதிர்ச்சி.

**அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பனமான மாவீரன் :**

அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த ஒரு மாவீரனா இந்தக் கோலத்தில் இங்கே நாம் காண்பது என அவருக்கு வியப்பும் திகைப்பும்! பிடிபட்டிருப்பது “சே”தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக்கிறது. “சே”வின் டைரிகள் மற்றும் உடைமைகள் கைப்பற்றப்படுகின்றன.

தான் கொண்டுவந்த கேமராவில் “சே”வை பல கோணங்களில் புகைப்படங்கள் எடுக்கிறார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ்துவைப் போலக் காட்சி தரும் “சே”வின் அப் புகைப்படங்கள் இன்றளவும் வரலாற்றின் மிச்சங்கள்.

காலை 10.00 “சே”வை உயிருடன் வைத்துக்கொண்டு

*விசாரணை நடத்தினால், அது உலகம் முழுக்க அவர் மேல் பரிதாபத்தையும், நாயகத் தன்மையையும் உருவாக்கிவிடும் என்பதால், அவரை உடனடியாகத் தீர்த்துக்கட்டி விடுவதுதான் சரி என சி.ஐ.ஏவிடம் இருந்து தகவல் வருகிறது.*

*காலை 11.00 "சே"வைச் சுட்டுக் கொல்வது என முடிவெடுக்கப்படுகிறது. யார் அதைச் செய்வது எனக் கேள்வி வருகிறது. "மரியோ ஜேமி"* (Mario Jemy) *என்னும் பொலிவிய ராணுவ சர்ஜன் அக்காரியத்துக்காகப் பணியமர்த்தப்படுகிறார்.*

**மரியோ ஜேமி** (Mario Jemy)

*கைகள் கட்டப்பட்ட நிலையில், "சே"வை பள்ளிக்கூடத்தின் மற்றொரு தனியிடத்துக்கு மரியோ அழைத்துச் செல்கிறார். "முட்டி போட்டு உயிர் வாழ்வதைவிட நின்று கொண்டே சாவது எவ்வளவோ மேல்!" என்பார் "சே". ஆனால், மரியோ அவரை ஒரு கோழையைப் போலக் கொல்லத் தயாராகிறார்.*

**வீரனாய் வீழ்ந்த சே**

*தன்னை நிற்க வைத்துச் சுடுமாறு "சே" கேட்க, அதை அலட்சியப்படுத்துகிறார். "கோழையே, சுடு! நீ சுடுவது "சே"வை அல்ல ஒரு சாதாரண மனிதனைத்தான்!" இதயம் கிழிக்கும் விழிகள் மின்ன, உலகம் புகழும் மனிதன் சொன்ன கடைசி வாசகம் இதுதான்!*

*மணி 1.10 மனித குல விடுதலைக்காகத் தன் வாழ்நாளெல்லாம் போராடிய மாமனிதனை நோக்கி துப்பாக்கி குண்டுகள் பாய்கின்றது. ஒன்பது தோட்டாக்களில் ஒன்று, அவரது இதயத்துக்குள் ஊடுருவியது. இனம், மொழி, தேசம் என எல்லைகள் கடந்து பாடுபட்ட உலகின் ஒரே வீரன் இதோ விடை பெறுகிறான்.*

*சேவின் மார்புகளைத் தோட்டாக்களால் துளைத்தது. ஆனால் அந்த வீரனின் கண் இமைகள் அப்போதுகூட மூடிக்கொள்ளவில்லை. கண்கள் திறந்தபடியேதான் அவர் உயிர் அவரை விட்டுப் பிரிந்தது.*

*எந்த மண்ணிலோ பிறந்து எந்த மண்ணிற்காகவோ போராடி எந்த மண்ணிலோ துணிச்சலாக மரணத்தை சந்தித்த சே குவேரா இந்த யுகத்தின் ஒப்பற்ற தலைசிறந்த விடுதலைப்போராளி. எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்தான சே குவேரா, எல்லா யுகங்களிலும் ஒளிரும் புரட்சிமுகமானார்.*

## ஜமேக்கா – காலத்தை வென்ற பொப் மார்லி:

**காலத்தை வென்ற இசைக் குரலோன் பொப் மார்லி..**

**நிறவெறியை எதிர்த்து போராடிய கரீபிய கலைஞன்..**

**மனித நேயத்திற்காக குரல் கொடுத்த ஜமேக்கா பாடகன்..**



சுருள் சுருளாக இருக்கும் நீண்ட தலைமுடி, வாயில் சப்பிய புகையிலை, மென்மையான இளஞ்சிரிப்பு என இருக்கும் ஜமேக்காவைச் சேர்ந்த அந்த இசைக்கலைஞனின் முகம் சம்பந்தமே இல்லாத பலருக்கும் நெருங்கிய உணர்வை இசையாய் உள்ளத்தில் ஏற்படுத்தும்.

காலத்தை வென்ற இசைக் குரலோன் பொப் மார்லி, மக்களுக்கான விடுதலையை, மானுட அன்பை இசையின் வழியாக பாடிய அந்த இசைக்கலைஞனின் பிறந்த தினம் பெப்ரவரி 6.

மனித நேயத்திற்காக குரல் கொடுத்த ஜமேக்கா பாடகனை,

உலகம் முழுவதும் உள்ள இசைப் பிரியர்களுக்கு, குறிப்பாக இன்றைய இளைஞர்களுக்கும் பொப் மார்லியைப் (Bob Marley) பற்றிய அறிமுகம் அதிகம் தேவையில்லை.

வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மகனாகப் பிறந்த நெஸ்டா ராபர்ட் மார்லி என்ற இயற்பெயருடைய பொப் மார்லி இங்கிலாந்தைச் சேர்ந்த நார்வல் சிங்ளேர் மார்லி என்பவருக்கும் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த செடெல்லா என்பவருக்கும் பிறந்தவர்.

கலப்பு இனத்தில் பிறந்ததால் பொப் மார்லி ஹவொயிட் பாய்" என்று கேலியாக அழைக்கப்பட்டார். இப்படி அழைக்கப்பட்டது பின்னாளில் தனக்கென ஒரு தத்துவத்தை வளர்த்துக்கொள்ள உதவியது என மார்லி தெரிவித்துள்ளார். நான் வெள்ளையின மக்களின் பக்கமோ அல்லது கறுப்பின மக்களின் பக்கமோ இல்லை. நான் கடவுளின் பக்கம் நிற்கிறேன் என்பது தான் அந்த தத்துவம்.

### யார் இந்த பொப் மார்லி?

ஏன் பொப் மார்லியை உலகம் இந்தளவிற்கு கொண்டாடு கிறது? சேகுவேராவுக்கு அடுத்தபடியாக அதிகமான இளைஞர்களின் உடைகளில், நெஞ்சினில் பச்சை குத்தி இடம்பெறும் அளவுக்கு இளைய தலைமுறையை என்றும் கவர்ந்துள்ளார் எனலாம்.

பொப் மார்லியின் பாடல்களில் புதைந்திருக்கும் அரசியல் உணர்வு, விடுதலை வேட்கையே அதற்கான காரணங்களாகும். கரீபியன் தீவுகளின் சமூக மற்றும் அரசியல் நிலவரம் தொடர்பான அவரது வெளிப்பாடு சாதாரண தொழிலாளர் வர்க்கத்திலிருந்து பணக்காரர்கள் வரை ரசிகர்களை அதிகம் தேடித்தந்திருந்தது.

ஏன், தற்போதைய காலத்துக்கும் அவரது பாடல் வரிகள் பொருந்திப் போகின்றன. மார்லியின் பாடல்களில் பிரதிபலிக்கும் விடயங்கள் அனைத்தும் அவர் சிறு வயதில் கண்ணுற்ற சாட்சியங் களாகும்.

கருப்பு வெள்ளை தம்பதியினருக்கு 1945 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி ஜமைக்காவின் செயின்ட் ஏன் பாரிஸ், நைன் மைல் எனும் இடத்தில் பிறந்த பொப் மார்லி, பின்னாளில் உலகின் தலைசிறந்த பாடகனாக சரித்திரத்தில் இடம்பிடிப்பான் என கனவிலும் அவனது பெற்றோர்கள் நினைக்கவில்லை.

### காதலும் கஞ்சாவும் :

1966 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 இல் பாடகியான ரீட்டா எண்டர்சனை மார்லி திருமணம் செய்துகொண்டார். ரீட்டா மூலம்



ரஸ்தபாரி எனும் மதம் மார்லிக்கு அறிமுகமானது. ஜமேக்காவில் அதிக மாக கஞ்சா விளையும். அது ரஸ்தபாரி மதத்தில் புனிதப் பொருளாக பார்க்கப்பட்டது. மேலும் மூலிகையாகவும், தியான நிலைக்கு உகந்ததாகவும் கருதப்பட்டது. மார்லி மாமிசம் உண்பதை தவிர்த்து சைவ உணவுகளை உண்ணத் தொடங்கினார். 1966 இல் ஜமேக்கா திரும்பிய மார்லி மீண்டும் லிவிங்ஸ்டன், டொஸ் ஆகியோருடன் இணைந்துகொண்டு மீண்டும் தனது இசை பயணத்தை ஆரம்பித்தார்.

"ஐலண்ட்ஸ் ரெக்கோர்ட்ஸ்" அனுசரணையுடன் முதல் தடவை யாக முழு ஆல்பமொன்றை வெய்லர்ஸ் உருவாக்கினர். தீயைப் பிடி (Catch a Fire) என்ற பெயரிலேயே அந்த ஆல்பம் வெளிவந்தது. பிரித் தானியா, அமெரிக்கா சென்று இசை நிகழ்ச்சி நடாத்த இந்த ஆல்பம் உதவியது. பின்னர் அதேயாண்டு பர்னின் (Burnin) என்ற ஆல்பமும் வெளியிடப்பட்டது. இந்த ஆல்பத்தில் வரும் "I shot the Sheriff", "Get Up Stand UP" ஆகிய பாடல்கள் மிகவும் பிரபலமாகின. இந்தப் பாடல்கள் மூலம் சர்வதேச அங்கீகாரத்தை மார்லி பெற்றுக் கொண்டார். இவரது பாடல்களை இன வேறுபாடின்றி கேட்கத் தொடங்கினர். 'Get Up Stand Up" பாடலில் தங்களது உரிமைகளுக்காக எழுந்து போராடுங்கள் என கருப்பின மக்களைப்பார்த்து அரைகூவல் விடுக்கிறார்.

**உரிமைகளுக்காக எழுந்த பாடல்கள் :**

*எழுந்து நில்லுங்கள்*
*உங்களது உரிமைகளுக்காக...*
*வானத்திலிருந்து கடவுள் வந்து*
*அனைத்து துக்கங்களையும் எடுத்துக்கொண்டு*

சந்தோஷத்தை வழங்குவாரென்று
நீங்கள் அனைவரும் நினைப்பீர்கள்...
ஆனால்,
வாழ்க்கையின் பெறுமதியை புரிந்து கொண்டீர்களானால்
உங்களது வாழ்க்கையை இந்த பூமியில்தான் தேடுவீர்கள்...
அப்போது நீங்கள் வெளிச்சத்தைக் காண்பீர்கள்...

அதனால் எழுந்து நில்லுங்கள்... எனத் தொடரும் அப்பாடல் மூலம் நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு உலகம் பூராகவும் உள்ள ரசிகர்களை அவர்களது உரிமைகளுக்காக எழுந்து நிற்கவைக்க மார்லியால் முடிந்தது.

1975 இல் பொப் மார்லியும் வெய்லர்ஸும் (Bob Marly & the Wailers) என குழுவின் பெயர் மாற்றப்பட்டது. இந்தக் குழு ரெகே இசையை உலகம் பூராகவும் கொண்டுசேர்க்க கடுமையாக முயற்சி செய்தது. இதன் பலனாக "No Woman No Cry" என்ற பாடல் வெளியாகி மிகவும் பிரபலமானது.

உலகம் முழுவதும் கண்ணீர் சிந்தும் கோடிக்கணக்கான பெண்களுக்காக அவர் இந்த பாடலை இயற்றி பாடினார்.

தான் ஒரு கலப்பினத்தைச் சேர்ந்தவன் என தெரிந்திருந்தும் மார்லி தன்னை ஆபிரிக்க வம்சாவளிசைச் சேர்ந்த கருப்பினத்தவன் என்று அறிமுகம் செய்து அடையாளப் படுத்திக்கொள்ள விரும்பினார்.

வெள்ளையர்களால் அடிமைத்தனமாக கருப்பினத்தவர்கள் அடிமைப் படுத்தப்படு கின்றமையைக் கண்டதனாலேயே மார்லி இந்த முடிவுக்கு வந்தார். கருப்பு, வெள்ளை, என்ற அனைத்து இன மக்களும் மனிதன் என்ற அடிப்படையில் ஒன்று சேர்வதே மார்லியின் கனவாகும்.

**நிறவெறிக்கு எதிராக மார்லி:**

ஜமேக்காவில் நிறவெறிக்கு எதிராக போராடிய மார்க்ஸ் கிரேவின் அரசியல் செயற்பாடுகளுக்கு மார்லி உதவினார்.

ஆபிரிக்காவில் மட்டுமன்றி உலகம் பூராகவும் வாழும் நீக்ரோ மக்களின் வளர்ச்சி குறித்து மட்டுமன்றி ஆபிரிக்கா நீக்ரோ மக்களின் சுதந்திர பூமியாக விளங்கவேண்டும் என்ற இலக்குடன் பொப் மார்லி செயற்படத் தொடங்கினார்.

உலகநாடுகளில் இன்னல்களை அனுபவித்துவரும்நீக்ரோமக்களின்
விடிவிற்காக பாடல் ஒன்றையும் பொப் மார்லி பாடியுள்ளார்.
இரண்டாயிரம் ஆண்டுகள் கொண்ட வரலாற்றை
அவ்வளவு சீக்கிரம் அழித்துவிட முடியாது...
இரண்டாயிரம் ஆண்டுகள் கொண்ட கருப்பின மக்களின்

வரலாற்றைஅவ்வளவு சீக்கிரம் அழித்துவிட முடியாது...

'Zion Train' என்ற பாடலில் கருப்பின மக்களில் வரலாறு தொடர்பாக பாடியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் "Black Surviour', "Bady Lon System" ஆகிய பாடல்கள் மூலம் வெள்ளையர்கள் கருப்பின மக்களின் உழைப்பையும் உரிமைகளையும் சுரண்டுகின்றனர் என்றும், அதற்கு எதிராக எழ வேண்டும் என்றும் பொப் மார்லி மக்களிடம் விண்ணப்பித்துள்ளார்.

**மரணப் படுக்கையில் பொப் மார்லி:**

புற்றுநோயால் இறந்த பொப் மார்லி தன்னுடைய மரணக் கட்டிலில் இருந்தபோது மகனிடம், "பணத்தால் வாழ்க்கையை வாங்க முடியாது" என்றும் "On your way up, take me up. On your way down, don't let me down." என்றும் தெரிவித்தார். 1981 ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி பொப் மார்லி தனது 36ஆவது வயதில் அமெரிக்காவின் மியாமி நகரிலுள்ள வைத்தியசாலையொன்றில் மரணமடைந்தார்.

ஜமேக்கா மக்கள் பொப் மார்லியை ஒரு விடுதலைப் போராளியாகவே என்றும் கருதினர். 1981ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி இறுதிக் கிரியை அரச மரியாதையுடன் நடத்தப்பட்டு மார்லியின் பிறந்த இடமான நைன் மைல் பகுதியில் உடல் புதைக்கப்பட்டது. அத்தோடு, அவரது பிறந்த தினமான பெப்ரவரி 6ஆம் திகதி ஜமேக்காவில் தேசிய விடுமுறை தினமாக அரசால் 1990ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. ஜமேக்காவின் நைன் மைல் பகுதியில் பொப் மார்லி வாழ்ந்துவந்த வீடு பின்னர் மார்லியின் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது.

2018 -ம் ஆண்டு ஃபோர்ப்ஸ் (Forbes) இதழ் வெளியிட்ட தகவலின்படி, அதிக வருமானம் ஈட்டும் இறந்த பிரபலங்களின் பட்டியலில் பொப் மார்லி ஐந்தாவது இடத்தில் இருப்பதாக அறிவித்துள்ளது. கடந்த இருபது ஆண்டுகளில் மட்டும் பொப் மார்லியின் ஆல்பங்கள் 75 மில்லியனுக்கும் அதிகமாக விற்றுள்ளமை பொப் மார்லியின் இசைத்திறமைக்கு வரலாற்றுச் சாட்சியாகும்.

## அமெரிக்க கறுப்பின உரிமை:

### ஆபிரகாம் லிங்கன் முதல் BLM ஜார்ஜ் ப்ளாய்டு வரை..

### அமெரிக்காவில் நீண்டு தொடரும் நிறவெறி....




*2020 மே மாத இறுதியில் அமெரிக்காவில் தொடரும் நிறவெறியை வெளிச்சத்திற்கு இட்டுச் சென்ற "கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்" (Black Lives Matter) BLM ஏற்படுத்திய அதிர்வலை இன்னமும் அடங்கவில்லை. பல வருடங்கள் கடந்தும் இப்போரட்டம் இன்னமும் ஓயவும் இல்லை.*

*கருப்பின மக்களின் வாழ்வும் - வரலாறும் அமெரிக்காவின் உண்மையான ஜனநாயகம் என்பதனை சோதனைக்கு உட்படுத்தும் விடயமாகும். அமெரிக்க காவல் துறைக்கும், கருப்பினத்தவருக்கும் இடையிலான மோதல்கள் அமெரிக்க சமூகத்தின் ஒவ்வொரு*

அம்சத்திலும் ஊடுருவியியுள்ள ஆழமான, அமைப்பு ரீதியான இன ஏற்றத்தாழ்வுகளின் அடையாளமாகவும் விளங்குகிறது.

**முன்னைய அமெரிக்க ஜனாதிபதி**

ஆபிரகாம் லிங்கன் முதல் 2020 மே இறுதியில் உலகின் கவனத்தை ஈர்த்த "கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்"

(Black Lives Matter) BLM ஜார்ஜ் ஃப்ளாய்டு (George Floyd) வரை அமெரிக்காவில் தொடரும் நிறவெறியை வெளிச்சத்திற்கு இட்டுள்ளது. 3 வருடங்கள் கடந்தும், "கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்" (Black Lives Matter) BLM ஏற்படுத்திய அதிர்வலை இன்னமும் அடங்கவில்லை, ஓயவும் இல்லை.

முதன்முதலாக ஆப்பிரிக்கர்கள் அமெரிக்க நாட்டின் கடற்கரைக்குக் கொண்டு வரப்பட்ட 1619-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டு வரையிலான 349 ஆண்டு காலத்தில், கருப்பின மக்கள் தங்கள் முழுமையான குடியுரிமை உரிமைகளை கொள்கையளவில் 1968-ம் ஆண்டுதான் சமத்துவ வீட்டு வசதிச் சட்டத்தின் (Fair Housing act) மூலம் பெற்றனர்.

**சுட்டுக் கொல்லப்பட்ட ஆபிரகாம் லிங்கன்:**

அமெரிக்காவில் கறுப்பு இனத்தவர்களுக்கு எதிரான நிறவெறி என்பது பல நூற்றாண்டுகளாக நிலவி வருகிறது என்பதை அந்நாட்டின் வரலாறு தெளிவு படுத்துகிறது.

அமெரிக்காவின் மண்ணின் மைந்தர்களான செவ்விந்தியர்களை வந்தேறிகளான ஐரோப்பியர்கள் கூலி வேலை செய்வதற்காக ஆப்பிரிக்காவில் இருந்து கறுப்பின மக்களை அழைத்து வந்து அடிமைகளாக வேலை வாங்கி வந்தனர்.

அமெரிக்க வெள்ளையர்களால் சொல்லொணாக் கொடுமைகளுக்குக் கறுப்பின மக்கள் உள்ளாக்கப்பட்டனர். அதை எதிர்த்து ஆபிரகாம் லிங்கன்(1809-1865) குடியரசுத் தலைவரான பிறகு, 1865-ஆம் ஆண்டு அடிமை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

புகழ்பெற்ற அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் 1860ம் ஆண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரின் தேர்வுக்கு முன் வரை அமெரிக்காவில் அடிமை முறை நீண்ட காலமாக இருந்தது.

கறுப்பினத்தவரை மனிதச்சமூகமாக அங்கீகரிக்காமல் உழைப்புக்காக விற்கப்படும் முறைமையை அமெரிக்கா வைத்திருந்தது.

ஆபிரகாம் லிங்கனின் தலைமையிலான அரசு அடிமை



முறையை ஒழிக்க முதன்முறையாக முன்னெடுப்புகளை எடுத்த போது பெரும் கண்டனங்கள் எழுந்தன. இதன் காரணமாகவே ஜான் வில்சு பூத் எனும் வெள்ளையின வெறியனால், லிங்கன் சுட்டுக் கொல்லப் பட்டார். அதன் பிறகு நிறவெறி சற்றுத் தளர்ந்ததே தவிர, முற்றிலும் ஒழிந்து விடவில்லை.

ஆபிரகாம் லிங்கனின் தலையை துளைத்த தோட்டாவுக்கு பின்னால் நிறவெறி ஒடுக்குமுறையின் பாரிய வரலாறு இருக்கிறது. அந்த தோட்டாவை உமிழ்ந்த துப்பாக்கி இன்னும் புகை தணியாமல் இருப்பதற்கு இன்னும் பல சாட்சிகள் அச்சமூகத்தில் நேர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

**கறுப்பின உரிமைக்காக போராடிய மார்டின் லூதர் கிங்:**

கறுப்பினப் பாதிரியாரான மார்டின் லூதர் கிங் (1929-1968) கறுப்பின மக்களின் உரிமைக்காக அறவழியில் போராடினார். அவரும் வெள்ளை அமெரிக்கனால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதன்பின்

மால்கம் ஓ (1925 -1965) எனும் கறுப்பினப் போராளி நிறவெறிக்கு எதிரான மிகத் தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்தார். அவரும் இறுதியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மார்ட்டின் லூதர் கிங் படுகொலை செய்யப்படுவதற்கு சரியாக 7 மாதங்களுக்கு முன்பு, 1967-ம் ஆண்டு வாசிங்டனில் உள்ள அமெரிக்க உளவியல் கழகத்தின் ஆண்டுக் கூட்டத்தில் பேசிய உரை முக்கிய மானது. அங்கு அவரது உரையில், வெள்ளை அமெரிக்கா தனது ஆன்மாவிலேயே இனவெறியால் நஞ்சூட்டப்பட்டுள்ளதை அது புரிந்துகொள்ள வேண்டும். அந்த புரிதல்கள் கவனமாக ஆவணப்

*படுத்தப்பட வேண்டும் என்றும், கலகங்கள்தான் புறக்கணிக்கப் பட்டவர்களின் மொழியாக எழுகிறது என்பது டாக்டர் மார்டின் லூதர் கிங்கின் வார்த்தையாக முக்கியத்துவம் பெற்றது.*

**கலகங்களே புறக்கணிக்கப் பட்டவர்களின் மொழி :**

*கலகங்கள்தான் புறக்கணிக்கப் பட்டவர்களின் மொழி என்பது டாக்டர் மார்டின் லூதர் கிங்கின் வார்த்தை. பகலில் அமைதியாக நடக்கும் அணிவகுப்புகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள், இரவில் மட்டும் ஏன் வன்முறை வெறியாட்டங்களாக, பொதுச் சொத்தை சூறையாடு வதாக இருக்கின்றது என்பதை வெளிக்காட்ட முயற்சிக்கும் மேற்குலக ஊடகங்களில் மார்ட்டின் லூதர் கிங்கின் வார்த்தைகள் தொடர்ச்சியாக பயன்படுத்தப் படுகின்றன.*

**அமெரிக்க இனவெறி இயக்கம்:**

*கறுப்பின மக்களை அமெரிக்காவிலிருந்து முற்றிலும் ஒழித்துக்கட்ட வேண்டி, அமெரிக்காவில் தோன்றிய கூ கிளக்ஸ் கான் (Ku Klux Khan - KKK) எனும் வெள்ளை இனவெறி இயக்கம் 1860 ஆம் ஆண்டில் நாதம் பெட்போர்டு பாரஸ்டு என்பவரால் டென்னிசி மாகாணத்தில் முதன்முதலாகத் தொடங்கப்பட்டது.*

*அத்துடன் வெள்ளைத் தேசியத்தை (White Nationalism) உயர்த்திப் பிடிக்க வேண்டும், நூறு வீதம் "தூய்மையான" அமெரிக்காவை உருவாக்க வேண்டும் என்பன இந்த நவீன நாஜி இயக்கத்தின் முக்கியக் கொள்கைகளாக இருந்தன.*

*இந்த வலதுசாரித் தீவிரவாத இயக்கம் தனது நோக்கத்தை நிறை வேற்ற வன்முறையே ஏற்றது என முடிவெடுத்து, கடந்த பல ஆண்டு களாக எண்ணற்ற கறுப்பின மக்களைப் படுகொலை செய்துள்ளது.*

*கறுப்பின மக்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்துவது, அவர்களது வழிபாட்டிடங்களை நாசப்படுத்துவது, ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் கல்வி, மருத்துவம், பொருளாதாரம் போன்றவற்றை முடக்குவது, அவர்களின் ஓட்டுரிமையைப் பறிக்கும் முயற்சிகளைத் தீவிரமாக முன்னெடுப்பது போன்றவை அவர்களது வழிமுறைகளாக இருந்தது.*

**நிறவெறிக்கு எதிரான போராட்டங்கள்:**

*கே கே கே இயக்கம், அமெரிக்காவைக் கடந்து கனடா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இப்பொழுது செயல்பட்டு வருகிறது. இதனாலேயே எண்ணற்ற*




கறுப்பினத் தலைவர்கள், அமெரிக்காவில் நிலவும் வெள்ளையின நிற வெறிக்கு எதிரான தீவிரப் போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளனர். இருப்பினும், 33 கோடி மக்கள் தொகையுள்ள அமெரிக்காவில் 76% வெள்ளை இனத்தவர்கள், 14%கறுப்பு இனத்தவர்கள், ஆசிய நாட்டினர் 6%, பல்வேறு நாட்டினர் 3% எஞ்சியுள்ள 1% பழங் குடியினர் என்பதான விகிதத்தில் மக்கள் வாழ்வதால், அமெரிக்காவின் மரபணுவிலேயே வெள்ளை இனவெறி ஊன்றிக் கிடக்கிறது.

எனவே கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு, வாழ்விடம், பொதுவெளி என அனைத்துக் கூறுகளிலும் வெள்ளை இனத்தவர் களுக்கும், கறுப்பு இனத்தவர்களுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் இடையேயான வேறுபாடு நிலவுகின்றதை காணலாம்.

**ஜார்ஜ் பிளாய்டு -கறுப்பு உயிர்கள் பொருட்டு: (Black Lives Matter)**

அமெரிக்காவின் மின்னபோலிஸ் நகரில் 2020 மே மாதம் 25-ம் தேதி ஆயுதம் ஏதும் வைத்திராத கருப்பினத்தைச் சேர்ந்த ஜார்ஜ் ஃப்ளாய்ட் என்ற நபர் போலீஸ் காவலில் இறந்தார். ஃப்ளாய்ட் இறந்த பிறகு, வெள்ளையினத்தைச் சேர்ந்த போலீஸ் அதிகாரி டெரக் சாவின் என்பவர் கீழே தள்ளப்பட்ட ஃப்ளாயிட் கழுத்தில் கிட்டத்தட்ட 9 நிமிடங்கள் மிதித்து அழுத்துவதைக் காட்டும் வீடியோ வெளியானது.

இந்தப் பின்னணியில் தான் ஜார்ஜ் பிளாய்டு, நிறவெறிக் காவலர்களால் ஈவு இரக்கமின்றிக் கொல்லப்படும் காணொலியைக் கண்டு உலகெங்குமுள்ள மக்கள் கடுங்கோபத்திற்கு உள்ளாகினர்.

உலகெங்கும் இந்தப் படுகொலைக்கு எதிராக வெள்ளை இனத்தைச் சார்ந்த எண்ணற்றோர் வீதியில் அணிதிரண்டது பெரும்

திருப்பு முனையாக அமைந்தது. அமெரிக்காவில் கறுப்பினத்தவராகப் பிறப்பது, கொல்லப்படுவதற்கான தகுதி அல்ல என இப்படு கொலையைக் கண்டித்து மினியோ பொலிசு நகரவைத் தலைவர் ஜேகப் பிரே எனும் வெள்ளையர் கண்டனம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நிறவெறிக்கு எதிராக இன மதம் கடந்த போராட்டம் அமெரிக்காவில் குடும்பம் குடும்பமாக குவிந்த மக்கள் ஜார்ஜ் ஃப்ளாய்ட் என்ற கருப்பினத்தவர் அமெரிக்காவில் போலீஸ் காவலில் கொல்லப்பட்டதற்கு எதிராக தொடங்கிய போராட்டம் மூலம் நீண்ட காலமாக தொடர்ந்தது.

கறுப்பு உயிர்கள் பொருட்டு அமைப்பு: (Black Lives Matter)

தற்போது கறுப்பு உயிர்கள் பொருட்டாகும் (Black Lives Matter) எனும் அமைப்பும், "பாசிச எதிர்ப்பு" (Antifa) இயக்கமும் நிறவெறிக்கு எதிரான இப்போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. பிளாய்டின் உயிர்த்தியாகம் வீணாகி விடக் கூடாது என்ற மன உறுதி யோடு மக்கள்திரள் போராட்டங்களை இவை ஒருங்கிணைக்கின்றன.

"கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்" என்பது ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் பன்னாட்டு இயக்கமாகும். 2013 ஆம் ஆண்டில் அரசுவன்முறை மற்றும் கட்டமைப்பு நிறவெறிக்கு (Structural Racism) எதிராக மூன்று கறுப்பினப் பெண் செயல்பாட்டாளர்களால் இது உருவாக்கப்பட்டது.

கறுப்பினத்தவர் அடிமைகளாக இருக்க வேண்டியதில்லை என அறிவித்ததற்காகவே ஆபிரகாம் லிங்கன் கொல்லப்பட்டார். அமெரிக்காவில் கறுப்பினத்தவருக்கு சுதந்திரம் வழங்கப் பட்டிருந் தாலும், அதை வழங்கியதற்காகவே ஒரு மாபெரும் தலைவர் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதையும் சேர்த்துதான் அமெரிக்க சமூகத்தை அவதானிக்க வேண்டியிருக்கிறது.

ஆபிரகாம் லிங்கனின் தலையை துளைத்த தோட்டாவுக்கு பின்னால் நிறவெறி ஒடுக்குமுறையின் நீண்ட வரலாறு இருக்கிறது. அந்த தோட்டாவை உமிழ்ந்து துப்பாக்கி இன்னும் புகை தணியாமல் இருப்பதற்கு இன்னும் பல சாட்சிகள் அச்சமூகத்தில் நேர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

அமெரிக்காவில் தொடரும் நிறவெறியை வெளிச்சத்திற்கு இட்டுச் சென்ற "கறுப்பு உயிர்கள் பொருட்டாகும்" (Black Lives Matter) BLM ஏற்படுத்திய அதிர்வலை இன்னமும் அடங்கவில்லை, மூன்று வருடங்கள் கடந்தும் இப்போரட்டம் இன்னமும் ஓயவும் இல்லை.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி : டாக்டர். காந்தி

நெஞ்சம் மறக்குமா
நண்பா காந்தி
உனை எண்ணிப்பார்க்கும்
வேளையில் - எம்
நெஞ்சே நெருடுகிறது
நண்பா !!

காலம் மறக்குமா உம்
நட்பை
இனிக்க இனிக்க வந்து மொஸ்கோவின் குளிர்பனியிலும்
என்றுமாய் பிரியங்கொண்டாய்
காந்தி..

புன்முறுவல் பூக்கும் உந்தன்
கள்ளமில்லா உன் முகத்தை
எப்படி நாம் மறப்போம் !!!
ஆடிப்பாடி வெண்பனிச்
சுவடுகளில்
மகிழ்ந்து முகிழ்ந்தோமே
மறப்போமா அந்த நாட்களை !!

போய்வா நண்பா
மீள ஒரு பனிபடரும்
லுமும்பாவின்
குளிர்கோடையில் மீள நாம் சந்திப்போமே !!!

காந்தி – நீ ஒருமுறை
மரணித்தாய் இனி
உன்நினைவுகள் வரும்
நேரங்களில் – நாம்
ஒவ்வொரு முறையும்
மரணிப்போமே .....

காந்தி –
நீ எம்மைவிட்டு செல்லவில்லை
எம்நினைவுகளில் பூரணமாய்
தங்கிவிட்டாய் .

– வலி தரும் வரிகளோடு
ஐங்கரன் விக்கினேஸ்வரா

எப்பொழுதும் மிகவும் மகிழ்ச்சியான புன்னகையுடன் இருக்கும் டாக்டர் காந்தியை நாங்கள் என்றும் நினைவில் கொள்கிறோம். நாங்கள் மாஸ்கோவில் படித்தபோது, டாக்டர் காந்தியின் அன்பான வரவேற்பு சுவையான உபசரிப்பை யாரும் மறக்க மாட்டார்கள்.

குறிப்பாக மாஸ்கோ லுமும்பா பல்கலைக்கழகத்தில் "улица Микалауа Маклауа" வாழ்ந்த நண்பர்களின் மனதில் என்றும் எங்கள் நினைவில் இருக்கிறார்.



## அண்ணா என்று அழைத்தால் காந்தி அண்ணா!

காந்தி அண்ணா!
அண்ணா என்று அழைத்தால் அது நீ!

Dr காந்தி!
Dr என்று அழைத்தால்
அது நீ!

புன்னகை மன்னன்
என்று அழைத்தால்
அது நீ !

புரியாத ஒரு வித புதிய புதுக்கவிதை
அது நீ!

உன் வீட்டார் போல் நடு வீட்டில் இருந்து
உறவினர் ஒருவர் போல்
இருப்பதும்
அதுவும் நீ!

என் ஆசையம்மாவுடன் டாக்டராகி வேலை செய்தாய் நயினையிலும் கூடவே எழுவையிலும்
அது வும் நீ!

**சந்திரிகா**

## பின் இணைப்பு: 3

### Dr. காந்தி நினைவாக தம்பலகாமம் பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்:

தம்பலகாமம் மக்கள் நலன் காப்பகத்தினூடாக, அவுஸ்திரேலியா சிட்னியில் வசிக்கும் திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா என்பவரால், அவரது நண்பரான பருத்தியடைப்பு ஊர்காவற்துறையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி, அமரர் கதிரேசு முருகதாஸ்காந்தி அவர்களின் 1 ம் ஆண்டு நினைவு நாளை நினைவு கூருமுகமாக, தம்பலகாமம் மேற்கு கொலனி 98 ஆம் கட்டை - சிவசக்திபுரம் தமிழ் பாடசாலையின் பல மாணவர்களுக்கு, பெறுமதியான புத்தகப்பை, கொப்பிகள், பென்சில், பேனா, கொம்பாஸ் போன்ற கற்றல் உபகரணங்கள் 14.10.2019 வழங்கப்பட்டது.








உங்கள் பணி மென்மேலும் சிறப்பாக விளங்க எமது நல்வாழ்த்துக்கள்.

இத் திட்டத்துக்கு நிதி வழங்கிய ஐங்கரன் விக்கினேஸ்வரா அண்ணாவுக்கும், ஆதரவு தந்துதவிய மக்கள்நலன் காப்பக மேலாளர்களுக்கும், இதற்கான ஒழுங்கமைப்புக்களை, திறமையாகவும், அர்ப்பணிப்புடனும், விரைவாகவும் செய்து தந்த தம்பலகாமம் திரு. குகன் அவர்களுக்கும், சிவசக்திபுரம் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் திரு. சுஜாந்தனுக்கும், பாடசாலை அதிபருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுக்களும்.

## சிவசக்திபுரம் தமிழ் பாடசாலை



## எங்கள் மனங்களை அன்பால் வென்ற காந்தி அண்ணா !

ரஷ்ய மக்கள் நட்புறவு பல்கலை கழகத்தின் (Russian Peoples Friendship University- Patrice Lumumba) மருத்துவ மாணவர் விடுதி (9th block 404) கதவு எப்பொழுதும் திறந்தே காணப்படும். அவ்வறையினில் புன்னகை பூத்த முகத்துடன் காந்தி அண்ணா என்றும் வீற்று இருப்பார்.

எல்லோரையும் வரவேற்று உபசரிப்பதில் அவரிக்கு நிகர் யாரும் கிடையாது. 1995 ம் ஆண்டு மருத்துவ படிப்பிற்காக PFUஇற்க்கு தமிழ் மாணவர்கள் வந்து இருக்கிறார்கள் என்று அறிந்தவுடன் எம்மை தேடிவந்து அன்னை போல் எம்மை அரவணைத்து ஆதரவு தந்த இனிய நண்பர் இன்று எம்முடன் இல்லை என்பதை எம்மனம் ஏற்கமறுக்கிறது.

தன்னை நாடிவந்து உதவி கேட்ட எல்லோருக்கும் தன்னலம் பாராது உதவிபுரிந்த உத்தமர். கல்வியறிவிலும் நன்றே சிறந்தே விளங்கினார். பசி என்று உரைத்தல் உடனே கையால் சமைத்த உணவளிப்பார். அந்த உணவு அமிர்தம் போல் இனிக்கும்.

விடுமுறை நாட்களில் காந்தி அண்ணாவின் அறையில் நாம் எல்லோரும் ஒன்றுகூடிய இனிய நாட்கள் எம்மன கண் முன்னே இன்றும் விரிகிறது. நயினாதீவினில் மருத்துவராய் கடமையாற்றிய காலத்தில் காலன் உம்மை பறித்தானே.

உங்கள் ஆத்மா சிவபெருமானின் பாதார விந்தங்களில் சாந்தி பெற வேண்டுகிறேன்.

Dr. ம.சுந்தரேசன்
இலண்டன்.





“இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்” என்ற தலைப்பிலான இந்தக் கட்டுரைத் தொகுப்பு நூல் அமெரிக்காவின் கொல்லைப் புறம் என வர்ணிக்கப்படும் தென் அமெரிக்காவில் நடைபெற்ற சாமானிய மக்களின் போராட்டங்கள் பற்றிப் பேசுகின்றது.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை பன்னாட்டு அரசியல் தொடர்பிலான அவர்களது அக்கறை வெகு சொற்பமே. அது தொடர்பில் எழுதுகின்ற ஊடகர்களும், பத்தி எழுத்தாளர்களும் கூட தமிழில் வெகு சொற்பமானோரே.

ஆனால், ஈழப் போராட்டம் பன்னாட்டு அரசியல் தொடர்பான ஒரு புதிய வாசலைத் திறந்து வைத்தது. அதன் பிற்பாடே ஈழத் தமிழர்கள் உலக அரசியலில் ஓரளவேனும் அக்கறைப் காட்டத் தொடங்கினார்கள். புதிய பத்தி எழுத்தாளர்கள் உருவாகினார்கள்.

நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா பன்னாட்டு அரசியல் தொடர்பில் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருக்கும் ஒருவர். வாரத்திற்கு ஐந்து, ஆறு கட்டுரைகளையேனும் எழுதிவிடும் ஆற்றல் கொண்டவராக அவர் உள்ளார். அதற்கான தேடல், வாசிப்பு என்பவற்றுக்கு அவரால் நேரம் ஒதுக்க முடிகின்றது. உண்மையில் இது ஒரு சாதனையே.

இந்த நூலில் தென்னமெரிக்க நாடுகளில் நிலவும் அரசியல் சூழலையும், மக்கள் போராட்டங்களையும், அவற்றின் பின்னணியையும் ஓரளவு அறியத் தருகின்றன.

முப்பது ஆண்டு காலமாக இன விடுதலைக்காகப் போராடிய ஈழத் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டிய அரிய தகவல்கள் பல இந்தக் கட்டுரைத் தொகுப்பில் உள்ளன. ஒவ்வொரு ஈழத் தமிழரும், குறிப்பாக அரசியல் பின்புலம் கொண்ட யாவரும் வாசிக்க வேண்டிய நூல் இது.

– சண் தவராஜா

ISBN 955524963-6